
# முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**முரண்பாடுகள் முற்றிய**
**அரபுலகின் தேசிய இனங்கள்**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

முதற்பதிப்பு: 2024 ஆடி

© ஐங்கரன் விக்கினேஸ்வரா

வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 104

விலை: 500.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Muranpadukal Mutriya**
**Arabulakin thesiya inankal**

Ainkaran Wigneswara

First Edition: 2024 July

© Ainkaran Wigneswara

Layout : K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 104

Price: 500.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN : 978-955-0958-95-5

ஜீவநதி வெளியீடு – 371

## சமர்ப்பணம்



## அமரர். வைத்தியலிங்கம் துரைச்சாமி

**மலர்வு: 30.06.1925** **உதிர்வு: 18.04.2023**

**தலைமை ஆசிரியர்,**
**யாழ். பரியோவன் கல்லூரி கனிஷ்ட பிரிவு**
**(Jaffna St.Johns College, Lower School Head Master)**

# பொருளடக்கம்

1. யாசீடி – அழிக்கப்படும் ஆதி இனம்

2. குர்திஸ்தான் – குமுறும் எரிமலையாக

3. அசேரியா – பண்டைய நாகரீகத்தின் அடையாளம்

4. பாலஸ்தீனம் – பட்டினியை எதிர் நோக்கும் அவலம்

5. யேமன் – தொடரும் அரபு நாடுகளின் ஆதிக்க போர்

6. துனிசியா – மல்லிகைப் புரட்சியா அன்றில் கிளர்ச்சியா?

7. ஈரான் – புதிய கலாச்சாரப் புரட்சி

8. பலூஜா – ஈராக்கில் இன்னொரு “மைலாய்” படுகொலை

9. ஈராக் – அமெரிக்க ஆக்கிரமிப்பின் கோரம்

10. லிபியா – ஆட்சி கவிழ்ப்பும் தொடரும் உள்நாட்டுப்போர்

11. ஹிஜாப் – பெண் உரிமையும் எதிர்ப்பு போராட்டங்களும்

12. ஹவுதி – பிராந்திய ஆதிக்க விளைவு

13. சிரியா – அழிவின் அகோரத்தில் அரபு வசந்தம்

14. சவுதி – ஈரான் : திரை மறைவு போர்

# முன்னுரை:

## தேசியப் போராட்டச் செயற்பாடுகளில் எழுத்துப் பணியும் ஆவணப்படுத்தலும்:

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர் கொண்டு வந்த இன ஒடுக்கு முறைகளுக்கு எதிராக எழுபதுகளிலும் எண்பதுகளிலும் எழுச்சி கொண்ட இளையவர்கள் பலர் பல்வேறு அமைப்புக்கள் ஊடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் தமது எதிர்ப்பினையும் போராட்டத்தையும் முன்னெடுக்கலாயினர்.

அவ்வகையில் எண்பதுகளில் தனது மாணவப் பருவத்தில் தேசியப் போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியவர்களில் ஒருவர் ஐங்கரன் விக்கினேஸ்வரா.

எழுத்துப் பணிகள், ஆவணப்படுத்தற் பணிகளில் அதிகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவரது பல கவிதைத் தொகுப்புக்கள் 1980களின் இறுதியில் வெளியாயின. இவற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பை நினைவு கூர்ந்து வெளியான "அணையாத அறிவாலயம்" பரந்த கவனம் பெற்ற தொகுப்பாகும்.

அக்காலத்தில் இந்திய அமைதிப் படையினருடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்ட பரியோவான் கல்லூரி மாணவனான அகிலன் நினைவாக அகிலனின் எழுத்துக்களைத் தொகுத்து "மரணம் வாழ்வின் முடிவல்ல" என்ற நூலாக ஐங்கரன் வெளியிட்டமை அவரது ஆவணப்படுத்தற் பணிகளில் ஒன்று மட்டுமே. அக்கலாத்தில் அவர் தொகுத்திருந்த வேறு பல ஆவணங்கள் வெளியாகாமலே அழிந்து போயின.

வெளியான இன்னொரு நூல் அச்சகத்திலிருந்து ஒரு பிரதி கூட எஞ்சாமல் எரித்து அழிக்கப்பட்டமை அக்கால நிலைமைகளுக்கு ஒரு சான்று எனலாம்.

ஐங்கரன் ரஷ்யாவில் படித்துக் கொண்டிருந்த 2000ஐ அண்மைய காலங்களில் வேறு சில கவிதைத் தொகுப்புக்களையும் வெளியிட்டிருந்தார். ஆனால் அதன் பின்னர் சுமார் 20 ஆண்டுகள் அவர் அதிகம் எழுதவில்லை. எழுதியவையும் கூடத் தொகுக்கப்படவில்லை.

அண்மைய ஆண்டுகளில் அவர் மீண்டும் தொடர்ச்சியான எழுத்துப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தியுளார்.

அவரது கவிதைத் தொகுப்புக்களை எனது மாணவப் பருவத்திலேயே அறிவேன் என்ற போதும் நூலக நிறுவனத்துக்கு நிதியுதவியும் ஆவணங்கள் வழங்கியும் அவர் சில ஆண்டுகளின் முன்னர் பங்களிக்கத் தொடங்கிய போதே

அவருடன் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ்வாறு உரையாடுகையில் அவரது கட்டுரைகளையும் உதிரியாக உள்ள எழுத்துக்களையும் அவர் தொகுத்து நூல்களாக வெளியிட்டு ஆவணப்படுத்த வேண்டிய தேவை குறித்தும் உரையாடியிருந்தாம். அவ்வகையில் அவரது நூல்கள் இவ்வாண்டு வெளியாகின்றமை மகிழ்ச்சி தருவதாகும்.

ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலும், இலத்தீன் அமெரிக்காவிலும், தென்னாசியாவிலும், இந்தியாவிலும், அரபுலகிலும் என ஒடுக்கப்படும் பல்வேறு தேசிய இனங்கள், அவற்றின் விடுதலைப் போராட்டங்கள் தொடர்பாக ஐங்கரன் எழுதிய பத்தி எழுத்துக்கள் பொருத்தமாகத் தொகுக்கப்பட்ட நூல்களாக வெளியாகின்றன.

அவற்றில் ஒன்றான அரபுலகின் தேசிய இனங்கள் தொடர்பான நூலுக்கு இந்த முன்னுரையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐங்கரன் தனது ஏனைய எழுத்துக்களையும் தொகுத்து வெளியிடவும் அவரது எழுத்து, ஆவணமாக்கற் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!

**தில்லைநாதன் கோபிநாத்**
**நூலக நிறுவனம்**

## என்னுரை :

# முற்றுப்பெறாத அரபுலக முரண்பாடுகள்:

காலனித்துவ ஆதிக்கத்தின் பின்னரும் அரபு நாடுகளில் பல தேசிய இனங்கள், குறிப்பாக சிறுபான்மை இனங்கள் அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. உலக அரங்கில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் காலங் காலமாக முனைப்புப் பெற்று வந்துள்ளன.

இவ்வகையில் அரபுலகில் ஆதிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடும் இனங்களின் வரலாற்று ரீதியிலான தரவுகளை மையப்படுத்தி, “முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்” இந்நூல் வெளியாகிறது.

தமது சுயநிர்ணய உரிமைக்காக, சுதந்திரத்திற்காகப் போராடும் அரபு நாட்டு சிறுபான்மை இனங்களின் போராட்டங்களை உள்ளடக்கி வெளியாகும் “முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்” என்ற இந்நூலில் யாசிடி, அசேரியா, குர்திஸ்தான், யேமன், சிரியா, லிபியா, துனிசியா, ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் நிகழும் போராட்ட வரலாற்றை, நிகழ்கால தரவுகளுடன் ஒப்பீடு செய்கிறது.

அரபு நாடுகளில் ஒவ்வொரு தேசிய இனங்களும் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடு இருக்கின்றன. தனக்கென தனி அரசுகளை அமைத்துக் கொள்ளும் போராட்டங்களை இன்னமும் நடத்திக் கொண்டிருக்கின்றன.

உலகெங்கிலும் நிகழும் சிறுபான்மை இனங்களின் தேசிய சுயநிர்ணய போராட்டங்களை நீண்ட காலமாக ஆய்வு செய்து வரலாற்றுத் தகவல்களுடன் இந்நூல் எடுத்துரைக்க முயல்கிறது.

பூலோக அரசியல் காரணிகளின் விளைவாக எழுந்த எழுச்சிகளின் விளைவாக உருவாகிய போராட்டங்கள் , தற்போது பெரும்பான்மை, சிறுபான்மை அடக்குமுறைகள் ஊடகவும் இப்போராட்டங்கள் எழுந்துள்ளதை நாம் அவதானிக்கலாம்.

முரண்பாடுகள் பல முற்றிய அரபுலகில் சிறுபான்மை இனங்களின் தேசிய எழுச்சிப் போராட்டங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டை கடந்தும் தொடர்கிறது. இந்த உண்மையின் யதார்த்தத்தை பல தரவுகளுடன் இந்நூலில் வெளிப்படுத்த முயன்றுள்ளேன்.

1990களில் இருந்து “சர்வதேச வரலாற்றுப் பார்வையில் தேசிய இனமுரண்பாடுகள்” எனும் தொடர் தலைப்பில் நான் எழுதிய கட்டுரைகள்

ஐரோப்பிய, தாயக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகின. இக்கட்டுரைகளின் மூன்றாவது பாகமே இந்நூலாகும். இந்நூலாக்கத்தில் பயணித்த அனைவருக்கும் மிக்க நன்றிகளுடன்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



# யாசீடி– அழிக்கப்படும் ஆதி இனம் :

**காலங்காலமாக தொடரும் "யாசீடி" மக்களின் அவலநிலை..**
**நூற்றாண்டுகளாக வரலாற்றில் தொடரும் இனப்படுகொலை..**

ஈராக்கில் சிறுபான்மை இனமான யாசீடி மக்கள் (Yazidi) பல நூற்றாண்டுகளாக, அவர்கள் மீதான அகோரமான கொடுமைகளையும் பல இனப்படுகொலைகளையும் எதிர்கொண்டனர். காரணம் அவர்களின் மாறாத இன - மத நம்பிக்கைகள் தான்.

இன்று வரை, அவர்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் மரபுகளில் மாற்றத்திற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் தொடர்ந்து வலுவாக இருக்கிறார்கள் என்பதேயாகும். அதனாலேயே உலகில் விரைவாக அழிக்கப்படும் ஆதி இனமாகி உள்ளனர்.

**சிறுபான்மையின யாசீடி மக்கள் :**

*இனப்படுகொலை (Genocide) ஓர் இனத்தை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ, மனித இனம் சார்ந்த, இன ஒதுக்கல், சமய வேற்றுமை அல்லது தேசிய இன வேற்றுமை போன்ற காரணங்களால் கொல்ல நினைப்பது அல்லது அழிப்பது.*

*யாசீடி மக்கள் குர்தி மொழி பேசுகின்ற ஓர் இனக் குழுவினர் ஆவர். இவர்கள் சியா, சூபி இசுலாமியச் சமயங்களின் கூறுகளை உள்ளடக்கிய நாட்டுப்புற மரபுகளுடன் கலந்த சமரச சமயத்தை பின்பற்றுகின்றனர். யாசீடி மக்கள் ஈராக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் சிறுபான்மை இனமாவர்.*

*உலகில் மொத்தம் 15 இலட்சம் யாசீடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் வட ஈராக்கின் சிஞ்சார் மலைப் பகுதியிலும் அதைச்சுற்றியுள்ள நகரங்களிலும் வாழ்கின்றனர். யாசீடி இன மக்களில் ஈராக்கில் 850000, ஜேர்மனியில் 200000, சிரியாவில் 50000, ரஷ்சியாவில் 70000, ஆர்மீனியாவில் 60000, ஜோர்ஜீயாவில் 20000 சுவீடனில் 7000பேர் வாழ்கின்றனர்.*

**பல நூற்றாண்டு ஒடுக்குமுறை :**

*யாசீடி மக்கள் இனரீதியாக இவர்கள் குர்துக்கள் ஆவர். இவர்கள் பெரும்பாலும் தொன்மைய அசிரியாவின் பகுதியாகவிருந்த வடக்கு ஈராக்கின் நினேவெ மாநிலத்தில் நீண்ட காலமாக வாழ்ந்தனர்.*


*ஐரோப்பாவிற்கு, குறிப்பாக ஜெர்மனிக்கு இவர்கள் குடி பெயர்ந்ததை அடுத்து ஆர்மீனியா, ஜோர்ஜியா மற்றும் சிரியா நாடுகளில் இவர்களது மக்கள்தொகை 1990களிலிருந்து வெகுவாக குறைந்துள்ளது.*

*யாசீடி மக்களை "சாத்தானை வழிபடுவோர்" என பல நூற்றாண்டுகளாக ஈராக்கில் ஒடுக்கி வந்துள்ளனர். இத்தகைய ஒடுக்குதல் ஈராக்கில் முன்னர் சதாம் உசேனாலும் பின்னர் அடிப்படைவாத இஸ்லாம் புரட்சியாளர்களாலும் இன்னமும் தொடர்கின்றது.*

**ஒட்டோமன் பேரரசின் படுகொலைகள்**

*18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஒட்டோமன் பேரரசின் போது யாசீடிகளுக்கு எதிராக பலமுறை படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன.*

*19ம் நூற்றாண்டில் அவர்கள் ஒட்டோமான் மற்றும் உள்ளூர் இலக்குகளாக இருந்தனர். மத வன்முறையின் கொடூரமான பிரசாரங்கள் தொடர்ந்தன. கொடூரமான தாக்குதல்கள் காரணமாக, யாசிடிகள் தொலைதூர மலைப் பகுதிகளில் உள்ள கோட்டைகளில்*




தஞ்சம் குவிந்தனர். மேலும் இன - மதத் துன்புறுத்தலில் இருந்து அவர்கள் தப்பிக்க ஒரு வழியாக தற்கொலையும் செய்தனர்.

யாசீடி இனத்தவர்கள் மற்றவர்களால் கடுமையாக ஒடுக்கப் பட்டு படுகொலை செய்யப்பட்டாலும் கூட இந்த மக்கள் தங்கள் மதநம்பிக்கையை விட மறுக்கின்றனர். வேறு மதத்திற்கு மாறவும் மறுக்கின்றனர். இவர்கள் மதத்திற்கு மற்றவர்கள் மதம் மாறுவதையும் விரும்புவதில்லை, ஆதரிப்பதுமில்லை. இந்த இனத்தவர்கள் பிறருடன் திருமண உறவும் கொள்வதில்லை. எனவே இவர்கள் அழிக்கப்பட்டால் இந்த இனம் கிளைப்பதற்கோ வளர்வதற்கோ வாய்பே இல்லை என்பது கவலைக்கு உரியதே.

**2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல் :**

ஈராக்கில் ஆகஸ்ட் 2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல் யாசிடி சமூகத்தின் மையப்பகுதியான சின்ஜார் மலையின் அடிவாரத்தில் தொடங்கியது. அவர்கள் யாசிடிகள் அரசியல்-மத நிலையில் வரவேற்கப்படுவதில்லை.

2007 இல் அவர்கள் அதிகம் புழங்கும் பகுதிகளில் குண்டு வைத்து 800க்கும் மேற்பட்ட யாசீடிக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் 2014 இல் ஐ. எஸ். இயக்கத்தினரால் இவர்களில் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தப்பியோடியவர்களில் சுமார் ஐம்பதாயிரம் பேர் வரை ஐ. எஸ். அமைப்பினரால் கொல்வதற்காக சுற்றி வளைக்கப்பட்டு பின் ஐ.நா தலையீட்டால் விடுவிக்கப்பட்டனர்.

ஈராக்கில் ஆகஸ்ட் 2014 சுன்னி கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகளின் வன்முறையிலிருந்து தப்ப ,



யாசிடி இன மக்கள் தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரை விட்டு வெளியேறினர்.

ஆயிரக்கணக்கானோர் சிரியா எல்லைக்கருகே உள்ள சிஞ்சார் மலையின் வறண்ட முகடுகளில் தஞ்சம் புகுந்தனர். சிலர் நடந்தே சிரியா எல்லையைக் கடந்திருக்கின்றனர். தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரைப் பிடித்த, இராக்கின் கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகள் செய்யும் வன்முறையிலிருந்து தப்ப இடம்பெயர்ந்தனர்.

**சின்ஜார், கோச்சோ படுகொலைகள்:**

ஆகஸ்ட் 2014 இல் இஸ்லாமிய அரசு சிஞ்சர் மாவட்டத்தின் கிராமங்கள் மீது மிருகத்தனமான, திட்டமிட்ட தாக்குதலை நடத்தியது, இது யாசிடி மக்களை அழிப்பதை நோக்க மாகக் கொண்டது. ஐஎஸ் அமைப்பினர் கோச்சோவில் பலத்த ஆயுதம் ஏந்தியவாறு கார்களிலும் லாரிகளிலும் வந்து யாசீடி கிராமங்களை கருப்புக் கொடிகளை அசைத்து சுற்றி வளைத்தனர்.

கிராமவாசிகள் தங்களிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் கைவிடுமாறும், கிராம மக்கள் தங்கள் வீடுகளில் இருக்குமாறும் கோரினர். கிராமத்தை இஸ்லாத்திற்கு மாற்ற வேண்டும் அல்லது மரணதண்டனையை எதிர்கொள்ள வேண்டும் என்பதே ஆரம்பக் கோரிக்கையாக இருந்தது.

இஸ்லாமிய மதத்திற்கு மாறாததற்காக ISIS தண்டித்து ஆண்களை வற்புறுத்தினர். பின்னர் யாசீடி ஆண்களின் எல்லா உடைமைகளையும், பொருட்களையும் அபகரித்தனர். பின்னர் யாசீடி

ஆண்களை ISIS தனித்தனி இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களை தூக்கிலிட்டனர்.

**பாலியல் தொழில் அடிமைகளாக :**

பெண்கள் மற்றும் குழந்தைகள் வேறு தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவர்களுடைய நகைகள், மதிப்புமிக்க பொருட்களை பெரும் குவியலில் சேர்த்து கொள்ளையிட்டனர்.

மிக கொடூரமாக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினர் 13 வயது முதல் 16 வயது வரையிலான திருமணமாகாத சிறுமிகளைத் தேர்ந்தெடுத்து பிரித்தனர். எஞ்சியவர்கள் வேறொரு கிராமத்திற்குச் செல்ல திருமண மான பெண்கள் மற்றும் குழந்தைகள் அகதி முகாம்களில் தங்கி இருந்தனர்.

திருமணமாகாத இளம்பெண்களைத் ஐஎஸ் தேர்ந்தெடுத்து தங்களுடன் அழைத்துச் சென்றனர். இளம் பெண்கள் ISIS போராளி களுக்கு விற்கப்பட்டார்கள். அத்துடன் பாலியல் தொழில் அடிமைத் தனத்திற்கு தள்ளப்பட்டார்கள். ஐஎஸ் அமைப்பினர் பல பெண்கள் வதைத்து, அடிக்கப்பட்டு பட்டினி கிடக்கப்பட்டார்கள்.

சின்ஜார் படுகொலை நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் 200000 யாசிதிகள் இன்னும் காணவில்லை. அவர்கள் உண்மையில் காணாமல் போயிருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை மற்றும் மக்கள் சின்ஜாருக்குத் திரும்புவதற்கான நம்பிக்கை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக உள்ளது.

**யுத்த ஆயுதமாக பாலியல் அடிமைகள் :**

நதியா முராத் வடக்கு ஈராக்கில் உள்ள யாசிடி சிறுபான்மை யினரின் உறுப்பினராக உள்ளார். அங்கு அவர் தனது குடும்பத்தின ருடன் தொலைதூர கிராமமான கொச்சோவில் வசித்து வந்தார். ஆகஸ்ட் 2014 இல் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) சிஞ்சர் மாவட்டத்தின் கிராமங்கள் மீது மிருகத்தனமான, திட்டமிட்ட தாக்குதலை நடத்தியது, இது யாசிடி மக்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டது.

நதியா முராட்டின் கிராமத்தில், பல நூறு பேர் படுகொலை செய்யப்பட்டனர். வயதுக்குட்பட்ட குழந்தைகள் உட்பட இளைய பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் அடிமைகளாக நிறுத்தப்பட்டனர். ஐ.எஸ்ஸின் கைதியாக இருந்தபோது, நதியா முராத் பலமுறை கற்பழிப்பு மற்றும் பிற முறைகேடுகளுக்கு ஆளானார். இஸ்லாமிய

அரசின் வெறுக்கத்தக்க, மனிதாபிமானமற்ற விருப்பிற்கு அவர் மாறா விட்டால் மரண தண்டனை நிறைவேற்றுவதாக அவரை தாக்குதல் நடத்தியவர்கள் அச்சுறுத்தினர்.

ஐ.எஸ். இராணுவத்தால் கற்பழிப்பு மற்றும் பிற துஷ் பிரயோகங்களுக்கு ஆளான 3000 யாசிடி பெண்களில் நதியா முராத் ஒருவர். பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் கொடுமையானவை.

நீண்டகால கொடுமைகளுக்கு பிறகு நதியா முராத் ஈராக்கை விட்டு தப்பி ஓடினார். தப்பித்ததைத் தொடர்ந்து, அவர் அனுபவித்த கொடூரங்களை பற்றி வெளிப்படையாக பேசத் தேர்வுசெய்தார். இதன்பின் 2016 ஆம் ஆண்டில், தனது 23 வயதில், ஐ.நாவின் முதல் நல்லெண்ண தூதராக அவர் தேர்வு செய்யப்பட்டார்.

### யாசீடி விடுதலை அமைப்பு - கொங்ரா ஸ்டார்

2005 இல் யாசீடி பெண்களால் நிறுவப்பட்ட Kongreya Star, அமைப்பானது விடுதலைக்கு போராடும் கூட்டமைப்பு ஆகும். தெற்கு குர்திஸ்தானின் (வடக்கு ஈராக்) சின்ஜார் நகரத்தில் ISIS-ன் கைகளில் யாசிடி சமூகம் பாதிக்கப்பட்ட இனப்படுகொலையின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், வடகிழக்கு சிரிய கவுன்சிலான "கொங்ரா ஸ்டார்" ஒரு அறிக்கையை வெளியிட்டது.

துருக்கி அரசின் ஆதரவுடன் ISIS கூலிப்படையினர் குர்திஷ் மக்களை அழித்தொழிக்க முற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள கொங்ரா ஸ்டார், ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கடத்தப்பட்டதாக வும், பலரை இன்னும் காணவில்லை என்றும், உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான யாசிடி சமூகத்தினர் படுகொலை செய்யப் பட்டதாகவும் குறிப்பிட்டனர். துருக்கி அரசின் ஒத்துழைப்பை உள்ளடக்கிய திட்டங்களின் கட்டமைப்பிற்குள் ISIS இன் உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவுடன் யாசிடி சமூகத்தின் படுகொலை நிகழ்த்தப்பட்டது, என்று வடகிழக்கு சிரியாவில் உள்ள பெண்கள் அமைப்பின் அறிக்கையும் கூறுகிறது.

யாசிடிகளின் இருப்பு, வரலாறு மற்றும் கலாச்சாரத்தை அழிக்க முயன்ற படுகொலையின் நிறைவையொட்டி, பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவுகூர்ந்தது கொங்ரா ஸ்டார், இது அவர்களின் வரலாற்றில் பாரிய வெகுஜன படுகொலையாகும் என அறிவித்துள்ளது.

அவர்கள் அனுபவித்த அனைத்து படுகொலைகளுக்கும் மத்தியிலும், யாசிடிகள் இன்னும் தங்கள் நிலத்தில் தங்கள் இருப்பு, கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையைத் தழுவுகிறார்கள், என குறிப்பிடப்பட்டுள்ளது.

**இனப்படுகொலை அங்கீகரிப்பு :**

*யாசிடிகளின் கோங்க்ரா ஸ்டார் அமைப்பின் தன்னாட்சி நிர்வாகம் இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.*

*பொருளாதார வாய்ப்பு மற்றும் மேம்பாடு, பெண்களுக்கான விழிப்புணர்வு மற்றும் தற்காப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பெண்கள் கட்டமைப்பை ஒழுங்கமைப்பதில் இந்த அமைப்பு கவனம் செலுத்துகிறது. ரோஜாவா மற்றும் சிரியா முழுவதும் பணிபுரியும் கொங்ரா ஸ்டார் முழு மத்திய கிழக்கிற்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். அத்துடன் முழு பிராந்தியத்திலும் பெண்களின் விடுதலைப் புரட்சியை நனவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*(புரட்டாதி - 2022)*




## குர்திஸ்தான் – குமுறும் எரிமலையாக :

### ஐந்து நாடுகளின் ஆதிக்க முற்றுகைக்குள்...
### நெடுங்கால உரிமைப் போராட்டத்தில் குர்திய மக்கள்...

நாகரீகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படும் (Cradle of civilisation) பண்டைய மெசப்பத்தேமியா என்ற நிலப்பரப்பில் தோன்றிய இனங்களில் ஒன்று தான் குர்திஸ் (Kurdish) இனம்.

குர்திஸ் மக்கள் இன்று உலகில் வாழும் மிகப்பெரிய சிறுபான்மை இனமாக இருந்தாலும் நாடற்றவர்களாகவும் சுயநிர்ணய உரிமை அற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

எல்லா இனவொடுக்கு முறைப்போராட்டங்களைப் போலவே இவர்களும் தனி நாடு மற்றும் சுய நிர்ணய உரிமை என்ற ரீதியில் தங்கள் போராட்டத்தைக் காலங் காலமாக முன்னெடுத்தனர்.

அரபு மற்றும் துருக்கியர்களை அடுத்து மத்திய கிழக்கில் குர்திஸ் மக்கள் மூன்றாவது பெரிய இனமாக இருக்கின்றனர். குர்திஸ் மக்களுக்கு என்று ஒரு பொதுவான பேச்சு மொழி கிடையாது.

குர்திஸ் மொழியில் ஐந்து பிரதேச வட்டார மொழி வழக்கங்கள் உள்ளன. இந்த வட்டார மொழிகளை வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் குர்திஸ்காரர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவை வித்தியாசமாகவுள்ளன.

**மலைகளே குர்துகளின் நண்பர்கள் :**

மலைகளைத்தவிர எங்களுக்கு வேறு நண்பர்கள் இல்லை, என்று குர்திஸ் மக்கள் கூறுவதற்கு காரணம் மலைப்பிரதேசம் இவர்களின் ஆயுதம் ஏந்திய போராட்டத் தந்துரோபாயங்களில் வெற்றி பெற மிகவும் அனுகூலமாக இன்றளவிலும் இருந்து வருகின்றமையே.

இன்றைய துருக்கி, ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் எல்லைக்குள் அடைபட்டு இருக்கும் பிரதேசத்தை குர்திஸ் மக்கள் குர்திஸ்தான் (Kurdistan) என்று அழைக்கின்றனர்.

நான்காவது பனியுகம் முடிவுக்கு வந்த பின்னர் Neolithic என்றழைக்கப்படும் கற்காலம் தொடங்கிற்று, அந்தக்காலகட்டத்தில் தாய்வழிச்சமூகங்கள் கட்டி எழுப்பிய குல சமூகங்கள் வேளாண்மையையும் பகிர்ந்துண்டு வாழ்தலையும் வாழ்க்கை நெறியாக கொண்டிருந்தது.

இந்நிலப்பரப்பில் வேளாண்மை செய்வதில் பெண்கள் முன்னணியில் இருந்து சிறந்து விளங்கினார்கள், விவசாயத்திற்காக இன்றும் பாவனையில் இருக்கும் கருவிகளான மண்வெட்டி போன்றவை பெண்களின் கண்டுபிடிப்புக்களே ஆகும். இங்கு தான் பெண் தெய்வ வழிபாட்டு முறைகள் தோற்றம் பெற்றது.

**ஒட்டோமான் அரச அங்கீகாரம்**

ஒட்டோமான் ராஜ்ஜம் கூட குர்திஸ் மக்கள் செறிந்து வாழ்ந்த பிரதேசத்தை “குர்திஸ்தான்” என்ற தேசமாக அங்கீகாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.

*1920*இல் ஒட்டோமன் ராஜ்யம் வீழ்ந்த பின் (First World War in the Treaty of Sevres) முதலாவது உலக யுத்த முடிவின் ஒப்பந்த அடிப்படையில் குர்திஸ்தான் மக்களுக்கு தனிநாடு வழங்குவதாக அளித்த மேற்கின் வாக்குறுதி செயல்படுத்தப்படாமல் காற்றில் போனது.

**மிகப்பெரிய சிறுபான்மை இனம் :**

*40* மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இனத்துக்கு




*உலகில் மிகப்பெரிய நாடுகளும் பல அரபு குழுக்களுக்கு முதலாம் உலகப்போரின் பல வாக்குறுதிகளை வழங்கின. போர் முடிவுற்றதும் அவர்களுக்கான வாக்குறுதி அளித்த பிரதேசங்களை வழங்காமல் போனார்கள், வாக்குறுதிகள் காற்றில் பறந்தது.*

*1925ஆம் ஆண்டின் பின் இவர்களின் குர்திஸ்தான் நிலம் இவர்கள் வசம் அற்று துருக்கிய நாட்டின் ஓர் அலகாக மாற்றம் பெற்றது. ஐரோப்பிய காலனிய ஆட்சிக்கு பின்னர் குர்திஸ் இன மக்கள் தனித்தன்மை அழிக்கப்பட்டு அவர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக தரம் தாழ்த்தப்பட்டதோடு அவர்கள் அடையாளங்களை வெளிக் காட்டாமல் தேசிய அரசுகளின் சர்வாதிகார ஆட்சிக்கு கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்படனர்.*

முதலாம் உலகப்போருக்கு பின் :

*மத்திய கிழக்கு என்று ஆங்கிலேயர்களால் அழைக்கப்படும் பண்டைய மெசப்பதேமியா பிரதேசத்தில் மிகப்பலம் வாய்ந்த ஒட்டோமன் ராஜ்ஜம் நடைபெற்றது. இதற்குள் நாடுகள் என்று எதுவும் இருக்கவில்லை. பல்வேறு இனச் சமூகங்கள் கூட்டாக வாழ்ந்தன.*

*இதுவரையில் தனித்தனியாக தங்கள் பிரத்தியேக மொழி மதப்பிரிவு கலை கலாச்சாரம் என்பவற்றை பின்பற்றி அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் சுய நிர்வாகத்தோடு வாழ்ந்த சமூகங்கள் திடீர் என்று புதிதாகப்பிறந்த தேசங்களுக்குள்ளும் செயற்கையாக கீறப்பட்ட கோடு களுக்குள்ளும் தேசிய சர்வாதிக்க ஆட்சிக்குள் அடைபட்டு தங்கள் சுயத்தை இழக்க நேரும்போதும் அவர்களுக்குள் யுத்தங்கள்*

தொடங்குகியது.

இப்படித்தான் குரதிஸ்மக்களின் சுய நிர்வாக ஆட்சிகளும் பல தேச எல்லைகளுக்குள் சிக்குண்டு போனது.

முதலாம் உலகப்போருக்கு பின் புதிதாகப்பிறந்த ஈரான், ஈராக், சிரியா, துருக்கி போன்ற பெரும்பான்மை தேசிய ஆட்சி அதிகாரங் களால் குர்திஸ் மக்கள் தொடர்ந்து பல்வேறு வகைகளில் இனவழிப்பு செய்யப்பட்டார்கள் என்பதும் வரலாற்று உண்மையே.

**துருக்கியில் தொடரும் இனவழிப்பு:**

குர்திஸ் மக்கள் தங்கள் சுய உரிமை, சுய ஆட்சி மற்றும் அவர் களுக்கான மொழி கலாச்சாரம் என்ற பேச்சை எடுப்பது துருக்கிய அரசைப் பொறுத்தவரையில் சிறைத்தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகிறது.

குர்திஸ் இன விடுதலைப்போராட்ட இயக்கமான PKK ன் தலைவர் அப்துல்லா ஓச்சலன் துருக்கியை சேர்ந்த குர்திஸ்யர் இவர் மார்க்சிய- லெனினிச கொள்கை சிந்தனைப்பள்ளியில் இருந்து வந்தவர்.

இவர் 70 களின் பிற்பகுதியில் இருந்து முன்னெடுத்து வந்த விடுதலைப் போராட்டம் பெண் விடுதலை, அரசியல் சமூக தளங்களில் பெண்களுக்கு சம பங்களித்தல் மற்றும் சூழலியலும் சமூகமும் என்ற விடயங்களுக்கு மிக முக்கியத்துவம் வழங்கியது.

**ஒடுக்கப்படும் தேசிய இனம்**

இன்றுவரை துருக்கி அரசால் கொலை செய்யப்பட்ட குர்திஸ் மக்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரத்திற்கும் மேல் என்று லண்டனில் இருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை தெரிவித் துள்ளது.

பனிப்போர் காலத்தில் சிரியா சோவியத் யூனியனின் நட்பு நாடாகவும் துருக்கி நேட்டோவிலும் அங்கத்துவம் வகித்தது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் அன்றிருந்த சிரிய “பார்த்” அரசு PKK இயக்கத்திற்கும் அதன் தலைவர் அப்துல்லா ஓச்சலனுக்கும் அடைக்கலம் வழங்கி தலைநகர் டமாஸ்கஸில் PKK கொரில்லா இயக்கத்தை வளர்த்து வந்தது. இதில் பத்தாயிரத்திற்கு மேலான போராளிகள் சேர்ந்து கொண்டனர்.

அப்துல்லா ஓச்சலனிலால் 70 களின் பின் தொடங்கப்பட்ட PKK குர்திஸ்தான் விடுதலை இயக்கம் துருக்கிய ராணுவத்துடன் உக்கிரமான சமரில் 1984 ல் ஈடுபட்டது.

இதன் பின் அப்துல்லா ஓச்சலன் மாசி மாதம் 15 ம் திகதி 1999



ஆம் ஆண்டு மொசாட்டினாலும் மற்றும் பல நாடுகளின் ஒத்துழைப் போடு கைது செய்யப்பட்டு துருக்கிய சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் மீது தற்பாதுகாப்பு கருதி நடத்தும் போருக்கு, தீவிரவாதம் பயங்கரவாதம் என்றெல்லாம் உலகளவில் பெயர் சூட்டப்பட்டு விடுகிறது.

பெரும்பான்மை தேசிய அரசுகளின் ஒடுக்குமுறைகளை முறியடித்து இன்னோர் தேசிய அரசை ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனம் ஸ்தாபிப்பது மட்டுமே பெரும்பான்மை அரசுகளின் ஒடுக்கும் தேசிய போக்கில் இருந்து விடுபடுவதற்கான வழியாக கொள்ள முடி யாது என்பதை அப்துல்லா ஓச்சலன் காலப்போக்கில் தான் உணர்ந்த தாக கூறுகிறார். ஏனெனில் தேசிய அரசுகளின் அஸ்திவாரம் இன்னு மோர் ஒடுக்கு முறைக்கு வழி வகுக்கும் கருவியாகவே இருக்கும் என்பது அவர் கருத்து.

**சிரியாவில் குர்திஸ் மக்கள் நிலை :**

சிரியாவில் இஸ்லாம் மதம் நடைமுறைக்கு வந்த காலத்திற்கு முன்னரே காலநிலை மற்றும் பல்வேறு காரணங்களால் நாடோடி களாக வாழ்ந்த அசிறெட் asiret குர்திஸ் மக்கள் இன்றுள்ள “Cizire” சீஸ்யறே என்ற பிரதேசத்தில் குடியேறிவிட்டனர். இந்த கால கட்டத்தில். Tai டாய் என்றழைக்கப்படும் அரபுக்கார்ர்கள் நாடோடி களாகவே வாழ்வை தொடர்ந்தனர். பெரும்பாலான சிரிய குர்திஸ் மக்கள். தங்கள் மொழி கலாச்சாரம் மறந்து சிரியர்களாக மாறி வாழத்தொடங்கினர்.

பின்னர் முதலாம் உலகப்போரின் போது துருக்கிய

ராணுவத்தால் அங்கிருந்து விரட்டப்பட்ட குர்திஸ் மக்கள் பலர் மேற்கு சிரியாவில் வேளாண்மை செய்து வாழத்தொடங்கினர்.

2012 இல் சிரிய போர் தொடங்கிய போது அறுநூறாயிரம் குர்திஸ்யர்கள் டமாஸ்கஸிலும் வாழ்ந்தனர். அலப்பேவில் அரை மில்லியன் குர்திஸ் மக்கள் வாழ்ந்தனர். இன்று இது அறுபது ஆயிரமாக குறைந்து இருக்கிறது. எல்லாமாக சேர்த்து மூன்று மில்லியன் குர்திஸ் மக்கள் ரஜோவில் வாழ்கின்றனர்.

**குர்திய மக்களும் ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியும் :**

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியில் நூறாயிரத்திற்கு மேற்பட்ட குர்திஸ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டு அவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் தேச வரைபடத்தில் இருந்து அழிக்கப்பட்டது. இதானால் ஈராக் போரில் மேற்கு நாடுகளுக்கு ஈராக்கிய குர்திஸ் மக்கள் உதவிகள் செய்தனர்.

ஈராக் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் de facto என்று கூறப்படும் குர்திஸ் நிழல் அரசு ஒன்று உருவானது.

**தனிநாட்டுக்கான சர்வசன வாக்கெடுப்பு :**

2017 ல் நடைபெற்ற முற்றுமுழுதான தனிநாட்டுக்கான சர்வசன வாக்கெடுப்பின் பின்னர் தனிநாடு கிடைக்கவில்லை என்பதோடு அவர்கள் வசம் இருந்த Kirkuk கிர்குக் என்ற எண்ணெய் வளம் நிரம்பிய நகரம் ஈராக்கிய ஆட்சியாளர்களிடம் பறிபோனது யாவரும் அறிந்ததே.

குர்திஸ்தான் என்னும் ஒரு தனி நாட்டுக்கான கோரிக்கையும் அதற்கான யுத்தமும் வெறுமனே ஒரு மதவாத அடிப்படைவாத தேசிய அரசுடனான இரத்தம் சிந்தும் போர் மட்டுமல்லாமல் ஐந்து தேசிய அரசுகளுடானதும் அந்த நாடுகளுடன் நட்பில் இருக்கும் வெளிநாடு களுடனுமான ராஜதந்திரப்போராகவும் இருப்பதனால் இந்த போர் மற்ற தேசிய விடுதலைப்போர்களோடு ஒப்பிடும் போது கல்லில் நார் உரிக்கும் முயற்சி போன்று மிகவும் கடினமானதாக இருக்கும்.

இதனாலேயே குர்திஸ்மக்களின் “ மலைகளைத்தவிர நமக்கு வேறு நண்பர்கள் இல்லை” என்று உலகத்திற்கு சொல்லுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரக்ஞையில் அவர்கள் விடுதலையை வெற்றி அடைய செய்து கொண்டுருக்கும் நிலவியல் சூழலான மலைகளை மட்டுமே நம்பி இருக்கின்றனர். ஏனெனில் அரசியலில் நிரந்தர எதிரிகளோ நண்பர்களோ கிடையாது.

**குர்திய பெண்கள் அமைப்பு :**

*1990 களின் தொடக்கத்தில் PKK ன் YAJK என்கிற பெண்கள் ராணுவம் கொரில்லா படையாக உருவெடுத்தது. இதைத்தொடர்ந்து இவர்கள் கட்டுப்பாட்டிற்குள் உள்ள எல்லா செயற்பாடுகளிலும் பெண்களின் பங்களிப்பு 40 வீதமாக்கப்பட்டு நடைமுறையில் செயற் படுத்தப்பட்டது பெண்கள் புரட்சி அப்துல்லா ஓச்சலன் தலைமையில் வளர்த்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

*1991 ல் சோவியத் யூனியன் வீழ்ந்த பின் PKK துருக்கியுடன் பல சமாதான ஒப்பந்தங்களை செய்ய முனைந்தும் அது பயனளிக்கவில்லை. இந்த காலகட்டத்தில் துருக்கி சிரியாவிற்கு தண்ணீர் விநியோகம் செய்யும் நாடாக விளங்கியதால் அதை ஒரு துருப்பு சீட்டாக வைத்து PKK தலைவர் அப்துல்லா ஓச்சலனை சிரியா வெளியேற்றாவிட்டால் தண்ணீர் விநியோகத்தை நிறுத்துவோம் என்று துருக்கி சிரியாவிற்கு அச்சுறுத்தல் விடுத்து வந்ததும் அறிந்ததே. நீண்ட கால பல்நாட்டு தேடுதல்களின் பின் அப்துல்லா ஓச்சலன் மாசி மாதம் 15 ம் திகதி 1999 ஆம் ஆண்டு மொசாட்டினாலும் மற்றும் பல நாடுகளின் ஒத்துழைப் போடு கைது செய்யப்பட்டு துருக்கிய சிறையில் தற்போது அடைக்கப் பட்டுள்ளார்.*

**ஓச்சலனுக்கு மரண தண்டனை :**

*ஓச்சலனுக்கு துருக்கி மரண தண்டனை விதித்தது, கடந்த பதினெட்டு வருட காலமாக அப்துல்லா ஓச்சலன் தனிமைப்படுத்தப் பட்ட துருக்கிய சிறையில் உள்ளார். இவரின் விடுதலைக்கான வழக்கு* European Courts of Human Rights *இல் வைத்து வாதிடப்பட்டது. இதற்கு* ECHR *கூறியதாவது, இது ஒரு தனிமனிதரின் வாதமாக எடுத்து வழக்கை வலுப்படுத்தாது, இது மக்கள் கூட்டத்தின் வழக்கு என்றது. அத்துடன் மக்கள் கூடத்தின் கோரிக்கைகளை அரசியல் தீர்வு மூலமே அணுக முடியும் என்றது.*

*விடுதலைப் போராட்ட அமைப்புகளையும் பயங்கரவாத அமைப்புகளையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கும் உலக மேலாண்மைப் போக்கின் செப் 11 தாக்குதலின் பின்னரான உலக ஒழுங்கின் விளைவாக பிகேகே அமைப்பும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றினால் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா, கனடா, ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளும் அதனைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித் துள்ளது. ஆயினும் 2008ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம்*

*பிகேகே பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை என தீர்ப்பளித்திருந்தது..*

*பி.கே.கே அமைப்பினை முற்றுமுழுதாக அழித்தொழிக்கின்ற துருக்கியின் இலக்கு நிறைவேறாத புறநிலையிலும், கடந்த 30 ஆண்டுகளாக முயற்சிக்கப்பட்ட இராணுவ மூலோபாயத்தினூடாக முரண்பாட்டுக்கான தீர்வு சாத்தியமில்லை என்பதை துருக்கிய அரசாங்கம் உணர்ந்து கொண்டுகள்ள புறநிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு மீண்டும் இணங்கியுள்ளன.*

*மூன்று தசாப்தங்களுக்கு மேல் நீடித்து வந்துள்ள குர்திஸ் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் குர்திய மக்களுக்கு மலைகள் மட்டுமே சொந்தம் ஆகியுள்ளன. ஒரு மேலைத்தேச எழுத்தாளர் தன் நூலில் வெளியிட்டதன் படி குர்திஸ் மக்கள் பெரும்பான்மையானோர் போரினால் இரட்டிப்பு பாதிப்புக் குள்ளாகும் போது, ஆயுதமேந்தும் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர். குர்து தேசியவாதம், பல பிரதேச வேறுபாடுகளை கொண்ட குர்து மக்களை ஓரணியில் சேர்த்து வாலிபர்கள், இளம் பெண்கள் கூட, தமது சொகுசான வாழ்க்கையை உதறித்தள்ளி விட்டு, விடுதலை வேட்கையுடன் ஆயுதம் தரித்த போராளிகளாக, பனி படர்ந்த மலைகளில் துருக்கி இராணுவத்துடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

*நெடுங்கால அழிவுகள், துயரங்கள், எல்லாமே இப்போதும் தொடர்கதையாக இருப்பினும் விடுதலைக்கான போராட்டம் ஒரு இனத்தின் இருப்பை நிச்சயப் படுத்தியிருக்கிறது.*

*(கார்த்திகை 2022)*




## அசேரியா – பண்டைய நாகரீகத்தின் அடையாளம் :

### மத வன்முறையால் அழிக்கப்படும் அசேரிய மக்களும்..
### சிதைக்கப்படும் பழமையான வரலாற்று மையங்களும் ..

ஈராக்கில் ஒரு தனித்துவமான இனமாக “அசேரியர்கள்” (Assyrian) கருதப்படுகின்றனர். இருப்பினும் உத்தியோகபூர்வ ஈராக்கிய புள்ளிவிவரங்கள் அவர்களை அரேபியர்கள் என்றே கருதுகின்றன.

**பண்டைய மெசொப்பொத்தேமியா :**

பண்டைய மெசொப்பொத்தேமியா மக்களின் வழித் தோன்றல்கள், அசேரியர்கள் அராமை (Aramaic) மொழியை பேசுகிறார்கள். அத்துடன் அசேரிய மக்கள் கல்தேயன்,சிரிய மரபுவழி, நெஸ்டோரியன் மற்றும் சிரிய கத்தோலிக்க ஆகிய நெறிமுறைகளை பின்பற்றுகின்றனர்.

பண்டைக் காலத்தில் அசேரியா என்பது, டைகிரிஸ் ஆற்றின் மேற்பகுதியைச் சார்ந்த ஒரு நிலப்பகுதியைக் குறித்தது. அசேரியர்கள் ஒரு தனித்துவமான சமூகத்தை உருவாக்குகி வாழ்ந்தார்கள். இப் பகுதியில் பழங்காலத் தலை நகரமாக விளங்கிய அசூர் என்னும் நகரின் பெயரைத் தழுவியே அசேரியா என்னும் பெயர் ஏற்பட்டது.

பிற்காலத்தில் அசேரியா, பண்டைய மெசொப்பொத்தேமியா, பண்டைய எகிப்து, அனத்தோலியாவின் பெரும்பகுதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய பெரிய பேரரசாக விளங்கியது. எனினும் முறையான அசேரியா என்பது மெசொப்பொத்தேமியாவின் வட பாகத்தையே குறித்தது. இப்பகுதி நினிவேவைத் தலைநகரமாகக் கொண்டிருந்தது. தென்பகுதி பபிலோனியா எனப்பட்டது. ஆயினும் மங்கோலிய படையெடுப்புகளால் அசேரியரின் வழிபாட்டு தேவாலயங்கள் பலஅழிந்துவிட்டன. அதன் பின் அசேரியர்கள் அண்டை நாடான குர்திஷ் பழங்குடியினருடன் இணைந்து வாழ்ந்தனர்.

ஐரோப்பிய காலனித்துவ ஊடுருவல் மற்றும் கிறிஸ்தவ மத பரம்பல் ஆர்வத்தின் விளைவாக, சுன்னி - ஆர்மேனிய படுகொலை களாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசேரியர்களோ தொடர் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர்.

**ஆர்மேனிய இன படுகொலை :**

1915 ஆம் ஆண்டில்,அசேரியர்கள் ரஷ்யப் படைகளால், ஆர் மேனியர்களை படுகொலை செய்யத் தொடங்கிய ஒட்டோமான் களுக்கு எதிராககிளர்ச்சி செய்ய ஊக்குவிக்கப்பட்டனர்.

1917 இல் ஜாரிஸ்ட் ரஷ்யாவின் சரிவுடன் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு தெற்கு நோக்கி அணிவகுத்துச் செல்ல எஞ்சிய 250000 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஈராக்கில் குடியேறினர். முதலாம் உலகப்போருக்குப் பிறகு அசேரியர்கள் அவர்கள் விரும்பியபடி ஹக்காரிக்குத் திரும்புவது சாத்தியமற்றது. அவர்கள் அங்கு அனுப வித்து வந்த சுயாட்சி மறுக்கப்பட்டது. மேலும் அரபு அரசாங்கத் திற்கும் இடையே அவநம்பிக்கை அதிகரித்தது.

**ஈராக் சுதந்திரத்தின் பின்னர் :**

அசேரியர்கள் 1932 இல் ஈராக் பெற்ற சுதந்திரத்தை பிரிட்டிஷ் அரசு தம்மை காட்டிக்கொடுப்பாகக் கருதினர். அதனைத் தொடர்ந்து வளர்ந்து வந்த பதற்றம் 1933 இல் ஒரு பாரிய மோதலுக்கு வழிவகுத்தது. அதைத் தொடர்ந்து ஈராக் இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட தொடர்ச்சியான படுகொலைகள், இதில் 600 முதல் 3000 பேர் வரை




*கொல்லப்பட்டனர்.*

*பல அசேரியர்கள் அமெரிக்காவிற்குப் புகலிடந் தேடிப் புறப்பட்டனர், ஆனால் பெரும் பகுதியினர் ஈராக் உள்ளேயே தங்கி யிருந்தனர். இதன்பின் உள்நாட்டில் குர்திஸ் மோதலைத் தவிர்க்க அசேரியர்களால் முடியவில்லை.*

*அக்காலத்தில் குர்துகளைப் போலவே, சிலர் ஈராக்கிய அரசாங்கத்தை ஆதரித்தனர். மற்றவர்கள் குர்திஷ் தேசியவாத இயக்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர். 1979 இல் பல சிறிய கட்சிகள் இணைந்து அசேரியர் ஜனநாயக இயக்கத்தை (ADM) உருவாக்கி, 1982 இல் குர்திஷ் ஆயுதப் போராட்டத்தில் முறையாக இணைந்தனர்.*

**1988 இரசாயன தாக்குதல் :**

*1988 ஆம் ஆண்டு அன்ஃபால் இரசாயன தாக்குதலில் குர்துகளைப் போலவே அசேரியர் கிராமங்களும் மக்களும் பாரிய அளவுல் பாதிக்கப்பட்டனர். குர்திஸ்தான் முன்னணியின் ஒரு பகுதியாக இருந்து, 1992 குர்திஸ்தான் தேர்தலில் பங்கேற்றது. ஐந்து இடங்கள் அசேரியர் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டது.*

*ஈராக் அரசியலமைப்பில் அசேரியர் அங்கீகாரம், முழு கலாச்சார உரிமைகள் மற்றும் சமத்துவம் ஆகியவற்றை கோரியது. குர்துகள் ஒரு கூட்டாட்சி அரசை அடைந்தால், அசேரியர்கள் அதற்குள் சுயாட்சியைக் கோரினார்கள். ஆனால் பிரிந்து செல்வதற்கான பரவலான விருப்பமும் இருந்தது.*

*குறிப்பாக சதாம் ஹுசைனின் இனப்படுகொலையான அன்ஃபால் தாக்குதலில் மற்ற கிறிஸ்தவ சிறுபான்மையினருடன் அசேரியர்களும் பாதிக்கப்பட்டனர். 1988 இல் தொடங்கப்பட்ட இந்த கொடூரத்தின் விளைவாக சுமார் 100000பேர் கொல்லப்பட்டனர். அல்லது கட்டாயமாக காணாமல் போயினர். பெரும்பாலும் குர்துகள், உட்பட பல்வேறு சிறுபான்மையினரைச் சேர்ந்த பல ஆயிரக்கணக் கான மக்கள் கொல்லப்பட்டனர்.*

**அரேபிய மயமாக்கல் கொள்கை:**

*இக்கோரங்களின் பின்னர், காணாமல் போனவர்கள் மற்றும் கொலைகள், அரபுமயமாக்கல் கொள்கை சிறுபான்மையினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக்கொள்ள அதிகாரபூர்வமாக கட்டாயப் படுத்தியது.*

*ஈராக்கில் 1987 மற்றும் 1997 தேசிய மக்கள்தொகை கணக் கெடுப்புகள் அனைத்து அசேரியர்களும் அரபு அல்லது குர்திஷ் அடையாளத்தை தேர்வு செய்ய கட்டாயப்படுத்தியது.*

*அசேரியர் என அடையாளப்படுத்த வலியுறுத்தியவர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர் அல்லது தன்னிச்சையாக அரபு அல்லது குர்து என பதிவு செய்யப்பட்டனர்.*


*2001 ஆம் ஆண்டில், ஆணை 199 ஒவ்வொரு ஈராக்கியருக்கும் தங்கள் இன அடையாளத்தை மாற்றுவதற்கும் அரேபியரைத் தேர்ந் தெடுப்பதற்கும் "உரிமையை" அறிவித்தது. நூறாயிரக் கணக்கானோர் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தனர், குறிப்பாக கிர்குக்கைச் சுற்றி யுள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் சிறுபான்மை யினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக்கொள்ள அதிகாரபூர்வ மாக கட்டாயப்படுத்தியது.*

**2003 அமெரிக்க படையெடுப்பு:**

*அமெரிக்காவின் மார்ச் 2003 படையெடுப்பிற்குப் பிறகு ஈராக்கைப் பற்றிக் கொண்ட இன மற்றும் குறுங்குழுவாத உள்நாட்டுப் போரின் போது இன மற்றும் மத சிறுபான்மையினரான அசேரியர்கள் இரட்டிப்பாக இலக்கு வைக்கப்பட்டனர்.*

*அமெரிக்காவின் மார்ச் 2003 ஆக்கிரமிப்புப் போரினால் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான ஈராக்கியர்களில் அசேரியர்கள் பாரிய அளவில் இடம்பெயர்ந்தனர்.*

*அத்துடன் கொலைகள், குண்டுவெடிப்புகள், கடத்தல்கள், சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், கட்டாய மதமாற்றங்கள் மற்றும்*




வெளியேற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர்.

அசேரியர் தேவாலயங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகளும் குறிவைக்கப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட கிறிஸ்தவப் பகுதிகளில் இருந்ததால், வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்ததால் அல்லது உத்தியோகபூர்வ அல்லது தொழில்முறை பதவிகளை வகித்ததால், மக்கள் கடத்தப்பட்டனர் அல்லது தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். இதில் அரசு ஊழியர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் மத தலைவர்கள் அடங்குவர்.

**அசேரியர் நிறுவனங்கள் குறிவைக்கப்பட்டன:**

உயர் பதவிகளில் உள்ளவர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் பணிபுரிந்த கிறிஸ்தவ அசேரியர்கள் குறிப்பாக ஆபத்தை எதிர் நோக்கினர். 22 செப்டம்பர் 2005 இல் அசேரிய ஆர்வலரும் முன்னாள் ஈராக்கிய இடம்பெயர்வு அமைச்சருமான பாஸ்கேல் வார்தாவைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட ஆறு அசேரியர் பாதுகாப்புக் காவலர் களை ஏற்றிச் சென்ற டிரக் மீது துப்பாக்கி ஏந்திய நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆறு பேரில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

2005 நவம்பரில் மொசூலில் துப்பாக்கி ஏந்தியவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் கிறிஸ்தவ அரசியல் கட்சியான அசேரியர் ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்மற்றும் இருவர் காயமடைந்தனர் என்று மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல் ஏப்ரல் 2008 இல் அசேரியர் ஆர்த்தடாக்ஸ் பாதிரியார் அடெல் யூசுப் மத்திய பாக்தாத்தில் அடையாளம் தெரியாத

*தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.*

**அசேரியர் நிலங்கள் அபகரிப்பு:**

*2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஈராக்கின் நினேவா பகுதியில் அசேரியர் சுயாட்சி, அல்லது சுய-நிர்வாகத்திற்கான உந்து தலைக் கண்டது.*

*இத்தகைய முயற்சி அசேரியர்களை மேலும் பாதுகாப் பின்மைக்கு ஆளாக்கக்கூடும் என்றாலும், பிராந்திய குர்திஷ் அரசாங் கம் ஒரு புதிய மாகாணத்திற்கான இந்த நடவடிக்கையை ஆதரித்தது.*

*இது ஈராக்கில் இருந்து பிரிந்து செல்லும் குர்திஷ் விருப்பத்தை வலுப்படுத்தும் என்பதால். இதற்கிடையில், குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கம் வடக்கு முழுவதும் அசேரியர் நிலங்களை அபகரித்தது ஏன் என்று புரியவில்லை.*

*அக்டோபர் 2010 இல், பாக்தாத்தில் உள்ள அவர் லேடி ஆஃப் சால்வேஷன் சிரியாக் கத்தோலிக்க தேவாலயத்தின் மீதான தாக்குதல் அசேரியர் சமூகத்தில் அதிர்ச்சி அலைகளை அனுப்பியது.*

*ஈராக்கில் அல்-கொய்தாவுடன் தொடர்புடைய அமைப்பால் நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 56 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 78 பேர் காயமடைந்தனர். தாக்குதலுக்குப் பிறகு, 1000 க்கும் மேற்பட்ட அசேரிய கிறிஸ்தவ குடும்பங்கள் பாக்தாத்தில் இருந்து வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.*

**2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசின் கொடூரம் :**

*2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசினால் (ISIS) அசேரியர் களுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தியது. 2014 ஆம் ஆண்டு மொசூல் நகரை ISIS கைப்பற்றியதால் நூற்றுக்கணக்கான அசேரிய கிறிஸ்தவ குடும்பங்கள் குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் (KRG) கட்டுப்பாட்டில் உள்ள நினிவா சமவெளி மற்றும் பகுதிகளை நோக்கி தப்பி ஓடினர். மீதமுள்ள கிறிஸ்தவ குடும்பங்கள் இஸ்லாத்திற்கு மாற வேண்டும், ஜிஸ்யா (முஸ்லிம் அல்லாதவர்களுக்கு விதிக்கப்படும் அஞ்சலி) அல்லது கொல்லப்பட வேண்டும் என்று இறுதி எச்சரிக்கையைப் பெற்றன.*

*ஜூலை 2014 க்குள், கிட்டத்தட்ட அனைத்து அசேரிய கிறிஸ்தவ குடும்பங்களும் நகரத்தை விட்டு வெளியேறின. ஐ.எஸ்.ஐ.எஸ் மொசூலில் உள்ள கிறிஸ்தவ வீடுகளை அரபு எழுத்து N ("நசரேன்" என்பதற்கு) கொண்டு குறியிட்டு, அவற்றை இஸ்லாமிய அரசின் சொத்தாக நியமித்து, அவற்றினை கொள்ளையடித்தது.*

**ஐஎஸ்ஐஎஸ் கட்டுப்பாடும் கொடூரமும் :**

ஆகஸ்ட் 2014 இல் டெல் இஸ்கோஃப், பர்டல்லா, கரம்லெஸ், பட்னாயா, டெல் கீஃப் மற்றும் ஈராக்கின் மிகப்பெரிய கிறிஸ்தவ நகரமான கராகோஷ் உட்பட நினிவா சமவெளிகளில் உள்ள அனைத்து அசேரியர்ப் பகுதிகளையும் ஐஎஸ்ஐஎஸ் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. சுமார் 200000 பேர் குர்திய KRG பகுதியை நோக்கி ஓடியதால், இது இரண்டாவது அலை இடப்பெயர்வை ஏற்படுத்தியது.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் அசேரியர குடும்பங்களை தங்கள் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்லும்போது கொள்ளையடித்தனர். அவர்களின் பணம், கார்கள்,நகைகள் மற்றும் அடையாள ஆவணங் களை பறிமுதல் செய்தனர். அத்துடன் தப்பி ஓடிய அசேரியர்களின் வீடுகள் மற்றும் பண்ணைகளையும் சூறையாடினர்.

அசேரியர்கள் தங்கள் வரலாற்று, கலாச்சார மற்றும் மத பாரம்பரியத்தை வேண்டுமென்றே இஸ்லாமிய அரசால் அழித்தமை யால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

**பழமையான வரலாற்று தளங்களை அழிப்பு**

2014 இல் தொடங்கிய ISIS கொடூரம் பல அசேரியர் தேவால யங்கள், கல்லறைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை யான வரலாற்று தளங்களை அழித்தது. இவற்றுள் திக்ரித்தில் உள்ள அசேரியர்ன் பசுமை தேவாலயம், ஹத்ராவின் பண்டைய நகரம் மற்றும் வரலாற்று அசேரியர் தலைநகரான நிம்ருத் ஆகியவை அடங்கும். இந்த குழு மொசூல் அருங்காட்சியகத்தில் உள்ள ஏராளமான தொல்பொருட்களையும் அழித்தது, அவற்றில் பெரும் பாலானவை அசேரியர் நாகரிகத்துடன் தொடர்புடையவை ஆகும்.

**அசேரியர்கள் புலம்பெயர்வு :**

கொடூரமான வன்முறையில் இருந்து தம் உயிரை பாது காப்பதில் பல அசேரியர்கள் புலம்பெயர்வதைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களின் சமூக கட்டமைப்பு அளவு தொடர்ந்து சுருங்கி வருகிறது. ஈராக்கில் 2003 க்கு முன்பு இருந்ததை விட இப்போது ஒரு சிறிய பகுதியாக உள்ளது.

குறிப்பாக பாக்தாத்தில் தொடர் குண்டுவெடிப்புகள் மற்றும் கடத்தல்கள் அடிக்கடி நிகழ்வதுடன், மதவெறியின் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.

குர்திஸ்தான் பிராந்தியத்தில், பாதுகாப்பு நிலைமை சாதாரண

*மாக சிறப்பாக இருந்தாலும், குர்திஷ் அதிகாரிகளால் தங்கள் அரசியல் செயல்பாடுகளை அடக்குவதாக அசேரியர்கள் அடிக்கடி தெரிவிக்கின்றனர்.*

*இரண்டு மேலாதிக்க குர்திஷ் கட்சிகளின் அரசியல் நோக்கங்களை ஆதரிக்க அசேரியர்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது அழுத்தம் கொண்டு வரப்பட்டு உள்ளது, மேலும் அசேரியர்களுக்கு சொந்தமான நிலங்களில் சட்டவிரோத குர்திஷ் கட்டுமான நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்கின்றன எனவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.*

**அரை-தன்னாட்சி பாதுகாப்பான பகுதி :**

*சமீபத்தில், சில அசேரியர் குழுக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில், நினிவா சமவெளிகளில் சிறுபான்மையினருக்கான அரை-தன்னாட்சி "பாதுகாப்பான பகுதி"க்கான முன்மொழிவின் பின்னால் தங்கள் ஆதரவை வீசியுள்ளனர்.*

*ஈராக் அரசாங்கம் மற்றும் KRG இரண்டின் மீதும் உள்ள அவநம்பிக்கையின் காரணமாக, இந்த சர்வதேசப் பாதுகாப்பின் சில கூறுகளை பலர் பரிந்துரைக்கின்றனர். இந்தத் திட்டத்தில், சிறுபான்மையினருக்கு முந்தைய ஏற்பாட்டிற்கு மாறாக, தங்கள் சொந்த பாதுகாப்பை நிர்வகிக்கும் அதிகாரமும் வழங்கப்படும்.*

*இதன் மூலமே அசேரிய மக்கள் தங்கள் பண்டைய நாகரீக சிறப்புடன் சுயநிர்ணயத்துடன் வாழ முடியும் என கருதுகின்றனர்.*

*(ஐப்பசி -2022)*



# பாலஸ்தீனம்– பட்டினியை எதிர் நோக்கும் அவலம்:

## காசாவில் வறுமை விகிதம் பாரியளவில் உயர்வு..
## இஸ்ரேலின் கடல், நில முற்றுகையும் அதிகரிப்பு..

*பாலஸ்தீனத்தின் காசாவில் 2022 வருடத்தில் மட்டும் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் தெரிவித்துள்ளது.*

**இஸ்ரேலின் கடலோர முற்றுகை :**

*பாலஸ்தீனத்தில் நீடித்த மோதல்கள், பொருளாதார தேக்க நிலை இன்னமும் தொடர்கிறது. அதேவேளை தடைசெய்யப்பட்ட வர்த்தகம் மற்றும் வளங்களுக்கான அணுகல், அதிக வேலையின்மை மற்றும் வறுமை விகிதங்களுடன் இணைந்து, பட்டினியும் அதிகரித்துள்ளது.*

*உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச் சத்து ஆகியவற்றில் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு கடுமையான சவால்கள் பாலஸ்தீனத்தில் தொடர்கிறது.*

*கடந்த 16 ஆண்டுகளாக இஸ்ரேலின் கடலோரப் பகுதியில் விதிக்கப்பட்ட முற்றுகையாலும், இந்த பகுதியில் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*கோவிட் - 19 தொற்று வெடிப்பதற்கு முன்பாக கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மக்கள் - 32.7 சதவீதம் அல்லது 1.6 மில்லியன் மக்கள் - சத்தான உணவை பெற முடியவில்லை. அத்துடன் உணவுப் பற்றாக் குறை பெண்களிடையே அதிகமாக உள்ளது. 33.7 சதவிகிதம் பெண் களை வழிநடத்தும் குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையாலும், பாது காப்பற்ற நிலையாலும் குறிப்பாக காசா பகுதியில் இது 64 சதவிகிதம் அதிகரித்துள்ளது.*

*பாலஸ்தீனிய சர்வதேச கவுன்சில் தகவலின்படி 2007-ம் ஆண்டு ஹமாஸ் அரசு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி யதை தொடர்ந்து, 2 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் வசிக்கும் காசா பகுதி இஸ்ரேலிய முற்றுகையின் கீழ் உள்ளது. ஹமாஸ் ஆளுகைக்கு உள்பட்ட கடலோரப் பகுதியானது 360 சதுர கி.மீ நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.*

**தொடரும் யுத்த விளைவு :**

*மேலும் இது உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வசிக்கும் 80 சதவீத மக்கள் மனிதாபிமான உதவி மற்றும் சர்வதேச அமைப்புகளின் மானியங்களை நம்பியுள்ளனர். காசா பகுதியில் 16 ஆண்டுகளாக இஸ்ரேல் விதித்துள்ள முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று கவுன்சிலின் தலைவர் கூறினார்.*

*தொடரும் யுத்தத்தால் கடுமையான உணவுப் பாதுகாப்பற்று பாலஸ்தீனியர்கள் கணிசமான நுகர்வு இடைவெளியை அனுபவித்து வருகின்றனர். உணவு, வீடு மற்றும் உடை உள்ளிட்ட அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழியின்றி உள்ளனர்.*

*பொருளாதார வழிமுறைகள் அல்லது சமாளிக்கும் வழி முறைகள் மூலம் கணிசமான நுகர்வு இடைவெளியை அவர்களால் எதிர் கொள்ள முடியவில்லை. இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் யுத்த நெருக்கடியின் காரணமாக பட்டினியை எதிர் நோக்குகின்றனரோ*




என ஐயப்பட வேண்டி உள்ளது.

மே 2021 இல், கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரை முழுவதும் பெரிய அளவிலான அமைதியின்மையின் பின்னணியில், 2014 க்குப் பிறகு காசா மிகவும் தீவிரமான இராணுவ விரோதங்களைக் கண்டது.

காசாவில் உள்ள மனிதாபிமான நிலைமைகள் - வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகியவை முறையே 53 சதவிகிதம் முதல் 64.4 சதவிகித மக்கள்தொகையைப் பாதிக்கின்றன என தரவுகள் தெரிவிக்கின்றன.

இது ஆபத்தான மேலும் அனைத்து உற்பத்தித் துறைகள், அடிப்படை சமூக சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் சரிவைப் பின்பற்றுகிறது.

16 ஆண்டுகால இஸ்ரேலின் கடல், நிலம் மற்றும் வான்வழி முற்றுகையின் ஒட்டுமொத்த தாக்கத்தால் காசாவின் சமூகப் பொருளாதாரத் தளம் தள்ளாடுகிறது. கோவிட் 19 உடன் பாதிப்புகள் மேலும் அதிகரித்துள்ளன.

**உலக உணவுத் திட்டம்** (WFP):

உலக உணவுத் திட்டம் (WFP) 1991 முதல் பாலஸ்தீனத்தில் உள்ளது, இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய அகதிகள், பொது மக்களுக்கு உணவு உதவி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குகிறது. அத்துடன் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்க முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வழங்குகிறது.

உலக உணவுத் திட்டம் ஆனது காசா பகுதி மற்றும் மேற்குக் கரையின் தெற்குப் பகுதிகள் உட்பட, உணவுப் பற்றாக்குறை அதிகம் உள்ள பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. சமீபத்திய அதிகரித்த கோவிட்-19 இன் தற்போதைய விளைவு காரணமாக உலக உணவுத் திட்டம் மேற்குக் கரையின் முழுப் பகுதிகளுக்கும் தனது உதவியை விரிவுபடுத்தியுள்ளது.

எத்தகைய சர்வதேச அழுத்தம் இருப்பினும், இஸ்ரேலால் கைப்பற்றபட்ட பாலஸ்தீனம் இன்றுவரை தொடரும் சியோனிச ஆதிக்கத்தை எந்த ஒரு நாடும் தட்டிக் கேட்கவில்லை என்பதே நிதர்சனமான் உண்மை.

**அமெரிக்காவின் கைப்பிள்ளை:**

இஸ்ரேல் அரசுக்கு 1949-1996 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா வழங்கிய உதவித்தொகை 62.5 பில்லியன் ஆகும். அதாவது ஒரு இஸ்ரேலிய யூத பிரஜைக்கு செலவழித்த தொகை $10775.

அதே நேரத்தில் ஆப்ரிக்க மற்றும் தென் அமெரிக்கா மக்களுக்கு செலவிட்ட தொகை தனி நபருக்கு வெறும் $59 மட்டுமே. இது போக ஒவ்வொரு வருடமும் வறுமையில் வாடும் தேசங்களுக்கு அமெரிக்கா வழங்கும் உதவித்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு தொகை பணத்தை இஸ்ரேலிற்கு அமேரிக்கா வழங்குகிறது.

இது ஒன்றும் அவர்களின் வயிற்றுப் பசியை போக்குவதற்கு இல்லை.மாறாக ஆயுதங்களை குவிக்கவும் பூர்வீக பலஸ்தீன மக்களை அடக்கவே பயன்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

பாலஸ்தீனின் நிலங்களை ஆக்கிரமித்து பாலஸ்தீனின் பூர்வீக குடிமக்களை தினம் தினம் கொன்றும் அவர்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பியும் வருகிறது. இஸ்ரேல் ஒன்றும் தனது சொந்த பணத்தில் இது போன்ற இனப்படுகொலைகளை அரங்கேற்றி வரவில்லை.

மாறாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பணத்தில் தான் இவ்வளவு கொடுமைகளையும் செய்துவருகிறது. இதிலிருந்தே ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் சமாதான, ஜனநாயகம் எல்லாம் வெறும் எழுத்தளவில் தான் என்பது புரிகிறது.

**நெல்சன் மண்டேலாவின் தீர்க்க தரிசனம்:**

பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச்



சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந்தது. இதில் ஒன்றான தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின்னர் 1994 இல் முடிவுக்குவந்தது.

ஆனால் 1940 களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என பாலஸ்தீனம் பற்றிய நெல்சன் மண்டேலாவின் கருத்தை எவராலும் மறுக்க முடியாது.

(புரட்டாதி - 2022)



## யேமன்–தொடரும் அரபு நாடுகளின் ஆதிக்க போர் :

**பிராந்திய ஆதிக்க போரால் உருவான ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள்!**
**சவூதிக்கும் ஈரானுக்கும் இடையிலான மறைமுக யுத்தம்..**

*கிட்டதட்ட 1 கோடி மக்கள் பட்டினியாலும், காலரா நோயினாலும் மிகக் கடுமையாக யேமனில் (Yemen) பாதிக்கப் பட்டுள்ளனர்.*

*பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போல ஒரு பக்கத்தில் தாக்குதல் நடத்த சவுதிக்கு ஆயுதங்களை வழங்கி விட்டு, மறுபக்கத்தில் யேமனுக்கும் (Yemen) உதவித் தொகையை மேற்குலகும், ஜி 20 நாடுகள் வழங்கியுள்ளன என ஆக்ஸ்ஃபாம் (Oxfam) அறிக்கை அண்மையில் கூறியுள்ளது.*

*2015 இல் யேமன் அரசாங்கத்தை கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான*

பன்னாட்டு கூட்டணிக்கு எதிராக போரிடுகின்றனர்.

இந்த மோதல் நான்கு மில்லியனுக்கும் அதிகமான மக்களை இடம்பெயரச் செய்துள்ளது மற்றும் காலரா தொற்று, மருந்து பற்றாக்குறை மற்றும் பஞ்ச அச்சுறுத்தல்களுக்கு வழிவகுத்தது.

சண்டையிடும் கட்சிகள் 2022 இல் ஒரு மாத கால போர் நிறுத்தத்தை கடைப்பிடித்தன. இது மோதலுக்கு ஒரு அரசியல் தீர்வுக்கான நம்பிக்கையை எழுப்பியது, ஆனால் பின்னர் அக்டோபரில், அவர்கள் போர்நிறுத்தத்தை நீட்டிக்கத் தவறினர்.

யேமன் மிகக் கடுமையான உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வரும் சூழலில் அப்போரில் கடந்த 2015-ம் ஆண்டு முதல் தலையிட்டுவரும் சவுதி அரேபியாவிற்கு கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 43 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை ஜி-20 நாடுகள் வழங்கியுள்ளன என்பதை ஆக்ஸ்ஃபாம் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. கடந்த 2015-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்து வரும் தாக்குதல்களால் உலகின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தை யேமன் சந்தித்து வருகிறது. பாதி மருத்துவமனைகள் மட்டுமே செயல்படுகின்றன. மேலும், பத்து நாட்களுக்கு ஒருமுறை மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், நீர்த்தொட்டிகள் மற்றும் குடிநீர் கிணறுகளின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடப்பதாக ஆக்ஸ்ஃபாம் கூறியிருக்கிறது.

**யேமனின் பிரிவுக்கும் - போருக்கும் காரணம்?**

யேமன் அதன் வடக்கு மற்றும் தெற்கிற்கும் ஐரோப்பிய காலனித்துவத்தின் பாரம்பரியத்திற்கும் இடையிலான மத மற்றும் கலாச்சார வேறுபாடுகளுடன் நீண்ட காலமாக போராடி வருகிறது. வடக்கில் அமெரிக்கா மற்றும் சவூதி ஆதரவு பெற்ற யேமன் அரபுக் குடியரசும், தெற்கில் சோவியத் ஆதரவு பெற்ற யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசும் ஒன்றிணைந்து 1990 ஆம் ஆண்டில் நவீன யேமன் அரசு உருவாக்கப்பட்டது.

1978 முதல் வடக்கு யேமனை ஆட்சி செய்த ராணுவ அதிகாரி அலி அப்துல்லா சலே புதிய நாட்டின் தலைமையை ஏற்றார்.ஆனால் நாட்டின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில், ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது கடினம், ஏனெனில் இரண்டு இடங்களுக்கு இடையிலான உறவுகள் கடினமாக இருப்பினும், ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு பயணிக்க பல நிபந்தனைகள் உள்ளன. நகரத்தில் பயணம் செய்வதும் சாதாரணமானதாக இல்லை. ஏனெனில் அதற்கு நீண்ட நேரம் ஆகும்.




பொருளாதாரத் தடையால் யேமன் மக்கள் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள் என்பதையும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன. தேவை யான அனைத்து பொருட்களும் மிக அதிக விலை கொண்டவை. குறிப்பாக, உணவு, உடைகள், மளிகைப் பொருட்கள், ஆய்வுப் பொருட்கள் போன்றவை, எனவே அவர்களின் வாழ்க்கையைக் கடப்பதும் சவாலுக்குரியது. பல காரணிகள் இந்த அரசியல் பிளவு களை விரிவுபடுத்தி முழு அளவிலான இராணுவ மோதலுக்கு வழிவகுத்தன.

**ஆதிக்க போராக மாற்றம் :**

யேமன் நாடு போருக்கு மத்தியில் கடுமையான பொதுமக்கள் துன்பப்படும் இடமாக மாறியுள்ளது. இப்போது எட்டு ஆண்டுகளாக இந்த சண்டை ஒரு மறைமுக ஆதிக்க போராக மாறிவிட்டது என்று பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர். யேமன் அரசாங்கத்தை கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராக போரிடுகின்றனர்.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAI) ஆதரவு பெற்ற தீவிரவாத இஸ்லாமிய குழுக்கள் மற்றும் பிரிவினைவாதிகள் உள்ளிட்ட பிற போராளிகளின் தலையீடு, முழு நாட்டையும் சிக்கலாக்கியுள்ளது.

**2018 ஜடாக்ஹோம் ஒப்பந்தம் :**

இந்த நெருக்கடிக்கு தீர்வாக, ஐ.நா. ஆதரவுடன் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. 2018 ஜடாக்ஹோம் ஒப்பந்தம் உதவிக்கான

முக்கிய மையமான துறைமுக நகரமான ஹொடெய்டாவில் ஒரு போர் நிறுத்தத்தை உருவாக்கியது.

ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உரசல் போரை நீட்டிப்பதாக அவதானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சவூதி எண்ணெய் நிலையங்கள் மீதான ஏவுகணை தாக்குதலுக்கு ஹவுத்தி கிளர்ச்சியாளர் கள் பொறுப்பேற்றபோது நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத்தவில்லை என்று ஐ.நா கண்காணிப்பாளர்கள் முடிவு செய்தனர், அதே நேரத்தில் சவுதி தலைமையிலான கூட்டணி ஈரான் மீது குற்றம் சாட்டியது.

ஏப்ரல் 2022 இல் யேமனின் புதிய நிர்வாகக் குழு ஹவுதி எதிர்ப்பு படைகளை ஒருங்கிணைக்க உதவியபோது அமைதி முயற்சிகள் வேகமடைந்தன. இது அனைவரையும் உள்ளடக்கிய பேச்சு வார்த்தைகளுக்கு களம் அமைத்தது. பிற்பகுதியில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கூட்டணிப் படைகளும் பல ஆண்டுகளில் தங்கள் முதல் நாடு தழுவிய போர்நிறுத்தத்தை ஒருங்கிணைத்தனர்.

இதன் பின் தலைநகர் சனாவில் இருந்து வணிக விமானங்களை மீண்டும் தொடங்க அனுமதித்தது மற்றும் சில எரிபொருள் கப்பல்கள் ஹொடெய்டாவில் நிறுத்த அனுமதிக்கப்பட்டன.

போரிடும் கட்சிகள் பல முறை போர்நிறுத்தத்தை நீட்டித்தன, ஆனால் ஆறு மாத ஒப்பீட்டு அமைதிக்குப் பிறகு, அதை மீண்டும் புதுப்பிக்கத் தவறிவிட்டன. இந்த ஒப்பந்தம் முறிந்ததற்கு யேமன் அரசும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். இது மீண்டும் கடுமையான சண்டைக்கு வழி வகுத்து, யேமனை ஒரு முழு அளவிலான நெருக்கடிக்குள் தள்ளியது.

**அமெரிக்க ஆயுதங்கள் :**

அமெரிக்க அரசு சவுதி அரேபியாவிற்கு ஆயுதங்களை கொடுத்தது மட்டுமல்லாமல் அதற்கு அரசியல் ரீயிலான பாது காப்பையும் வழங்கியது. யேமனில் குழந்தைகள் மீதான சவுதியின் தாக்குதலை ”உலகின் வெட்கங்கெட்ட செயலில் ஒன்றாக” அன்று ஐ.நா பட்டியலிட்டது.

சவுதிக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள வாய்ப்புகள் வந்தபோது, அமெரிக்க அரசு பேசாமல் வாய்மூடி இருந்தது. அதே வேளை ஐநாவின் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கி வரும் நிதியாதாரத்தை நிறுத்துவதாக ரியாத் தலைமை மிரட்டியதாக கூறி



சவுதியின் பெயரை அந்த பட்டியலிலிருந்து நீக்கினார் அன்றைய ஐ.நா தலைவர் பன்-கி-மூன்.

அமெரிக்க அரசின் தலையீடோ ஒப்புதலோ இல்லாமல் இது நடந்திருக்க சாத்தியமே இல்லை. ஆகவே பைடனின் இந்த அறிவிப்பும் கூட முதலைக் கண்ணீர் வடித்த கதைதான்.

சவுதி தலைமையிலான எட்டு நாடுகள் யேமன் அரசுக்கு ஆதரவாக உள்நாட்டு மோதலில் தலையிடத் தொடங்கியது பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியது. அனைத்து வான் வழித் தாக்குதல்களுக்கும் இந்த நாடுகளே பொறுப்பானவையாகும்.

அதற்கு தேவையான உத்திகள், தொழில்நுட்ப வசதிகளை அமெரிக்க செய்து கொடுத்தது. சவுதி மற்றும் அதன் கூட்டணி நாடு களுக்கு 2015-2019காலப்பகுதியில் சுமார் 31.4 பில்லியன் டாலர் மதிப்பிலான அயுத ஏற்றுமதி நடந்துள்ளது.

இக்காலகட்டத்தில் ஜி-20 நாடுகள் யேமனுக்கு அளித்த மனிதாபிமான உதவிகளை ஒப்பிடும் போது ஆயுத ஏற்றுமதி ஐந்து மடங்கு அதிகமானதாகும். கூடுதலாக சவுதியும் தன் பங்கிற்கு 3.8 பில்லியன் டாலர் நிதியை நிவாரணமாக வழங்கியது.

அமெரிக்க மற்றும் இங்கிலாந்து நாடுகள் யேமனுக்கு தாங்கள் வழங்கும் உதவித்தொகையை விட பன்மடங்கு ஆயுத விற்பனையை செய்கின்றன. இதேவேளை ஜப்பான் யேமனுக்கு உதவித்தொகையை வழங்குகிறது ஆனால் சவுதிக்கு ஆயுதங்கள் எதுவும் ஏற்றுமதி செய்யவில்லை.

ஒவ்வொரு நாடுகளிலும் உள்நாட்டுப் போர்களை ஊக்கப் படுத்தி வளர்த்துவிட்டு, பில்லியன்கணக்கான டாலர்களை ஆயுத

ஏற்றுமதி மூலம் சம்பாதித்துக் கொண்டே, மற்றொரு புறத்தில் தாம் உருவாக்கி வளர்த்த போரால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு உதவி அளிப்பதாக வள்ளல் வேடம் போடுகின்றன.

பெரும் பணக்கார ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார அடித்தளம், பல நாட்டு மக்களின் மரண ஓலங்களின் மீதும் பிணங் களின் மீதும்தான் கட்டமைக்கப் பட்டிருக்கின்றன

**யேர்மன் சிறார்கள் வாழ்க்கை:**

யேமனில் மோதலில் வளரும் குழந்தைகளின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. குழந்தைகள் நன்றாக இருக்க, அவர்கள் பாதுகாப்பாகவும், நேசிக்கப் படவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் வேண்டும். அவர்கள் தங்கள் குடும்பத்தினரால் கவனிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் சமூகத்தால் ஆதரிக்கப்பட வேண்டும் எடுத்துக்காட்டாக, பள்ளி மூலம். ஆனால் மோதல் வலயங்களில் வாழும் மில்லியன் கணக்கான குழந்தைகளுக்கு, இந்த முக்கியமான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. குழந்தைகளின் ஆரோக்கி யத்தில் மோதலின் தாக்கம் உடல் மற்றும் மன ரீதியாக பேரழிவை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு வான்வழித் தாக்குதல், முற்றுகை மற்றும் கடுமை யான மீறல் ஆகியவை இப்போது மற்றும் வரவிருக்கும் ஆண்டுகளில் குழந்தைகளின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

அங்கே பெரும்பாலான குழந்தைகள் சிறு வயதிலிருந்தே தங்கள் குடும்பங்களையும் தங்களையும் கவனித்துக் கொள்ளவும் பராமரிக்கவும் வேலை செய்கிறார்கள். மிகக் கடுமையான உண்மையும், இதற்குக் காரணமும் போர்களில் பெற்றோரை இழந்ததே ஆகும்.

**குழந்தைகள் உள ஆரோக்கியம் :**

யேமனில் நடக்கும் மோதல் குழந்தைகளின் உடல் ஆரோக்கி யத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தாலும், அது அவர்களின் மன நலனுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

சேவ் தி சில்ட்ரன் நடத்திய ஒரு ஆய்வில், பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் சோகம் மற்றும் மனச்சோர்வு உணர்வுகளுடன் போராடுவ தாகக் கூறினர், பத்தில் ஒருவர் தொடர்ந்து அவ்வாறு உணர்கிறார். கணக்கெடுக்கப்பட்ட குழந்தைகளில் ஐந்தில் ஒருவர் எப்போதும் பயப்படுவதாகக் கூறினார்.

குழந்தைகள் குண்டுகள் மற்றும் நோய்களால் அன்புக்குரியவர்

*களை இழந்துள்ளனர், அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களைச் சுற்றியுள்ள வன்முறையைக் காண்கிறார்கள், மேலும் தங்கள் சகோதர சகோதரிகள் பள்ளியிலிருந்து திரும்ப மாட்டார்கள் என்று அவர்கள் பயப்படுகிறார்கள்.*

*எடுத்துக்காட்டாக, 56% குழந்தைகள் தனியாக நடக்கும்போது பாதுகாப்பாக உணரவில்லை, 16% குழந்தைகள் ஒருபோதும் அல்லது அரிதாகவே ஓய்வெடுக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள், மேலும் 38% பராமரிப்பாளர்கள் குழந்தைகளின் கனவுகள் அதிகரிப்பதாக தெரிவித்தனர்.*

*இன்று உலகெங்கிலும் மோதல் மண்டலங்களில் வாழும் சுமார் 24 மில்லியன் குழந்தைகள் அதிக அளவு மன அழுத்தத்தை அனுபவிக்கக்கூடும் என்றும் லேசான மற்றும் மிதமான மன ஆரோக்கி யத்தைக் கொண்டிருக்கலாம் என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது. கூடுத லாக 7 மில்லியன் குழந்தைகள் கடுமையான மனநலக் கோளாறுகளை உருவாக்கும் அபாயத்தில் உள்ளனர்.*

*(மாசி 2023)*




## துனிசியா – மல்லிகைப் புரட்சியா அன்றில் கிளர்ச்சியா ?

### அரபு வசந்தமாக தொடங்கி முடிவின்றி தொடரும் போர்..
### ஆதிக்க சக்திகளின் சுயநலனுக்காக பாரிய மனிதப் பேரழிவு..

*துனிசியாவில் 2010 ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக மல்லிகைப் புரட்சி என்ற பெரும் கிளர்ச்சி வெடித்தது. சுமார் 2 ஆண்டுகாலம் இந்த கிளர்ச்சி துனிசியாவில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியது. இப்படியாக ஆரம்பித்த அரபு வசந்தம் தான் அரபு நாடுகளையும், ஆப்பிரிக்க நாடுகளையும் தற்போதும் பதம் பார்த்து கொண்டிருக்கிறது.*

**ஆட்டிப் படைக்கும் அரபு வசந்தம் :**

*துனிசியாவில் தொடங்கிய இந்த கிளர்ச்சிதான் மத்திய கிழக்கு அரபு நாடுகளையும் வடக்கு ஆப்பிரிக்கா தேசங்களையும் "அரபு*

வசந்தங்களாக" ஆட்டிப் படைத்தது. இதன்பின் எகிப்து, லிபியா, யேமனில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தின. அரபு வசந்தம் தான் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பேரழிவையும் விளைவித்துள்ளது.

இறுதியாக சிரியாவில் தொடங்கிய உள்நாட்டு யுத்தம் 3 ஆவது உலக யுத்தத்தைப் போல விஸ்வரூபமெடுத்து பாரிய அழிவைச் சந்தித்து நிற்கிறது. இந்த அரபு வசந்தத்தின் தாக்குதலுக்கு அல்ஜீரியா, ஈராக், ஜோர்டான், குவைத், மொராக்கோ, சூடானும் தப்பவில்லை.

சவூதி, ஓமன், மேற்கு சகாராவிலும் சாடையாக அரபு வசந்தம் எட்டிப் பார்த்து ஓய்ந்தது.

**அரபு வசந்தமும் -அதன் விளைவும்:**


அரபு வசந்தமும், அதனுடைய போரின் விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியில் 600 பில்லியன் டாலருக்கு மேலான நஷ்டத்தை விளைவித்திருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் பொருளாதர அவையின் ஆய்வு தெரிவிக்கிறது.

2010 ஆம் ஆண்டு "அரபு வசந்தம்" என்று கூறப்பட்ட எழுச்சி ஏற்படுவதற்கு முன்னர் மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் இருந்த வளர்ச்சி கண்ணோட்டத்தை அடிப்படையாக வைத்து ஐக்கிய நாடுகள் அவையின் மேற்கு ஆசியாவுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் இந்த ஆய்வை மேற்கொண்டது.

அத்துடன் இந்த பிராந்திய நாடுகளின் தேசிய ஒட்டு மொத்த உற்பத்தியில் 6 சதவீதத்துக்கு இந்த இழப்பு சமம் என்று ஐநாவின் இந்த புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. போர்களும், பாதுகாப்பின்மையும், சுற்றுலா துறையால் கிடைக்கின்ற வரவை பாதித்து, வெளிநாட்டு முத லீட்டையும் தடுத்து, கடன், வேலை வாய்ப்பின்மை மற்றும் ஊழல் போன்ற பொருளாதார பிரச்சனைகளை மோசமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

**அமெரிக்காவின் சுயநலத்திற்கான போர்கள்:**

அரபு வசந்தத்தை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தங்களது ஆதாயத்துக்காக பயன்படுத்திக் கொண்டன என்பது வெளிப்படை. தாம் விரும்பிய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்து வதற்கான கருவியாக இந்த அரபுவசந்தம் அமெரிக்காவுக்கு பேருதவி யாக இருந்தது. கிளர்ச்சி குழுக்களுக்கு ஆயுத உதவியையும் தார்மீக ஆதரவையும் அமெரிக்கா அள்ளி வழங்கியது. ஆனால் சிரியாவில் அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது ரஷ்யா. அமெரிக்கா ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களையும் ஐஎஸ் பயங்காரவாதங்களையும் ரஷ்யா தடுத்து நிறுத்தியது. சிரிய நாட்டுடன்




ஈரானும் கை கோர்த்தது.

சிரியாவில் அரபு வசந்தம் என தொடங்கிய உள்நாட்டு யுத்தம் இப்போதும் தொடர்வது கவலைக்குரியதே. சிரியாவின் உள்நாட்டுப் போர், சர்வதேச நாடுகளின் தலையீட்டால் பாரியளவில் உயிர் இழப்புக்களை சந்தித்தது. ஆயினும் இப்போரின் நிகழ்கால நிலவர உண்மையாக இப்போரில் எவரும் வெற்றியோ- தோல்வியடைய வில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும்.

**எகிப்தில் ஹொஸ்னி முபாரக் பதவி விலகல்:**

அரபு வசந்தம் எகிப்திலும் சனவரி 2011 முதல் தொடர்ந்து நிகழ்ந்தது. தெருப்போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் ஒத்துழை யாமையையும் ஏற்படுத்தி, கடந்த 30 ஆண்டுகளாக பதவியில் இருந்த அதிபர் ஹொஸ்னி முபாரக்கின் பதவி விலகலை இலக்காகக் கொண்டு அதில் வெற்றியும் கண்டன. எகிப்தில் காவல்துறையின் கொடுஞ் செயல்கள், நெருக்கடி நிலைச் சட்டங்கள், வேலையின்மை, குறைந்த ஊதியத்தை உயர்த்த வேண்டியத் தேவை, குடியிருப்பில்லாமை, உணவுப்பொருட்களின் விலை உயர்வு, அரசியல் ஊழல், பேச்சுரிமை மறுக்கப்படுதல், மோசமான வாழ்நிலை போன்ற காரணங்களுக்காக இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. 2010-11 துனீசியா புரட்சியின் பின்னணியில் எகிப்திய பொது மக்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி போராட்ட அமைப்பாளர்கள் முயன்று இறுதியில் வென்றனர்.

இறுதியாக 11 பெப்ரவரியில் அதிபர் முபாரக் முனைப்புடன் செயல்பட்ட பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கிடையே தமது பதவியிலிருந்து விலகினார்.

**யெமனிலும் போராட்டங்கள்:**

*2011 யெமனிலும் இத்தகைய கிளர்ச்சி, துனீசியப் புரட்சியின் துவக்க காலத்திலேயே தொடங்கி பிற அரபுலக போராட்டங்களின் காலத்திலேயே இணையாக எழுந்தது. துவக்கத்தில் வேலையின்மை, பொருளாதாரநிலை, ஊழல் குறித்தே போராட்டங்கள் நடந்தன யெமன் நாட்டு அரசியலமைப்பை மாற்றும் அரசின் திட்டத்திற்கு எதிராகவும் போராட்டங்கள் நிகழ்ந்தன. எழுச்சியின் உச்சகட்டமாக யெமன் தலைவர் அலி அப்துல்லா சாலேயின் பதவி விலக்க போராட்டங்கள் வலுப்பெற்றன. எண்ணெய் வளம் மிக்க அரபு நாடு களில் மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்து பொதுமக்கள் பெரும் கையறு நிலையில் தவித்துக் கொண்டனர். அமெரிக்காவின் உலக மேலாதிக்கக் கனவுகள் நிறைவேறத் தேவையென்றால் எந்த நாட்டின் மேலும் எப்போது வேண்டுமானாலும் தனது இராணுவத்தை பலத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏவிவிடலாம் என்கிற ஒரு நிலையை ஈராக் யுத்தத்திற்குப் பின் அமெரிக்கா நிலைநாட்டியது.*

*இறையாண்மை, தேசம், தேச எல்லைகளின் புனிதம் என்றெல்லாம் பேசினாலும், அமெரிக்க ராணுவ பலமும் தொழில் நுட்ப வல்லமையால் தனது பொம்மை அரசை நிறுவி எண்ணெய் வளத்தை அரபு நாடுகளில் இருந்து தாராளமாக சுரண்டுகிறது.*

**லிபியாவில் தொடரும் உள்நாட்டுப் போர் :**

*லிபியாவில் ஏற்பட்ட நெருக்கடி 2011 ஆம் ஆண்டின் முற்பகுதி யில் வன்முறை தொடங்கியதிலிருந்து பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.*

*உள்நாட்டுப் போர் நிகழும் லிபியாவில் 60 பில்லியன் பேரல் எண்ணை வளம் உள்ளது. உலகின் மொத்த எண்ணை மற்றும் எரிவாயு வளத்தில் 3.34% லிபியாவில் இருக்கிறது. இந்தப் போரின் பின்னால், லிபியாவின் எண்ணெயை எடுத்து விற்பதற்கான முழு உரிமையை ஈட்டிக் கொடுப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது ஆதாரங் களின் மூலம் அம்பலமானது. இதனையே 2011 இல்அரபு வசந்த மாற்றமாக அமெரிக்க முன்னெடுத்த போர் லிபியாவில் நிகழ்ந்தது.*

*ஈராக்கில், சாதித்து விட்டோம் என்று ஜோர்ஜ் புஷ் அறிவித்தது போன்று லிபியாவில் கடாபி வீழ்ந்தவுடன், "நான் அனைவரும் சேர்ந்து வெற்றியை சாதித்திருக்கிறோம்" என்று அறிவித்தார் அன்றைய நேட்டோ தலைவர். ஆயினும் மற்றொரு புறம் அமெரிக்கா உதவி யுடன் விடுதலை பெற்றதாக கூறப்படும் அரபு நாடுகளின் நிலை என்பதை லிபியாவின் நிலையிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.*



லிபியாவில் தொடரும் தற்போதைய நெருக்கடியானது, அந்நாட்டின் மனிதாபிமான பிரச்சனையையும், அரசியல்-இராணுவ உறுதியற்ற தன்மையையும் தோற்றுவித்துள்ளது.

லிபியாவில் நிகழ்ந்த 2011 ஆம் ஆண்டின் அரபு வசந்த ஆர்ப்பாட்டங்களில் தொடங்கிய உள்நாட்டுப் போர், வெளிநாட்டு இராணுவத் தலையீடுகளை தொடர்ந்து கடாபியின் மரணத்திற்கும் வழிவகுத்தது. அரபு நாடுகளில் செல்வந்த நாடாக ஓர் காலத்தில் திகழ்ந்த லிபியாவின் தலைநகர் திரிப்போலியில் உள்நாட்டுப் போரின் விளைவாக ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் நாடு முழுவதும் வன்முறை மற்றும் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுத்துள்ளது.

**ஈராக்கில் சாதித்தது என்ன?**

ஈராக்கில் அமெரிக்கா கொண்டு வருவதாகச் சொன்ன ஜன நாயகமும் சுதந்திரமும் தனது பொருளாதார நலன்கள் நோக்கியதே. 2003 இல் அமெரிக்காவின் ஈராக் போர் என்பது நேரடி ஆக்கிரமிப்பு என்பதையும் கடந்த ஒன்றாகும். வட ஆப்ரிக்கா, மத்திய கிழக்காசிய மற்றும் மத்திய ஆசியப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக, உலகின் 60% எண்ணை வளத்தை கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் விரி வான திட்டத்தின் ஒரு சிறிய அங்கம் தான் ஈராக் போர் என புலப்பட்டது.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் மார்ச் 2011 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2022 ஆம் ஆண்டு வரை 4,76600 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆனால், இது உண்மையான எண்ணிக்கை இல்லை என்றும் இதனை விட அதிகமென மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இப்போரில் சிரிய அதிபர் பஷார் அல்

ஆசாத்துக்கு ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் உதவின. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் ஆரம்பக்கட்டத்தில் பாரிய அளவில் கிளர்ச்சியாளர்களுக்கு உதவின. பின்னர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக துருக்கி மற்றும் சில அரபு நாடுகள் உதவி இருந்தன. தற்போது 12 ஆண்டுகளாக நடக்கும் சிரிய போர் எப்போது முடிவுக்கு வரும் என்று யாராலும் கணிக்க முடிய வில்லை.

போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தற்போது வரை தோல்வியே அடைந்துள்ளன. இந்த நிலையில் சிரிய அதிபர் பஷார் பதவி விலகல் ஒன்றையே கிளர்ச்சி யாளர்கள் சிரிய போரை முடிவுக்கு கோரிக்கையாக வைக்கின்றனர். கிளர்ச்சியாளர்களின் இந்தக் கோரிக்கையை பஷார் ஏற்கத் தயாராக இல்லை. இந்த நிலையில்தான் சிரிய உள்நாட்டுப் போர் பன்னிரண்டா வது ஆண்டில் நுழைந்திருக்கிறது. அதிகாரத்திற்காக தொடங்கப்பட்ட சிரிய போர் இன்னமும் தொடர்கிறது

**சிரிய போரின் தாக்கம் :**

சிரியாவில் கிட்டத்தட்ட எழுபது வீத மக்கள் மிகவும் கொடுமையான வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். விலைவாசி மற்றும் உணவுத் தட்டுபாட்டால் ஆறு மில்லியன் மக்கள் உணவில்லா மல் இன்னமும் தவிக்கின்றனர். சில பகுதிகளில் உள்ள மக்கள் தங்களில் 15 முதல் 20 சதவிகித வருவாயை குடிநீரிற்காக செலவிடுகிறார்கள்.

மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு உதவிகள் சென்று சேர முடியாத நிலையை போரில் ஈடுபட்டுள்ள குழுக்கள் உரு வாக்கியுள்ளன. சுமார் 2.98 மில்லியன் மக்கள் உதவிகள் சென்றடைய முடியாத பகுதிகளில் உள்ளனர். அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்த போரில் முக்கிய பங்காளிகளாக அமைவதால் போரின் தீவிரம் தணிந்தாலும், போர் இன்னமும் முடிவுறவில்லை. உண்மையிலேயே அரபு வசந்தத்தை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தங்களது ஆதாயத்துக்காக பயன்படுத்திக் கொண்டன. தாம் விரும்பிய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துவதற்கான கருவியாக இந்த அரபுவசந்தம் அமெரிக்காவுக்கு பேருதவியாக இருந்தது. ஆயினும் அரபு வசந்தமும், அதனுடைய விளைவுகளும் அந்த பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு பாரிய பொருளாதர நஷ்டத்தை விளைவித்திருக்கிறது. அத்துடன் அரபு வசந்ததால் அரபு, ஆப்பிரிக்க நாடுகளின் பாரிய மனிதப் பேரழிவையும் ஏற்படுத்தியுள்ளமை கவலைக்குரியதே.

(தை 2023)



## ஈரான்– புதிய கலாச்சார புரட்சி:

### ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமா..
### இஸ்லாமியப் புரட்சியில் பெண்களின் வகிபாகம்..

*1979 இல் நடந்த ஈரான் இஸ்லாமியப் புரட்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தமையினால், முன்னைய ஆட்சியாளர் முகமது ரெசா ஷா பாஹ்லவி அதிகாரத்தை விட்டு வெளியேற்ற பெரிதும் உதவியது வரலாற்று சான்றாகும். ஆனால் அயோத்துல்லா கொமேனி ஈரான் மீது கட்டுப்பாட்டை எடுத்தபின், கணிசமான எண்ணிக்கையில் பெண்கள் தங்கள் உரிமைகளை இழந்தனர் என்பதும் உண்மையே.*

*ஈரானிய புரட்சியின் பின்னரே, எல்லா பெண்களும் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளர்கள் உட்பட ஹிஜாப் கட்டாயமாக அணிய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டது.*

*1989 இல் கோமினியின் மரணத்திற்குப் பிறகு, மகளிர் மீதான கடுமையான சட்டத்தின் சில பகுதிகள் நீக்கப்பட்டன.*

*குறிப்பாக தெஹ்ரான் மற்றும் பிற பெரிய நகரங்களில் உள்ள பெண்கள், சுதந்திரமாக வெளியே செல்லத் துவங்கினர், ஆனால் தங்கள் தலைமுடி மற்றும் முழுமையான ஒப்பனை கொண்ட ஹிஜாப் அணிந்தே செல்ல வேண்டியிருந்தது.*

**கடுமையான ஆடைக் கட்டுப்பாடு:**

*ஆயினும்கூட, 1979ஆம் ஆண்டின் பின்னர் ஈரான் பெண் களுக்கு பலவீனமான உரிமைகளேயே தொடர்ந்து எதிர்கொண்டனர். ஈரானில் பெண்களுக்கான உடை கட்டுப்பாடு கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. ஹிஜாப் கட்டுப்பாடுகளை மீறும் பெண்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடான ஈரானில், எல்லா நேரங்களிலும் பெண்கள் ஹிஜாப் அணிய வேண்டும், 7 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தலைமுடியை முழுதும் மறைக்கும் வகையில் கட்டாயம் ஹிஜாப்பை அணிய வேண்டும் என்று அரசு கடுமையான ஆடைக் கட்டுப்பாட்டை விதித்திருக்கிறது. இதன் காரணமாக, இரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சிக்கு அந்த நாட்டுப் பெண்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.*

*ஹிஜாப் அணியாத 22 வயதான குர்திஷ் பெண் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின் ஈரானில் போராட்டம் தீவிரம் அடைந்தது. குர்திஷ் பெண் மக்சா அமினியின் உடல், செப்டம்பர் 17 அன்று காலை, அடக்கம் செய்வதற்காக அவரது தாயகமான குர்திஸ்தான் மாகாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஹிஜாப் அணியாததால் இளம்பெண் அடித்து கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஈரானில் குர்திஷ் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

**குர்திஸ்தானில் ஹிஜாப் விவகாரம்:**

*ஈரான் நாட்டில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குர்திஸ்தானில் சரியாக ஹிஜாப் அணியவில்லை எனக் கூறி மாஷா அமினி என்பவரை போலீசார் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்ட இளம்பெண்ணை போலீசார் கடுமையாக தாக்கியதாக தெரிகிறது. இதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.*




**ஈரானில் ஹிஜாபை கழற்றி எறிந்து போராட்டம்**

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹிஜாப்பை கழற்றி எறிந்தும், அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியும் போராட்டம் நடத்தி வந்தனர். இதனால் ஈரானில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

மக்சா அமினி இறந்ததை அடுத்து, ஈரானில் தொடர்ச்சியான போராட்டங்கள் வெடித்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆரம்பத்தில் ஈரான் தலைநகரான தெஹ்ரானில் உள்ள கஸ்ரா மருத்துவ மனைக்கு வெளியே கூடினர். அங்கு தாக்குதலுக்கு உள்ளான அமினி சிகிச்சை பெற்று வந்தார். போராட்டக்காரர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மிளகாய்த் தூளைப் பயன் படுத்தியதாகவும், பலர் கைது செய்யப்பட்டதாகவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

**வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு**

குர்திஷ் மனித உரிமைகள் அமைப்பான ஹெங்காவைச் சேர்ந்த சோமா ரோஸ்டமி கூறுகையில், "பதற்றத்தைத் தடுக்க எந்த சடங்கும் இல்லாமல் இறுதிச் சடங்கு நடத்த அமினி குடும்பத்தை அரச படைகள் கட்டாயப்படுத்தின. அரச படைகளின் எச்சரிக்கைகள் இருந்த போதிலும், நூற்றுக்கணக்கான மக்கள் அமினியின் சொந்த ஊரான சாக்வேஸில் அடக்கம் செய்வதற்காக கூடினர். சிலர் "சர்வாதிகாரி மரணிக்கட்டும்"என "அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்" என அவர் கூறினார்.

குர்திஷ் சிவில் சமூக அமைப்புகள் குர்திஸ்தான் மாகாணம்

முழுவதும் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தனர். ஈரானின் சர்வாதிகாரத் தலைவரான அயதுல்லா கமேனியின் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்த சக்கேஸில் போராட்டக்காரர்களின் காணொளிகள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன.

மஹ்சா அமினி இறந்ததை அடுத்து ஈரானில் தொடர் போராட்டங்கள் வெடித்தன. பெண்கள் தலைமுடியை வெட்டியும், ஹிஜாப்களை எரித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைதான அமினி கொடூரமாக தாக்கப்பட்டதாக கூறப்படு கிறது. இந்த குற்றச்சாட்டை மறுத்த ஈரான் பொலிஸார், அவர் மாரடைப்பால் இறந்ததாகக் கூறினர். அமினியின் உறவினர் ஒருவர் கூறுகையில், அவருக்கு இதய நோயின் வரலாறு இல்லை என்றார்.

**ஹிஜாப் எரித்து போராட்டம் :**

இந்நிலையில், பெண்கள் போராட்டம் தொடர்பாக ஈரானிய பத்திரிகையாளரும் ஆர்வலருமான மசிஹ் அலினெஜாட் டுவிட்டரில் ஒரு வீடியோவை பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: “ஈரானிய பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டுவதன் மூலமும், ஹிஜாபை எரிப்பதன் மூலமும் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

அந்த வகையில் , 22 வயதான மஹ்சா அமினி என்ற இளம் பெண்ணை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் உயிரிழந் துள்ளார். மறைக்கவில்லையென்றால் எங்களால் பாட சாலைக்கு செல்லவோ அல்லது வேலை செய்யவோ முடியாது. இந்த பாலின நிறவெறி ஆட்சியால் நாங்கள் சோர்வடைகிறோம், ”என்று அவர் எழுதினார்.

**34 போராட்டக்காரர்கள் பலி :**

இதையடுத்து, அமைதியான போராட்டக்காரர்கள் மீது ஈரானின் சக்சேஸ் பகுதியில் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். 34 போராட்டக்காரர்கள் பலியானதுடன் பலர் காய மடைந்துள்ளனர்.

ஈரானிய அரசின் புதிய ஆடைக் கட்டுப்பாடு விதி முறைக்கு எதிராக ஆத்திரமடைந்த சமூக ஆர்வலர்களும், பெண் செயற் பாட்டாளர்களும், அரசுக்கெதிராகப் போராட்டத்தில் இறங்கியிருக் கின்றனர். ஏராளமான பெண்கள் தனிப்பட்ட முறையில் தங்களின் தலைமுடியை வெட்டி, ஹிஜாப்பை எரித்து அரசுக்குத் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர். அதன் வீடியோக்களும் சமூக




வலைதளங்களில் வேகமாகப் பரவிவருகின்றன.

இது குறித்து இரானியப் பத்திரிகையாளர், மகளிர் செயற் பாட்டாளர் அலினெஜாட் (Masih Alinejad) ஆகியோர், போலீஸாரால், மஹ்சா அமினி கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்விதமாக ஈரானியப் பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டியும், ஹிஜாபை எரித்தும் தங்களின் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். பெண்கள், 7 வயதிலிருந்து தலைமுடியை மறைக்கவில்லையென்றால் பள்ளிக்குச் செல்லவோ, வேலை செய்யவோ முடியாது. இந்தப் பாலின வெறி ஆட்சியால் நாங்கள் மிகவும் சோர்வடைந்துவிட்டோம்" என பதிவிட்டிருக்கின்றனர்.

**விளம்பரங்களில் பெண்கள் நடிக்கத் தடை :**

சில வருடங்கள் முனபும் மக்னம் ஐஸ்கிறிம் விளம்பரத்தில் ஈரானின் புனித விதிகளை மீறுவதாக விளம்பரத்தில் வரும் அப்பெண் தளர்வாக ஹிஜாப் அணிந்து கலாசாரத்தை மீறியுள்ளார் என்றும், அவர் கண்ணியமாக இல்லை என குற்றம் சாட்டப்பட்டது. இதன்பின் ஹிஜாப் மற்றும் ஒழுக்க விதிகளின்படி, பெண்கள் விளம்பரங்களில் நடிப்பதற்கு அனுமதி இல்லாமல் போனது.

ஈரானில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக உள்ளன. குறிப்பாக ஹிஜாப் அணிவது, சமூக ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதை போன்ற வரையறைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்த விதிகளை மீறும் பெண்களுக்குக் கடுமையான தண்டனைகளையும் ஈரானிய அரசு வழங்குகிறது.

இந்நிலையில், மேக்னம் (Magnum) ஐஸ்கிரீம் விளம்பரம்

ஒன்றில் பெண் ஒருவர் தனியாக காரில் பயணிக்கும் போது, பக்கத்து இருக்கையை பார்த்து, சில முறை சிரிக்கிறார். பின்னர் காரை நிறுத்தி விட்டு இருக்கையில் கைவைத்து, மேக்னம் ஐஸ்கிரீமை எடுத்து காரில் இருந்து வெளியே வந்து ருசித்து சாப்பிடுகிறார்.

இந்த விளம்பரம் குறித்து, ஈரானின் கலாசாரம் மற்றும் இஸ்லாமிய வழிகாட்டுதல் அமைச்சகம், “ஈரானின் புனித விதிகளை மீறுவதாக இந்த விளம்பரம் உள்ளது. விளம்பரத்தில் வரும் அப்பெண், கண்ணியமாக இல்லை, தளர்வாக ஹிஜாப் அணிந்து கலாசாரத்தை மீறியுள்ளார். ஹிஜாப் மற்றும் ஒழுக்க விதிகளின்படி, பெண்கள் இனி விளம்பரங்களில் நடிப்பதற்கு அனுமதி இல்லை“ எனத் தெரி வித்துள்ளது.

இதன் பின்னர் ஈரானின் இஸ்லாமியக் குடியரசின் பொறுப்பு சரியானதை கட்டளையிடுவது, தீமையை தடுப்பது. பொது ஒழுக்கத்திற்கு எதிராகவும், பெண்களின் மதிப்புகளை அவமதிக்கும் வகையிலும் இரண்டு சர்ச்சைக்குரிய விளம்பரங்களை வெளி யிட்டதற்காக குற்றம் சாட்டி ஐஸ்கிரீம் உற்பத்தியாளர் நிறுவனமான டோமினோவுக்கு எதிராக ஈரானிய அரசு வழக்கை தாக்கல் செய்ததும் அறிந்ததே.

ஈரானில் புதிய கலாச்சார புரட்சி ?

தற்போது பெண்களின் இந்த தொடர் போராட்டங்கள் ஈரானின் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சிக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்படுகின்றன. இஸ்லாமிய ஆட்சிபீடத்திற்கு எதிரான போராட் டமாக விரிவடையும் வாய்ப்பும் உள்ளது. இக்கால ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமானால் ஈரானில் புதிய கலாச்சார புரட்சி உருவாகும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

*(மாசி 2023)*



## பலூஜா – ஈராக்கில் இன்னொரு “மைலாய்” படுகொலை:

### ஈராக்கில் பேரழிவு இரசாயன ஆயுத பொய்யும்– போரும்..
### அமெரிக்க ஆக்கிரமிப்பால் பிணக் குவியலான ஃபலூஜா..

இருபது வருடங்களுக்கு முன்னர் ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003 ல் ஃபலூஜாவின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றதில் இருந்து தொடங்கிய கோரமான போரே Battle of Fallujah ஆகும். ஈராக்கில் பிணக் குவியல் மேல் நாட்டப்பட்ட ஜனநாயகம். ஈராக்கில் இன்னோரு “மைலாய்” படுகொலையே - ஃபலூஜா ஆகும்.

2003 இன் ஆரம்ப நாட்களில் ஈராக்கின் சதாம் அரசு பேரழிவு இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், அது மனித இனத்துக்கே ஆபத்து என்றும் அப்பட்டமான பொய்யை கூறிய அமெரிக்கா தனது புளுகு மூட்டைகளில் இருந்து பேரழிவு

ஆயுதங்களை அவிழ்த்துவிட்டு ஈராக்கின் இடிபாடுகள், பிணக் குவியல்கள் மேல் "ஜனநாயகத்தை" நிலைநாட்டியது தான் மிச்சம் எனலாம். இதனையே இன்றைய ஈராக்கில் காணலாம்.

**அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த ஃபலூஜா** (Battle of Fallujah)

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஈராக் மக்களின் மிகப்பாரிய போராட்டமாக வெடித்துக் கிளம்பிய முதல் நகரம் தான் ஃபலூஜா. ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு மேற்கே 48 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்நகரம்.

ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா ஏப்ரல் 28, 2003 ல் ஃபலூஜா வின் ஒரு பள்ளிக்கூடத்தை இராணுவ முகாமாக மாற்ற முயன்றது. இருநூறுக்கும் மேலான மக்கள் உடனடியாகக் கூடி இந்த முயற்சியை முறியடிக்கப் போராடினர். அவர்கள் மீது அமெரிக்க ராணுவம் தாறுமாறான துப்பாக்கி சூடு நடத்தி 17 பேரைக் கொலை செய்தது.

அடுத்த இரண்டாவது நாளில் இந்த படுகொலையைக் கண்டித்துப் போராடிய மக்கள் மீது மீண்டும் அமெரிக்க சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் கொல்லப்பட்டனர்.

இச்செயல் பரந்துபட்ட ரீதியில் ஈராக்கிய மக்களின் கோபா வேசத்தை மூண்டெழச் செய்தது. ஃபலூஜா அமெரிக்க ஆக்கிரமிப்புக் கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தின் மையமானது.

**எண்ணை வள ஆக்கிரமிப்பு:**

ஈராக்கில் கால் பதிக்காமல் எண்ணை வளப் பிராந்தியத்தில் தன் ஆதிக்கத்தையும் தனது உலக மேலாதிக்கத் திட்டத்தையும் நிறை வேற்றுவதை அமெரிக்காவால் முடியாது. நெடுந்தொலைவில் இருந்து குண்டு வீசினாலும் ஈராக்கின் எண்ணை வயல்களை இலகுவாக உறிஞ்சு கைப்பற்ற முடியாது.

இதனாலேயே பீதியுடன் கால் பதித்த அமெரிக்க பொம்மை அரசாலும், பிரித்தாளும் சூழ்ச்சியாலும் மட்டுமல்லாமல் தான் அடைந்த அதே பீதியை மக்களுக்கு ஏற்படுத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளாலுமே ஊன்றிய காலை உறுதி செய்துகொள்ள முயற்சித்தது.

பலூஜாவில் கொடூரமான போர்க் குற்றங்கள் பல செய்திருந்த "ப்ளாக்வாட்டர் யூ.எஸ்.ஏ" (BlackWater USA) என்ற தனியார் கூலிப் படையின் அணி வரிசையை மார்ச் 31, 2004 அன்று வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் ஒன்று தடுத்து நிறுத்தி அவர்களுக்கு தண்டனை வழங்கியது.



பாரிய அமெரிக்க இராணுவ மேலாதிக்கத்துக்கு எதிராக ஃபலூஜா மக்கள் நடத்திய போராட்டங்களும், அடைந்த வெற்றிகளும் நாடெங்கிலும் மக்களால் கொண்டாடப்பட்டது, உலகத்தார் கவனத்தை எல்லாம் ஃபலூஜா தம் பக்கம் ஈர்த்துக் குவித்தது. அதனால் அமெரிக்க ஆக்கிரமிப்பு கேள்விக் குறியாக்கப்பட்டது.

**பெண்டகன் சுற்றி வளைத்த ஃபலூஜா:**

பழிவாங்கும் முகமாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் நவம்பர், 2004-ல் ஃபலூஜா நகரினை சுற்றி வளைத்தது. உள்ளிருப்போர் அனைவரும் எதிரிகள் என்று அறிவிக்கப்பட்டனர். நகரம் படுபயங்கரமான ஆயுதங்கள் தரித்த ஈவிரக்கமற்ற ஏராளமான இராணுவத்தினரின் போர்க்களம் ஆக்கப்பட்டது. தப்பி ஓட முயன்ற மக்கள் குடும்பத்துடன் மீண்டும் அந்த கொலைக் களத்தில் பிடித்துத் தள்ளப்பட்டனர்.

பேரழிவு இரசாயன ஆயுதங்கள் மறைத்து வைக்கப் பட்டிருப்பதாக ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் இறங்கிய அமெரிக்கா தான் வெள்ளைப் பாஸ்பரஸ் என்ற இரசாயனப் பொருளை மிகப் பெரும் அளவில் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தியது.

போர்க்களத்தை ஒளியூட்டவே வழக்கமாய் பயன் படுத்தப் படும் இந்த இரசாயனம் மரணத்தை விளைவிக்கும் பயங்கரமான இரணங்களை ஏற்படுத்தக் கூடியது.

கதவுகள், சன்னல்கள் போன்ற கட்டுமானப் பொருட்கள், அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மக்களின் உடைகள் என தன் வழிப் பட்ட தடைகள் அனைத்தையும் எரித்துக்கொண்டு முன்னேறி

*இறுதியில் மனிதத் தோலையும், உள்ளிருக்கும் எலும்பையும் தின்று செறிக்கும் அகோரப்பசி கொண்டது அந்த இரசாயனம்.*

**அமெரிக்காவின் வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதல் :**

*வெள்ளைப் பாஸ்பரஸ் தாக்குதலில் மக்கள் பதுங்கி இருக்கும் பாதுகாப்பான குடியிருப்புக் கட்டிடங்களின் உள்ளிருக்கும் பிராண வாயுவையும் உரிஞ்சி எடுத்துவிடும். பயங்கர தீமைத்தன்மை கொண்ட வெள்ளைப் பாஸ்பரஸ் இத் தாக்குதலில் ஏராளமாகப் பயன்படுத்தப் பட்டது. இத்தோடு நில்லாமல் சொல்லொணாத் துயரைத் தலைமுறை தலைமுறைக்கும் விளைவிக்கும் கதிர்வீச்சுத் தன்மைகொண்ட ஏராள மான குண்டுகள் இந்த நகரத்தின் மீதான குவிந்த தாக்குதலில் பயன் படுத்தப்பட்டன என்றும் அஞ்சப்பட்டது.*

*அமெரிக்க இராணுவத்தால் உயிருடன் பிடித்துச் செல்லப் பட்ட மக்கள் 1300-1500 மக்கள் அனைவரும் படுகொலை செய்யப் பட்டனர். இதையே வேறு சொற்களில், "ஆயுதப் போராளிகள்" 1400 பேர் கொல்லப்பட்டனர் என்ற தனது மேற்குலக ஊடகங்களின் அறிவிப்பின் மூலம் வெளிப்படுத்தியது அமெரிக்கா.*

*போர் வெறி கொண்ட இராணுவம் ஃபலூஜா மக்களைப் பழி வாங்கும் தனது நோக்கத்தை இந்த செயலின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டது. படுகாயமுற்றுப் பரிதாப நிலையில் இருந்த ஒரு ஈராக்கியரை அமெரிக்க சிப்பாய் ஒருவன் சுட்டுக் கொல்வதைப்* NBC *செய்தி படம் பிடித்திருந்தது.*

*தனது பாதுகாப்பு கருதி செய்யப்பட்டதே இந்த செயல் என அமெரிக்க இராணுவ விசாரணை பின்னாளில் அப்பட்டமான பொய்யை கூறியது.*

**ஃபலூஜா மக்களைப் பழிவாங்கிய படலம் :**

*பத்து நாட்கள் நடந்த இந்த தாக்குதலில் இந்நகரத்து மக்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இன்று வரை யாருக்கும் தெரியாது. இத் தாக்குதலுக்கு முன்னதாக பல பத்தாயிரம் மக்கள், பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும் நகரத்தை விட்டு வெளியேறினர். இந்த தாக்குதலுக்கு முந்திய ஃபலூஜாவின் மக்கள் தொகை 6 லட்சம். தற்போதைய சனத்தொகையோ வெறும் 3 லட்சம் மட்டுமே இருக்கும் என அஞ்சப்படுகிறது.*

*இத் தாக்குதலில் நகரத்தின் கட்டிடங்கள் பாதிக்கு மேல் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. ஈராக்கின் பல பகுதிகளைப் போலவே ஃபலூஜாவும் இடிபாடுகளுக்கு இடையேதான் இன்னமும்*



வாழ்ந்துகொண்டிருக்கிறது. தாக்குதல் முடிந்து பலஆண்டுகள் கடந்த பின்னும் இதுதான் நிலை.

**பலூஜாவில் தொடரும் நோய்:**

பலூஜாவின் புற்றுநோய் விகிதம் ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமாக உள்ளது.

"ஈராக்கிய நகரம் ஃபலூஜாவின் புற்றுநோய், சிசு மரணம் மற்றும் மகப்பேறில் பாலின விகிதாச்சாரம் 2005-2009" என்ற தலைப்பிலான சமீபத்திய ஆய்வு, "ஃபலூஜா நகர மக்கள் புற்று நோய், லூக்கிமியா- இரத்தப் புற்று நோய், சிசு மரணம், பாலின மாறாட்டம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த பாதிப்புகளின் அளவு 1945-ம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலில் தப்பிப் பிழைத்தோரிடம் காணப்படும் அளவை விடக் கூடுதலாக இருக்கிறது என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்கத் தாக்குதலுக்கு முன்பு இருந்த அளவைக் காட்டிலும் புற்றுநோய் நான்கு மடங்கு அதிகரித்து இருப்பதையும், தற்போது அங்கு காணப்படும் புற்றுநோயின் தன்மை அணுக் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு தப்பிப் பிழைத்த ஹிரோஷிமா, நாகசாகி மக்களிடம் காணப்பட்ட புற்றுநோயின் தன்மையுடன் ஒத்திருப்பதை யும் அந்த ஆய்வுகள் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்து தெரிவிக்கின்றனர்.

**ஹிரோஷிமாவைக் காட்டிலும் படுமோசமான பாதிப்பு:**

*ஈராக்கின் அண்டை நாடுகளான எகிப்து, ஜோர்டான், குவெய்த் ஆகியவற்றில் காணப்படுவதைப்போல இரத்தப் புற்றுநோய்* [leukemia] *பாதிப்பு 38 மடங்கும், சிசு மரணம் 12 மடங்கும், மார்பகப் புற்றுநோய் 10 மடங்கும் ஃபலூஜாவில் அதிகரித்து இருக்கிறது. பெரியவர் களிடையே பெரும் அளவில் மூளைப் புற்றுநோய்க் கட்டிகளும், சீழ்க் கொப்பளங்களும்*[Lymphoma] *காணப்படுவதாக ஆய்வு அறிக்கை குறிப்பிடுகிறது.*

*1050 ஆண் குழந்தைகளுக்கு 1000 பெண் குழந்தைகள் என்று இருந்த விகிதம் 2005-க்குப் பின் மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டிருக்கிறது. அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிந்திய இந்த நான்கு ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் பிறப்பு விகிதம் 860 ஆண்களுக்கு 1000 பெண்கள் என்று தலைகீழாகி இருக்கிறது. இந்த பாலின விகித மாறுபாடும் 1945-ன் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பிந்திய ஹிரோஷிமாவை ஒத்திருக்கிறது.*

*அணுவுலை எரிபொருட் கழிவு என அறியப்படும் இந்த திறன் குறைந்த யுரேனியத்தை அமெரிக்க இராணுவம் கவசங்கள், பதுங்கு குழிகளைப் பிளக்கும் குண்டுகளிலும், தோட்டாக்களிலும் பயன் படுத்துகிறது. இதன் வெடிப்பின்போது 40 சதவீதத்துக்கும் மேலான யுரேனியம் மீசிறு அணுத்துகள்களாக வெளிப்படுகிறது. இது தாக்கப் பட்ட பகுதிவாழ் மக்களின் இரத்த ஓட்டத்தில் எளிதில் புகுந்து நிணநீர் சுரப்பிகளில் தங்கிவிடுகிறது. அது வயதுவந்தோரின் விந்தணுவிலும், கருமுட்டையிலும் உருவாகும் மரபணுக் குறியீடுகளை* (DNA) *தாக்கி அடுத்த தலைமுறையினருக்கு பாரிய பிறவிக் கோளாறுகளை உண்டு பண்ணுகிறது.*

*இத்தகைய பாதிப்பால் விகாரமான பிறப்புகள், சிசு மரணம், பிறவிக் கோளாறுகள் மற்றும் புற்றுநோய்களின் எண்ணிக்கை ஃபலூஜாவில் செங்குத்தாய் உயர்ந்து நிற்பதை உறுதிப்படுத்தும் முறைப்படியான விஞ்ஞானபூர்வமான முதல் ஆய்வு இது.*

*சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச ஆய்வு ஏடு* (IJERPH) *வெளியிட்ட கொள்ளைநோய் பற்றிய ஆய்வும் அண்டை நாடுகளைக் காட்டிலும் படுமோசமான அளவில் மேற்சொன்ன பாதிப்புகள் ஃபலூஜாவில் நிலவுவதைக் கண்டறிந்து கூறியது.*

**கதிர்வீச்சு நோய் பரவல்:**

*பல ஈராக்கிய மற்றும் பிரிட்டிஷ் மருத்துவர்கள் இணைந்து கதிர்வீச்சு தொடர்பான நோய்களின் வெகுவான பரவல் பற்றிய ஒரு*

விசாரணை நடத்தக் கோரி ஐ.நா. சபைக்கு அக்டோபர், 2009 இல் கீழ்க்கண்ட விவரங்களுடன் ஒரு அறிக்கை எழுதினர். தலை இன்றி முண்டமாகவும், இரு தலைகளுடனும், நெற்றியில் கண்ணுடனும், கைகால்கள் அற்ற முடமாகவும், இன்னபிறவாகவும் விகாரமாகப் பிறக்கும் ஏராளமான குழந்தைகளைக் காணச் சகியாது ஃபலூஜாவின் பெண்கள் பிள்ளைப் பேற்றை நினைத்து அரண்டு போயிருக்கிறார்கள். மேலும், சின்னஞ்சிறு குழந்தைகளும் கொடூரமான புற்று நோய்க்கும், இரத்தப் புற்று நோய்க்கும் ஆளாகி இருக்கிறார்கள் என

செப்டம்பர், 2009-ல் ஃபலூஜா பொது மருத்துவ மனையில் 170 குழந்தைகள் பிறந்தன. அவற்றில் 24% குழந்தைகள் பிறந்த ஏழு நாட் களுக்குள் இறந்துவிட்டன. அவ்வாறு இறந்த குழந்தைகளில் 75% குழந்தைகள் மேற்சொன்ன விகாரத்துடன் பிறந்தவை என அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டது.

பலூஜாவில் என்றும் காணாத அளவுக்குப் பிறவிக் கோளாறு களுடன் பிரசவம் ஆவது மட்டுமல்ல, 2003-ம் ஆண்டுக்குப் பின்னால் குறைப் பிரசவங்கள் தாருமாறாக அதிகரித்து இருக்கின்றன. அதனினும் கொடுமை என்னவென்றால், உயிர்த்திருக்கும் குழந்தை களில் கணிசமானவை படிப்படியான பாரதூரமான உடலுறுப்புக் குறைபாடுகளுக்கு ஆளாகிறன.

**பாரிய போர்க் குற்றங்கள்:**

ஃபலூஜாவின் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நமது காலத்திய படுமோசமான போர்க் குற்றங்களில் ஒன்றாகும். இவ்வித நடவடிக்கை “அதிர்ச்சியூட்டும் எச்சரிகை” அல்லது “கூட்டுத் தண்டனை” என அழைக்கப்படுகிறது. இது சட்டப்படி ஒரு போர்க் குற்றமாகும். ஆயினும் உலகம் இன்னமும் மௌனித்தே உள்ளது.

(வைகாசி 2023)



# ஈராக் – அமெரிக்க ஆக்கிரமிப்பின் கோரம்:

**வன்முறைகளின் உலைக்களமாக பக்தாத் !**
**மத குரோதங்களின் போர்க்களமாக ஈராக் !**

ஒரு காலத்தில் அரபு உலகின் மிக முன்னேற்றம் கண்ட நாடாகவிருந்த ஈராக் இன்று வன்முறைகளினால் அழிக்கப்பட்டு சிறு துண்டுகளாக உடையக் கூடிய அபாயமுள்ள உள்நாட்டு யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ளது. 2003 இல் அமெரிக்க ஆக்கிரமிப்புடன் தொடங்கிய யுத்தம், ஈராக் மக்கள் சதாம் குசைனிடம் இருந்து விடுதலை பெற்று பதினைந்து வருடங்களுக்கும் மேல் ஆகிவிட்டது.

பாக்தாத்தில் உள்ள அதிபர் மாளிகையை அல்-சதர் ஆதரவு போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டு பாதுகாப்பு படையினருக்கும் இடையில் மோதலில் பலர் கொல்லப் பட்டனர். இதையடுத்து அல்-

சதர் ஆதரவாளர்களுக்கும், ஈராக் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இதேபோல் பாக்தாத் முழுவதும் அல்-சதார் ஆதரவாளர் களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையில் நடந்த சண்டை களால் அந்த நகரமே கலவர பூமியானது.

இக்கோர யுத்த களத்தை கண்ட ஈராக், உலகில் தோன்றிய நாகரிகங்களில் முதலாவது நாகரிகமாக கருதப்படும் சுமேரியா ஆகும். சுமேரியா தெற்கு மெசொப்பொத்தேமியாவில் (இன்றைய ஈராக்) அமைந்திருந்த ஒரு பழைய நாகரிகமாகும். கி.மு 4000 முதல் கி.மு. 3000 வரை இந்த நாகரிகம் எழுச்சியுடன் காணப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

**சுமேரியா நாகரிகமான ஈராக் :**

முதன் முதலில் கருத்து வடிவான எழுத்து முறையை உலகுக்கு அளித்த பெருமை சுமேரியர்களைச் சாரும்.

சுழலும் சக்கரத்தைக் கண்டறிந்து, வணிகப் பத்திரங்களை அமைத்தனர். மேலும்,செம்மைப்படுத்தப்பட்ட எழுத்து முறையையும், நூல் நிலையங்களையும் உருவாக்கினர். காலத்தை 60 நொடிகளாகப் பிரித்ததும் இன்றைய ஈராக்கியர்களான சுமேரியர்களே.

சுமேரியா, மெசபடோமியா, பாபிலோனியா என்றெல்லாம் அறியப்பட்ட இந்நாடு யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் என்ற இரண்டு பெரு நதிகளுக்கு நடுவே அமைந்துள்ள இன்றைய ஈராக் ஆகும்.

இத்தகைய நாகரீக வளர்ச்சி கண்ட ஈராக்கில், வன்முறையை கட்டுப்படுத்தும் விதமாக இடைக்கால பிரதமர் முஸ்தபா அல் கதாமி நாடு தழுவிய ஊரடங்கை அமல்படுத்தினார்.

**ஷியா தலைவர் அல் - சதர் படை :**

ஈராக் அரசியலில் ஷியா தலைவர் அல்-சதர் என்பவர் அமெரிக்க-எதிர்ப்பு போராளிகளை வழிநடத்தியவர் மற்றும் லட்சக் கணக்கான ஆதரவாளர்களைக் கொண்ட செல்வாக்குமிக்க தலைவராக திகழ்கிறார். கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி 73 இடங்களை வென்ற நிலையில், ஈரான் ஆதரவு ஒருங்கிணைப்புடன் ஈராக்கில் புதிய அரசாங்கத்தை அமைக்க அல் சதர் எதிர்ப்பு தெரிவித்தார்.

அல்-சதர் மற்றும் அவரது போட்டியாளர்களுக்கு இடையி லான முட்டுக்கட்டையால் தேர்தல் முடிந்து பல மாதங்கள் கடந்தும்கூட, ஈராக்கில் அரசாங்கம் இல்லாத நிலை உள்ளது.



பாராளுமன்றத்தை கலைத்தல், முன்கூட்டியே தேர்தல் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபடுமாறு தனது ஆதரவாளர்களை அல்-சதர் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, முக்தாதா அல்-சதர், தான் அரசியலில் இருந்து விலகுவதாக இரு வாரத்திற்ககு முன் அறிவித்தார். இதனால் அதிருப்தி அடைந்த அவரது ஆதரவாளர்கள் தலைநகர் பாக்தாத்தில் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர்.

**அமெரிக்க-எதிர்ப்பு ஷியா மதகுரு :**

ஷியா மதகுரு மோக்தாடா அல் சதர் இயக்கம், லெபனிய ஹெஸ்பொல்லா இயக்கத்திற்கு ஈராக்கில் ஆதரவாய் உள்ளது. இந்த இஸ்லாமிய குழுவானது குறைந்த வருமானம் உடைய ஷியா மக்களுக்கு ஆதரவாகவும் உள்ளது. அதன் ஆயுதப் பிரிவு அரசாங்கப் படைகளுடனும், போட்டி ஷியைட் குழுக்கள் மற்றும் சுனி போராளி களுக்கு எதிராகவும் போராடுகிறது. இதனால் வன்முறை மீண்டும் பரவி வருகிறது.

அரசாங்க-எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே மோதல்களால் கடந்த ஆகஸ்ட் மிகக் கொடூரமான மாதமாக இருந்தது.

**இன, மத பிளவுகளான ஈராக் தேர்தல் :**

ஈராக்கில் ஜனநாயகம் என்பது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டுப் போரினால் அழிந்து வருகிறது. ஈராக் நிறை

*வேற்று அதிகாரத்தின் ஆழ்ந்த பிளவுகளால், இன, மத குழுக்களுக்கும், இடையிலான முரண்பாடுகள் நீண்டு வருகிறது.*

*ஈராக் 2003 இல் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு உயிர்களையும் குருதியையும் வீதிகளில் ஓடவிட்டு பல வருடங்கள் முடிந்து விட்டது. இரண்டு முக்கிய காரணங்களுக்காகவே அமெரிக்கா ஈராக் மீது படையெடுத்திருந்ததாக அன்றைய காலத்தில் அறியப் பட்டது. ஈராக்கின் பரந்து பட்ட எண்ணெய் வளங்களை அமெரிக்க கம்பனிகள் பெறுவதும், இஸ்ரேலின் இரண்டு பிரதான எதிரிகளில் ஒன்றை அழிப்பதும் ஆகும். (ஈரான் இரண்டாவது எதிரியாகும்)*

*போரின் முடிவில் முதலாவது இலக்கு நிறைவேற்றப் பட்டிருக்கலாம். அன்றைய அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ்ஷின் வார்த்தைகளில் கூறப்போனால் "மிஷன் நிறைவு பெற்று விட்டது"* (mission accomplished). *தன் நாட்டு மக்களுக்கு புஷ் இவ்வாறு தான் அறிவித்திருந்தார். ஈராக் போரில் தாம் வெற்றி பெற்று விட்டதாக அமெரிக்க மக்களுக்கு கூறியிருந்தார்.*

*ஆனாலும் அதன்பின் நிகழ்ந்த வலூஜா* (fallujah battle) *தோல்வி களும், ஷியா சுனி போர்களும், ஐஎஸ் கொடூரங்களையும் உலகம் கண்டது.*

**சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்ப்பு :**

*2003 ல் அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு சதாம் ஹுசைன் ஆட்சியை கவிழ்த்தபின்னர், ஈராக் குடியரசில் ஒரு பாராளுமன்ற ஜனநாயகம் படிப்படியாக அறிமுகப்படுத்தப் பட்டது. ஆயினும் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் பொதுவாக சுதந்திரம் இன்றியும், நேர்மையற்றும் நடந்தன.*

*1920 களில் ஈராக் அரசை உருவாக்கியதில் இருந்து, அதன் அரசியல் மேற்தட்டுக்களில் சுனி சிறுபான்மையினரே பெருமளவில் தலைமைத்துவத்தில் ஈர்க்கப்பட்டனர்.*

*2003 அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பின் பெரும் வரலாற்று மாற்றமாக ஷியா பெரும்பான்மையினர் முதல் முறையாக அதிகாரத்தை ஏற்பதற்கு உதவியது. அத்துடன் குர்திஷ் சிறுபான்மை யினருக்கு சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்தப் பட்டது.*

*ஆனால் வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் மீளவும் ஒரு கடுமை யான சுனி கிளர்ச்சிக்கு வழிவகுத்தது. 2004 - 2006 ஆண்டுகளில் அமெரிக்க துருப்புக்கள் மற்றும் புதிய ஷியா மேலாதிக்கம் கொண்ட அரசாங்கத்தை இலக்காகக் கொண்டு சுனி கிளர்ச்சிவாதிகளால் மிகவும் தீவிரமான போர் நடந்தது.*



**தற்போதைய பாக்தாத் நிலமை :**

*தலைநகர் பாக்தாத்தில் உள்ள மத்திய அரசாங்கம் தற்போது ஷியா பெரும்பான்மையினரால், மொத்த சனத்தொகையில் 60% ஆதிக்கம் செலுத்துகிறது. சதாம் ஹசைனின் ஆட்சியின் போது முதுகெலும்பாக இருந்த பல சுனி அரேபியர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.*

*ஈராக்கின் குர்திஷ் சிறுபான்மையினர், நாட்டின் வடக்கில் வலுவான தன்னாட்சி உரிமையை கொண்டுள்ளனர். சதாம் ஹஸைனுக்குப் பின்னர் பெரும்பாலான குர்திஸ் ஒரு கூட்டாட்சி அரசை பரிந்துரைத்தனர். அதன் சொந்த அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படைகளை குர்துகள் கொண்டிருந்தாலும், எண்ணெய் வர்த்தகத்தில் மத்திய அரசாங்கத்துடன் எப்போதும் முரண்படுகின்றனர்.*

**அமெரிக்க துருப்புக்கள் வெளியேற்றம் :**

*நீண்டகால போரிலிருந்து டிசம்பர் 2011 இல் ஈராக்கிலிருந்து அமெரிக்க துருப்புக்கள் வெளியேறின. அதன்பின் முழு அரசு இறையாண்மையையும் மீண்டும் ஈராக் ஷியா அதிகாரிகள் கைப்பற்றினர். போரின் பின் எண்ணெய் உற்பத்தி மீண்டும் அதிகரித்தது. வெளிநாட்டு நிறுவனங்களின் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. இருப்பினும், பலவீனமான அரசின் நிலை மற்றும் உயர் வேலையின்மை தொடர்ந்த வண்ணம் இருந்தது.*

*அமெரிக்க துருப்புக்கள் வெளியேறியதன் பின் ஈராக் மத்திய கிழக்கில் மிகவும் அரசியல் உறுதியற்ற நாடாக உருவாகியமைக்கு முக்கிய காரணம் அதிகாரத்தின் ஆழ்ந்த பிளவுகளும், இன, மத குழுக்களுக்கும், இடையிலான முரண்பாடுகள் நீண்டு வந்ததே.*

*ஈராக்கின் சமூகங்களுக்கு இடையிலான உறவுகளை முறித்த நச்சுத் தனமான கொடூரமான உள்நாட்டுப் போர் 2008 நாட்டில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி உள்ளது.*

**குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கம் (KRG) :**

*அமெரிக்க ஆதரவுடன் ஈராக்கின் அரசியல் அமைப்பின் சில முக்கிய மாற்றங்கள் 2004 இல் உருவாகின. குறிப்பாக குர்திஸ்தான் பிராந்திய அரசு (KRG) உருவாக்கப்பட்டது. குர்திஸ் தலைவர்கள் பாக்தாத்தில் உள்ள மத்திய அரச நிறுவனங்களில் பதவி பெற்றாலும் குர்திஸ் மக்கள் வடக்கில் தங்கள் தன்னாட்சி அரசை நிறுவினார்கள்.*

*குர்திஸ் மக்கள் விரும்பிய விதமாக ஈராக் வடக்கு பகுதியில் உள்ள குர்திஸ் பிராந்தியங்களில் தமது சொந்த அரசாங்கம், பாராளு மன்றம் மற்றும் பாதுகாப்புப் படைகளுடன் ஒரு உயர்ந்த தன்னாட்சி உரிமையை உருவாக்கினர்.*

*குர்திஸ் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் எண்ணெய் வளம் நிறைந்தவை. எண்ணெய் ஏற்றுமதியில் இருந்து இலாபம் ஈட்டுவது என்பது முசுபு க்கும் பாக்தாத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் இடையி லான உறவுகளில் ஒரு பெரும் பிணக்குகளையும் தோற்றுவித்தது.*

*சதாம் ஆட்சிக் கவிழ்ப்பின் பின் 2005 ல் நடந்த முதல் தேர்தலிலிருந்து, எந்தவொரு கட்சியும் தனது சொந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு வலுவான பெரும்பான்மையை உருவாக்க முடியவில்லை. இதன் விளைவாக, ஷியாக்கள், சுனி மற்றும் குர்துகள் உட்பட பல கட்சிகளின் கூட்டணியால் ஈராக்கில் அரசியல் ஆட்சி ஏற் பட்டது. பல கட்சிகளின் கூட்டணி ஆட்சியின் விளைவால் தொடர்ந்தும் இன மோதல்களும், அரசியல் உறுதியற்ற தன்மையையும் விளைவித்தது.*

**ஈராக்கின் 18 மாகாணங்கள் :**

*18 மாகாணங்களாக பிரிக்கப்பட்ட ஈராக்கில், ஒவ்வொன்றும் அதன் சொந்த கவர்னர் தலைமையில் மாகாண சபை ஆட்சியில் உள்ளது. எண்ணெய் வளம் கொண்ட ஷியா பிராந்தியங்களில் கூட்டாட்சி உள்ளது. பாக்தாத்தில் ஷியா ஆதிக்க அரசாங்கத்தை நம்பாத சுன்னி மாகாணங்கள் தனித்தே இயங்குகின்றன என்பதும் உண்மையே. பிரிட்டிஷ் மேற்பார்வையின் கீழ் இருந்த ஈராக்கில் 1958 இல் முடியாட்சி கவிழ்க்கப்பட்டது. இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் சுனிகளின் பாத் கட்சி சர்வாதிகார அரசாங்கத்தினை ஏற்படுத்தி யது. அதுவே ஈராக் ஆட்சியில் சதாம் ஹூசேனின் சகாப்தம் நீண்ட காலமாக தொடர்ந்து வந்தது. 2003 ல் அமெரிக்கத் தலைமையிலான*

படையெடுப்பால் சதாம் ஃஹுசைன் ஆட்சி கவிழ்ந்தது.

சுனிக்களின் பாத் கட்சி ஆட்சி அகற்றப்பட்ட பின் இன்றைய ஈராக்கின் கூட்டணி அரசாங்க முறை மிகவும் பன்முகத்தன்மையும் திறமையும் உடையதாக உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. மாறாக போட்டி அரசியல் குழுக்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையற்ற தன்மையால் அந்த நம்பிக்கையும் முடங்கியது.

**ஊழல் பிரதமர் நூரி அல்-மாலிக் :**

சதாம் ஆட்சியின் பின்னர் முதல் தேர்வு செய்யப்பட்ட சக்தி வாய்ந்த அரசியல்வாதியாக 2006 ல் பிரதம மந்திரி நூரி அல்-மாலிக் தேர்வானார். உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான ஊழல் ஆட்சியை நடாத்தியதாக நூரி மாலிக் குற்றம் சாட்டப்பட்டார்.

2006 இல் ஈராக்கில் சர்வாதிகார ஆட்சி அதிகாரத்தை அமெரிக்க உதவியுடன் ஏகபோகம் செய்தார் என்றும், பாதுகாப்புப் படைகளில் தனிப்பட்ட விசுவாசிகளை நிறுவினார் என்றும் குற்றம் சாட்டப்பட்டார்.அத்துடன் அவரது வாரிசுகளின் கீழ் ஆட்சி தொடரலாம் எனவும் சர்வதேச பார்வையாளர்கள் அஞ்சினர்.

தற்போது நூரி அல்-மாலிக் ஆட்சியில் இருந்து அகற்றப் பட்டாலும், கடந்த தேர்தலிலும் எந்தவொரு கட்சியும் தனது சொந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு வலுவான பெரும்பான்மையை உருவாக்க முடியவில்லை. இதன் விளைவாக, தொடர்ந்தும் இன மோதல்களும், அரசியல் உறுதியற்ற தன்மையையும் தொடர்கிறது. ஈராக்கில் தற்போதைய சூழ்நிலைகளால் மத மற்றும் இன வேறுபாடு களால் பொருளாதார அபிவிருத்தி இன்றி நிதி நெருக்கடியால் திணறுகின்றது. மிகப்பெரிய வன்முறைகளால் ஊனமுற்றிருக்கும் ஈராக்கிய பொருளாதாரமும் தள்ளாடுகின்றது. அத்துடன் பல ஈராக்கியர்கள் உள்நாட்டுப் போர் மீண்டும் எழலாம் எனும் அச்சத்தில் உள்ளனர்.

(ஐப்பசி -2022)




## லிபியா– ஆட்சி கவிழ்ப்பும் தொடரும் உள்நாட்டுப் போர் :

### கேணல் கடாபியின் ஆட்சி கவிழ்ப்பின் விளைவும்...
### தொடரும் உள்நாட்டுப் போரில் சிதையும் லிபியாவும்...

உள்நாட்டுப் போர் நிகழும் லிபியாவில் 60 பில்லியன் பேரல் எண்ணை வளம் உள்ளது. உலகின் மொத்த எண்ணை மற்றும் எரிவாயு வளத்தில் 3.34% லிபியாவில் இருக்கிறது.

2011 இல் கடாபியின் ஆட்சியின் கீழ் லிபிய தேசிய எண்ணெய் கழகத்திடம் உரிமம் பெற்று தொழில் செய்ய வேண்டிய நிலையை மாற்றி,லிபியாவின் எண்ணெயை எடுத்து விற்பதற்கான முழு உரிமையை ஈட்டிக் கொடுப்பதுதான் அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது ஆதாரங்களின் மூலம் அம்பலமானது. இதனையே 2011 இல் அரபு வசந்த மாற்றமாக அமெரிக்க முன்னெடுத்த போர் லிபியாவில் நிகழ்ந்தது.

ஈராக்கில், சாதித்து விட்டோம் என்று ஜோர்ஜ் புஷ் அறிவித்தது போன்று லிபியாவில் கடாபி வீழ்ந்தவுடன், "நான் அனைவரும் சேர்ந்து வெற்றியை சாதித்திருக்கிறோம்" என்று அறிவித்தார் அன்றைய நேட்டோ தலைவர். மற்றொரு புறம் அமெரிக்கா உதவியுடன் விடுதலை பெற்றதாக கூறப்படும் அரபு நாடுகளின் நிலை என்பதை லிபியாவின் நிலையிலிருந்தும் புரிந்து கொள்ளலாம்.

**தொடரும் உள்நாட்டுப் போர்:**

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் இரண்டு சக்திவாய்ந்த ஆயுதப் பிரிவுகளுக்கு இடையே 2022 ஆகஸ்ட் 14 இல் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தலைநகர் திரிபோலியின் முக்கியமான மிட்டிகா விமான நிலையத்தின் வழியாக லிபியாவின் 444 படைப்பிரிவின் தளபதி மஹ்மூத் ஹம்சா பயணிக்க முயன்றபோது, அவர் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் சண்டை ஆரம்பமாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


விமான நிலையத்தைக் கட்டுப்படுத்தும் சிறப்பு படைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார். அனால் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. தளபது ஹம்சாவை நடுநிலைக் கட்சிக்கு மாற்ற ஐ. நா - தேசிய அரசாங்கத்துடன் உடன்படிக்கையை மேற்கொண்டதைத் தொடர்ந்து மோதல்கள் மெல்ல நிறுத்தப்பட்டன என்று அரச செய்தி நிறுவனமான லானா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் 106 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் பொதுமக்களும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. லிபிய நாட்டின் அவசர சேவைகள் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

லிபியாவில் தொடரும் நெருக்கடியானது, அந்நாட்டின் மனிதாபிமான பிரச்சனையையும், அரசியல்-இராணுவ உறுதியற்ற தன்மையையும் தோற்றுவித்துள்ளது. லிபியாவில் நிகழ்ந்த 2011 ஆம் ஆண்டின் அரபு வசந்த ஆர்ப்பாட்டங்களில் தொடங்கிய உள்நாட்டுப் போர், வெளிநாட்டு இராணுவத் தலையீடுகளை தொடர்ந்து கடாபியின் மரணத்திற்கும் வழிவகுத்தது.

அரபு நாடுகளில் செல்வந்த நாடாக ஓர் காலத்தில் திகழ்ந்த லிபியாவின் தலைநகர் திரிப்போலியில் உள்நாட்டுப் போரின் விளைவாக ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் நாடு முழுவதும் வன்முறை மற்றும் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுத்தது.

லிபியாவில் ஏற்பட்ட நெருக்கடி 2011 ஆம் ஆண்டின்




முற்பகுதியில் வன்முறை தொடங்கியதிலிருந்து பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

எண்ணெய் வளம் மிக்க நாடான லிபியாவில் நடந்துவரும் போட்டி அரசுகளுக்கு இடையிலான மோதல் தற்போது உச்ச கட்டத்தை அடைந்திருப்பதால், மக்கள் பெரும் கையறு நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**போட்டி அரசுகளின் மோதல் :**

தலைநகர் திரிப்போலியை மையமாகக் கொண்டு பிரதமர் அப்துல் ஹமீத் பெய்பா தலைமையில் ஓர் அரசு இயங்கிவருகிறது. அதேபோல சிர்ட் எனும் கடற்கரை நகரை மையமாகக் கொண்டு ஃபாதி பகாஷா தலைமையில் போட்டி அரசு ஒன்றும் நடத்தப்படு கிறது. ஃபாதி பகாஷா தன்னை பிரதமராக அறிவித்துச் செயல்பட்டு வருகிறார்.

இருவருமே தனித்தனியே போராளிக் குழுக்களை வைத் திருக்கின்றனர். ஃபாதி பகாஷா தலைமையிலான குழுக்கள் கடந்த சில வாரங்களாகத் திரிப்போலியைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கி யிருக்கின்றன. இந்தச் சூழலில்தான் இப்படியான வன்முறைச் சம்பவங்கள் வெடித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆட்சி இழந்த கடாபி :**

இன்றைய லிபியாவின் சீரழிவுக்கு முதன்மைக் காரணமே கடாபி தான் எனும் குற்றச்சாட்டும் உண்டு.

2001-ம் ஆண்டுக்குப் பிறகு லிபிய முன்னாள் லிபிய அதிபர்

கடாபி மேற்கத்திய கோரிக்கைகளுக்கு அமைய லிபியாவின் அணுஆயுத திட்டத்தை கண்காணிப்புக்கு உட்படுத்தி, லிபியாவில் மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்கள் நுழைய அனுமதி அளித்தார். ஆயினும் கடாபி, முழுமையாக பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு சரணடையவில்லை என்பதே அமெரிக்காவின் அன்றைய பிரச்சனை.

லிபியாவின் அதிபராக இருந்த கடாபியின் ஆட்சிக்கு எதிராக, 2011 ல் நேட்டோ அமைப்பின் ஆதரவுடன் பெரும் போர் நடந்தது. அதில் அவர் இறுதியாக கொல்லப்பட்டார். அமெரிக்காவின் உலக மேலாதிக்கக் கனவுகள் நிறைவேறத் தேவையென்றால் எந்த நாட்டின் மேலும் எப்போது வேண்டுமானாலும் தனது இராணுவத்தை ஏவி விடலாம் என்கிற ஒரு எதார்த்தத்தை ஈராக் யுத்தத்திற்குப் பின் அமெரிக்கா நிலைநாட்டியுள்ளது.

இறையாண்மை, தேசம், தேச எல்லைகளின் புனிதம் என்றெல்லாம் பேசியது மெல்ல மெல்லப் பழங்கதையாகி வருகிறது.

அமெரிக்கா கொண்டு வருவதாகச் சொன்ன ஜனநாயகமும் சுதந்திரமும் தனது பொருளாதார நலன்கள் நோக்கியதே. 2011 இல் அமெரிக்காவின் லிபியா போர் என்பது நேரடி ஆக்கிரமிப்பு என்பதையும் கடந்த ஒன்றாகும்.

வட ஆபிரிக்கா, மத்திய கிழக்காசிய மற்றும் மத்திய ஆசியப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக, உலகின் 60% எண்ணை வளத்தை கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் விரிவான திட்டத்தின் ஒரு சிறிய அங்கம் தான் லிபியப் போர் என புலப்பட்டது. தற்போதைய தரவுகளின்படி, லிபியாவில் 60 பில்லியன் பேரல் எண்ணை வளம் உள்ளது. உலகின் மொத்த எண்ணை மற்றும் எரிவாயு வளத்தில் 3.34% லிபியாவில் இருக்கிறது. அமெரிக்க ராணுவ பலமும் தொழில்நுட்ப வல்லமையால் லிபியாவில் தனது பொம்மை அரசை நிறுவி எண்ணெய் வளத்தை தாராளமாக சுரண்டியது.

கடாபியின் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் உள்நாட்டுப் போர், கலவரம், வன்முறைச் சம்பவங்கள் காரணமாக லிபியா அமைதி இழந்து தவித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் ஓரளவு அமைதி நிலவியது போல புலப்பட்டது. இந்நிலையில், முன்னாள் ராணுவத் தளபதி ஹைதாம் தஜோரி தலைமையிலான திரிப்போலி புரட்சியாளர்களின் படையணி எனும் போராளிக் குழுவுக்கும், அப்தெல்-கனி அல்-கிக்லி தலைமையிலான குழுவுக்கும் இடையில் தலைநகர் திரிப்போலியில் தொடர்ந்து கடும் மோதல்கள் நடந்தன.



**கேணல் கடாபி 27 வயதில் பதவியேற்பு**

*தற்போது லிபியாவில் உள்நாட்டு போர் தீவிரமாக நடந்து வருகிறது. முன்பு அரபு நாடுகளின் நட்சத்திரமாக ஒரு காலத்தில் புகழப்பட்ட லிபிய தலைவர் கடாபியின் 42 வருட கால ஆட்சி 2011இல் முடிவினை எட்டியது.*

*அன்றைய கடாபி ஆட்சியின் எதிர்ப்பாளர்கள் லிபியாவை அமெரிக்க ஆதரவுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் கடாபியின் அதிகாரம் லிபியாவில் முற்றுப் பெற்றது.*

*அரபு முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட லிபியா வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் ரோமப் பேரரசு, ஒட்டமான் பேரரசு, இத்தாலி ஆகியவற்றின் ஆட்சிக்குக் கீழ் வந்த லிபியா, இரண்டாம் உலக யுத்த முடிவில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை இணைந்து நடத்திய இராணுவ ஆட்சியின் கீழ்வந்தது.*

*1951இல் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய லிபியாவில் மன்னராட்சி ஏற்படுத்தப்பட்டது. இரத்தம் சிந்தாத இராணுவ புரட்சி மூலம் மன்னர் இட்ரிஸை 1969இல் பதவியிலிருந்து அகற்றிய இராணுவ கப்டனான முவமர் கடாபி நாட்டின் அதிபரானார். அப்போது அவருக்கு 27 வயது.*

*கடாபி பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே லிபியாவிலிருந்து பிரிட்டிஷ், அமெரிக்க இராணுவ தளங்களை அகற்றினார். எண்ணெய் நிறுவனங்ளுடன் புதிய ஒப்பந்தங்களை செய்ததன் மூலம் லிபியாவின் எண்ணெய் வருமானத்தை அதிகரித்துக் கொண்டார்.*

*எண்ணெய் கம்பனிகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததனாலும் உலக சந்தையில் எண்ணெய் விலை*

*அதிகரித்ததனாலும் லிபிய மக்களின் தலாவீத வருமானம் பெருமளவு அதிகரிப்பை கண்டது.*

*பீடோயின் பழங்குடியின பெற்றோருக்கு, பிறந்த கடாபி, தனது பழங்குடியின பின்னணியை விளம்பரப்படுத்துவதில் எப்போதும் பெருமைப்பட்டார். தனது விருந்தாளிகளை, நாடோடி கொட்டகையிலேயே வரவேற்பார். அதேபோல, வெளிநாட்டுப் பயணங்களில், அந்த கொட்டகையை கொண்டு சென்று, அதை காட்சிப்பொருளாக வைத்துவிடுவார்.*

**அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு :**

*அமெரிக்காவால் சர்வாதிகாரி என்று பிரகடனப்படுத்தப்பட்டு 2011 அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி படுகொலை செய்யப்பட்ட கடாபியின் மறுபக்கத்தையும் நாம் அறிய வேண்டும். பிரஞ்சு, இத்தாலி என்று மாறி மாறி அன்னியர்கள் ஆண்ட நாடு லிபியா. முடிவாக மன்னராட்சி ஏற்பட்டது. மன்னரும் இத்தாலியர்களுக்கு எடுபிடி யாகவே இருந்தார். ராணுவப் புரட்சி வெடித்தது. புரட்சிக்குத் தலைமை வகித்தவர் கடாபி. 1969 முதல் 2011 வரை அசைக்கமுடியாத தலைவராக விளங்கினார்.*

*பிடல் காஸ்ட்ரோ, யாசர் அராபத் வரிசையில் அமெரிக்காவின் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் கடாபி கடாபியின் ஆட்சியை லிபியாவின் பொற்கால ஆட்சி என்று மக்கள் கூறுவர்.கேணல் கடாபி யின் ஆட்சியில் அன்று, லிபியாவில் வழங்கப்படும் மின்சாரத்துக்கு கட்டணம் ஏதும் கிடையாது, மின்சாரம் இலவசம்.*

*வங்கிகளில் வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி கிடையாது. வீடு மனை என்பது லிபியாவில் மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. லிபிய நாட்டில் திருமணம் முடிக்கும் ஒவ்வொரு புதுமணத் தம்பதியினர்களுக்கும் அந்நாட்டின் அரசு 60000 தினார், அதாவது அமெரிக்க பணம் 50000 டாலர் பணத்தை இலவசமாக வழங்கியது. இதனாலேயே கடாபியின் ஆட்சியை லிபியாவின் பொற்கால ஆட்சி என்று மக்கள் கூறுவர்.*

**உயர் கல்வி, மருத்துவம் இலவசம்:**

*அக்காலத்தில் லிபியாவில் கல்வி இலவசம். ஆரம்பக் கல்வி மட்டுமல்ல, உயர் கல்வியும் இலவசம். வெளி நாட்டுக்குச் சென்று படிக்க விரும்பினாலும், அத்தனை செலவுகளையும் அரசே ஏற்கும்.*

*மருத்துவம் முற்றிலும் இலவசம் கூட. அத்துடன் கடாபி அதிகாரத்தை கைப்பற்றும் பொழுது லிபிய மக்களில் எழுத படிக்கத்*

தெரிந்தோர் வெறும் 25% மட்டுமே , ஆனால் அவர் ஆட்சிக்கு வந்ததன் பின் அது 83% உயர்ந்தது.

அது மாத்திரமன்றி ஒரு குடிமகன் விவசாயம் செய்ய விரும்பினால் அவருக்கு வாழ ஒரு வீடும், விவசாயம் செய்வதற்கு தேவையான நிலமும் விவசாய உபகரணங்களும், விதைகளும் பசளைகளும் இன்னும் இதற்கு அவசியமான அனைத்தும் முற்றிலும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டது.

**விடுதலை போராட்டங்களுக்கு ஆதரவு :**

உலகளவில் கிளர்ச்சிகளுக்கும் சுதந்திர போராட்டங்களுக்கும் ஆதரவு அளித்ததன் மூலம் கடாபி அமெரிக்காவுடன் பகைமையை தேடிக்கொண்டார். 1970 இன் பிற்பகுதிகளில் பிற நாட்டு கிளிர்ச்சியாளர்களுக்கு லிபியாவில் பயற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஐரிஸ் குடியரசு இராணுவம், வெனிசூலா கிளர்ச்சிக்காரர் ஆகியோருக்கு கடாபி ஆதரவு வழங்கினார்.

கடாபியின் ஆட்சியிலேயே லிபியர்களுக்கு மருத்துவ வசதி பெறுவதற்கு வெளிநாட்டுக்கு செல்ல வேண்டுமெனில் அரசு இலவசமாக அவர்களுக்கு உதவிகள் வழங்கும்.

அது மாத்திரமின்றி ஒரு வாகனம் வாங்கும் போதும் அதன் மதிப்பில் பாதித் தொகையை அரசு இலவசமாகவும் வழங்கியது. வியக் கத்தக்க வகையில் லிபியா உலக வங்கிகளிடம் இருந்து கடாமியின் ஆட்சியில் கடன் வாங்கியது கிடையாது.

**செயற்கை ஆற்றை உருவாக்கிய கடாபி :**

உலகிலேயே மிகப்பெரிய செயற்கை ஆற்றை உருவாக்கி லிபியாவின் பாலை நிலத்தை பசுமையாக்கியவர் என்ற பெருமையும் கடாபிக்கு உண்டு

உயர் கல்வி கற்று பட்டதாரியாகும் மாணவர்கள் தமக்குரிய வேலை வாய்ப்பு கிடைக்காது போகும் பட்சத்தில், அவர்களுக்குரிய தகுந்த தொழில் கிடைக்கும் வரை அந்தத் தொழிலுக்குரிய சம்பளத்தை அன்றைய காலத்தில் லிபிய அரசு மாத மாதம் வழங்கி வந்தது. லிபிய நாட்டிற்கு கிடைக்கும் எண்ணெய் வருமானத்தில் ஒரு தொகையை அந்த நாட்டு மக்களின் வங்கிக் கணக்கில் சேமிப்பில் இட்டு வந்தது அந்த அரசு

பிரசவத்தின் போது தாய்க்கு 5500 அமெரிக்க டாலர் நாணயத்துக்கு இணையான லிபிய தினாரை வழங்கியது கடாபியின் அரசு. 1980களில் 25% லிபியர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக

*விளங்கினர்.*

*லிபியாவை கடந்த பல தசாப்தங்களாக ஆட்சி செய்த கர்னல் கடாபி மேற்குலகுக்கு அடிபணியாமல் எப்போதும் சிம்ம சொப்பன மாகவே விளங்கினார். இன்றைய லிபியாவில் நடந்துவரும் போட்டி அரசுகளுக்கு இடையிலான மோதல் தற்போது உச்சகட்டத்தை அடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் கடாபியின் ஆட்சி கவிழ்ப்பே யாகும்.*

**ஆட்சி கவிழ்ப்பின் விளைவு**

*2011 அக்டோபர 20இல் கடாபியின் பிறந்த ஊரான சிரடே நகரை கைப்பற்றிய அமெரிக்க ஆதரவு படைகள் அவரை கொன்று விட்டதாக அறிவித்தனர். இதன் விளைவின் அறுவடையாக வட ஆப்பிரிக்க பிராந்தியத்திலும், அரபுலக நாடுகளிலும், லிபியாவில் உள்நாட்டுப் போரின் தாக்கம் மிக வலுவடைந்து உள்ளது.*

*(கார்த்திகை -2022)*




## ஹிஜாப் – பெண் உரிமையும் எதிர்ப்பு போராட்டங்களும் :

**ஈரானில் பூதாகரமாக வெடித்துள்ள ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம்..**
**தொடரும் மனித உரிமை மீறல்களும்–தூக்கு தண்டனைகளும்..**

ஈரானில் தொடரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் தொடர்புடைய இரண்டாவது நபருக்கு தூக்கு தண்டனை ஈரானிய அரசு நிறைவேற்றியுள்ளது. ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட நபர்களுக்கு ஈரான் அரசு தூக்கு தண்டனையை தொடர்ந்து நிறைவேற்றி இருப்பது உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஈரான் கால்பந்து வீரருக்கு மரண தண்டனை:**

இதே வேளை ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்ற ஈரான் கால்பந்தாட்ட வீரர் அமீர் நசீருக்கு (26) தூக்குத் தண்டனை

விதிக்கப்பட்டுள்ளமை சர்வதேச அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலகக் கோப்பை கால்பந்தாட்ட போட்டித் தொடர் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில், அமீர் நசீருக்கு தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது, கால்பந்தாட்ட ரசிகர்களையும், கால்பந்தாட்ட வீரர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஈரானின் இந்த நடவடிக்கைக்கு உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து கால்பந்து வீரர்களின் சர்வதேச கூட்டமைப்பு ட்விட்டர் பக்கத்தில், "தனது நாட்டின் பெண்களின் உரிமைகளுக்காக வும் அடிப்படை சுதந்திரத்திற்காக பிரசாரம் செய்த கால்பந்து வீரர் அமீர் நசீர், ஈரானில் மரண தண்டனையை எதிர்கொள்கிறார் என்ற அறிக்கையால் அதிர்ச்சியடைந்துள்ளோம். அமீருக்கு நாங்கள் துணை நிற்கிறோம். அவரது தண்டனையை உடனடியாக நீக்க வேண்டுகோள் விடுக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம்பெற்றுள்ள அமீர் நசீர் அந்நாட்டின் பீரிமியர் லீக் போட்டிகளிலும் விளையாடி வருகிறார். ஈரானில் நடந்த ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் பங்குகொண்டு கைது செய்யப்பட்டார். இந்த நிலையில், "கடவுளுக்கு எதிரான போர்" என்ற குற்றச்சாட்டிலும், பாதுகாப்பு வீரர்கள் பலி யானதை சுட்டிக் காட்டியும் அமீருக்கு ஈரான் அரசு மரண தண்டனை விதித்துள்ளது

**தொடரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் :**

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 2022 செப்டம்பர் மாதம் 13 ம் திகதி குர்திஸ்தான் மாகாணத்தை சேர்ந்த மாஷா அமினி என்ற 22 வயது பெண்ணை ஹிஜாப் சரியாக அணியவில்லை என்று தெரிவித்து அந்த நாட்டின் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அவரை காவல் நிலையத்தில் வைத்து பொலிஸார் தாக்கியதில், மாஷா அமினி கோமா நிலைக்கு தள்ளப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் மாஷா சிகிச்சை பலனின்றி கடந்த மார்ச் 16 ம் திகதி உயிரிழந்தார். அவரின் உடலை அவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்காமல் சிறப்புக் காவல் படையினரே அடக்கம் செய்தனர்.

இதையடுத்து ஈரானில் உள்ள பெண்கள், ஹிஜாப் அணிவதற்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தில் களமிறங்கினர். மாஷா அமினி என்ற இளம்பெண்ணின் மரணத்தைத் தொடர்ந்து ஈரானில் ஹிஜாப்



எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. இதில் 15000 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

**பெண்கள் போராட்டம் தீவிரம் :**

ஹிஜாப் சட்டத்திற்கு எதிராக ஈரான் நாட்டின் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக ஈரான் நாட்டில் ஹிஜாப் சட்டத்திற்கு எதிராகப் பெண்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தற்போது இந்தப் போராட்டம் சுமார் 80 நகரங்களில் தீ போல் பரவி உள்ளது. போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக காவல்துறை யினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இந்த போராட்டம் வெளியே தெரியாதவாறு அப்பகுதிகளில் இணையச் சேவைகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளைத் தளர்த்தி எலான் மஸ்க் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் மூலம் அந்நாட்டிற்கு இணையச் சேவைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போராட்டக்காரர்களை காவல்துறையினர் தாக்கும் காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது. மேலும் போராட்டக்காரர்களுக்கு சமூக வலைத்தளங்களில் ஆதரவு அதிகரித்து வருகின்றன. இதுகுறித்து ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி ஐநா சபையில், காவல்துறையினரின் நடவடிக்கையானது நியாயமானது எனக் கூறியுள்ளார்.

இந்த போராட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 500

*தாண்டி உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் ஹிஜாப் சட்டத்திற்கு எதிராக ஈரான் நாட்டின் பெண்கள் ஹிஜாப்பை எரித்து, தலை முடிகளை வெட்டி தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.*

**“அறநெறி பொலிஸ் பிரிவை” ஈரான் அரசு கலைப்பு:**

*மாதக்கணக்கில் தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தின் முதல் வெற்றியாக சமீபத்தில் ஈரான் அரசு பொதுவெளியில் பெண்கள் ஹிஜாப் சரியாக அணிவதையும், இஸ்லாமிய சட்டங்களை சரியாக பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட “அறநெறி பொலிஸ் பிரிவை” ஈரான் அரசு கலைக்க உத்தரவிட்டுள்ளது.*

*ஆனால் இதுவரை நடந்த போராட்டத்தில் ஈரானின் பாதுகாப்பு படையினர் நடத்திய கொடூரமான தாக்குதலில் இதுவரை 400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.*

*அத்துடன் போராட்டத்தில் அத்துமீறியதாக கூறி, போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தூக்கு தண்டனையும் ஈரான் அரசு நிறைவேற்றி வருகிறது.*

**400 பேருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை:**

*ஈரானில் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப் பட்ட சுமார் 400 போராட்டக் காரர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.*

*ஈரானில் சமீபத்தில் நடந்த ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களுக்கு ஈரான் சிறைத் தண்டனை அறிவித்துள்ளது. அதன்படி, 160 பேருக்கு 5 முதல் 10 ஆண்டு சிறைத் தண்டனையும், 80 பேருக்கு 2 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையும், 160 பேருக்கு 10 ஆண்டுகள் வரையும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இந்த நிலையில், ஈரான் போராட்டத்தில் 500 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும், அதில் 40 பேர் சிறுவர்கள் எனவும் ஐ.நா.வின் மனித உரிமை அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. மேலும், இந்தப் போரட்டத்தைக் கட்டுப்படுத்த தொடர்ந்து இணைய சேவையில் ஈரான் தடங்கல் ஏற்படுத்துவதாகவும் மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன.*

**பூதாகரமாக வெடித்துள்ள போராட்டம் :**

*ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 22 வயதான மாஷா அம்னி என்ற பெண் சரியாக ஹிஜாப் அணியவில்லை என்று, ஹிஜாப் ஆடை*




அணிவதைக் கண்காணிக்கும் சிறப்புக் காவல் படையினர் கைது செய்தனர். பின்னர் கொடூரமாகத் தாக்கப்பட்ட அப்பெண் செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி பரிதாபமாக உயிரிழந்தார். அவரின் உடலை அவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்காமல் சிறப்புக் காவல் படையினரே அடக்கம் செய்தனர்.

இச்சம்பவம் நாடும் முழுவதிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய நிலையில், ஹிஜாப் ஆடை அணிவதற்கு எதிராகவும், அப்பெண்ணிற்கு நீதி கேட்டும் அங்கு மிகப்பெரிய அளவில் இரண்டு மாதங்களாகப் போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டத்தின் தீவிரத்தை உணர்ந்த ஈரான் அரசு, பெண்ணின் மரணத்திற்குக் காரணமான ஹிஜாப் அணிவதைக் கண்காணிக்கும் சிறப்புக் காவல் பிரிவைக் கலைத்தது.

**இரண்டாவது தூக்கு தண்டனை**

போராட்டத்தின் போது 500 பேர் பலியானதாக மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. போராட்டத்தில் பங்கேற்ற மோஹ்சென் செஹாரி என்ற இளைஞர் போராட்டத்தின் போது போலீசாரைக் கத்தியால் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு சமீபத்தில் அவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இரண்டு போலீசாரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட மஜித்ரேசா ரக்னவார்டு என்ற மற்றொரு இளைஞருக்கும் தூக்குத் தண்டனை தற்போது நிறைவேற்றப்பட்டு உள்ளது. இச்சம்பவம் மனித உரிமை ஆர்வலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், போராட்டத்தில் ஈடுபட்ட

*வர்களைக் கைது செய்து உரிய விசாரணை ஏதுமின்றி உடனுக்குடன் தூக்குத் தண்டனை விதிப்பதற்கு எதிராக ஈரான் அரசு மீது உலகம் முழுவதிலும் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் தங்களது கண்டங் களைப் பதிவு செய்து வருகின்றனர்.*

*இதனிடையே, போராட்டத்தை பரப்பிய குற்றத்திற்காகவும், பாதுகாப்பு படையினரைக் கொன்ற குற்றத்திற்காகவும் 20 - க்கும் மேற்பட்டவர்களுக்கு ஈரான் அரசு மரணத் தண்டனை விதித்துள்ளது.*

*இதில், கடந்த வாரம் இருவர் பொதுவெளியில் தூக்கிலிடப் பட்டனர். ஈரான் அரசின் இந்தச் செயலுக்கு சர்வதேச அளவில் கண்டனம் எழுந்தது குறிப்பிடத்தக்கது.*

*ஹிஜாபிற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட மொஷென் ஷெகாரி என்ற நபர், பாதுகாப்பு படை வீரரை கத்தியால் குத்தியதாக தெரிவித்து அவருக்கு ஈரான் அரசு முதலில் தூக்கு தண்டனை வழங்கியது.*

*இதையடுத்து தற்போது மஜித்ரிசா ரஹ்நவர்டு என்ற நபர் பாதுகாப்பு படை வீரரை கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டு, இரண்டாவது நபராக மஜித்ரிசா ரஹ்நவர்டுவுக்கு தூக்கு தண்டனையை ஈரான் அரசு நிறைவேற்றியுள்ளது.*

*ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட நபர்களுக்கு ஈரான் அரசு தூக்கு தண்டனை நிறைவேற்றி இருப்பது உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*(சித்திரை - 2023)*



# ஹவுதி – பிராந்திய ஆதிக்க விளைவு :

**செங்கடலில் தொடரும் கப்பல் கடத்தல்கள்..**
**இஸ்ரேலை எதிர்க்கும் யேமன் ஹவுதி கிளர்ச்சி படை..**

மத்திய கிழக்குப் பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் இன்னமும் தொடர்கிறது. அதேவேளை செங்கடல் (Red Sea) பிராந்தியத்தில் அதிகரித்த பதட்டங்களால் சர்வதேச வணிக கப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் கப்பல் வழித்தடத்தில் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட பல சரக்குக் கப்பல் களையும் கைப்பற்றி பல கடற் பணியாளர்களை பிணைக் கைதிகளாகக் கைப்பற்றி உள்ளனர்.

செங்கடல், எகிப்தின் சூயஸ் கால்வாயிலிருந்து அரேபிய

தீபகற்பத்தை ஆபிரிக்காவில் இருந்து பிரிக்கும் நீரிணையாகும்.

இது உலகளாவிய கப்பல் மற்றும் எரிசக்தி விநியோகத்திற்கான முக்கிய வர்த்தக பாதையாக உள்ளது. அதனால் தான் அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து பல கப்பல்களை கடலில் பயணஞ் செய்வதை நிறுத்தியுள்ளது.

இதற்கிடையே லெபனான், ஈரான் உள்ளிட்ட நாடுகளில் இருக்கும் ஆயுத போராளிக் குழுக்களும் இஸ்ரேலுக்கு எதிரான தங்கள் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளன.

**இஸ்ரேலுக் கெதிரான ஹவுதி:**

இஸ்ரேலுக்கு எதிரான போரில் தாங்களும் களமிறங்கியுள்ள தாக யேமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சிக் குழு அண்மையில் அறிவித் துள்ளது.

சுனி இஸ்லாமிய நெறியை பினபற்றும் யேமன் (Yemen) அரசிற்கு எதிராக 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது தான் ஹவுதி ஆயுதக்குழு. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

யேமனில் வாழும் ஹவுதி பழங்குடியினரே இந்த அமைப்பில் பெரும்பாலும் உறுப்பினர்களாக உள்ளனர். ஷியா பிரிவு இஸ்லாமியர் களான ஹவுதிக்கள், சுனி பிரிவு இஸ்லாமியர்களை கொண்டு அமைந்த யேமன் நாட்டு அரசை எதிர்த்து நீண்ட காலமாக போராடி வருகின்றனர்.

அத்துடன் யேமனின் சிறு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுதிக்கள் நாடு முழுவதையும் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டு வர போராடி வருகிறார்கள். ஹவுதிக்களுக்கு எதிரான யேமன் அரசு நடத்தும் சண்டைக்கு சவுதி அரேபியாவும் உதவி வருகிறது. இதன் காரணமாக சவுதி அரேபிய நகரங்களை கூட ஹவுதி ஆயுதக்குழுவினர் அவ்வப்போது ஏவுகணைகளை வீசி தாக்குவது உண்டு.

ஷியா இஸ்லாமியர்கள் நிறைந்த ஈரானும் ஹவுதிக்களுக்கு ஆயுதம் மற்றும் நிதி உதவிகளை அளித்து வருவதாக தகவல்கள் உண்டு.

இந்த சூழலில்தான் இஸ்ரேலுக்கு எதிராகவும் தங்கள் போர் தொடங்கியுள்ளதாக ஹவுதிக்கள் அறிவித்துள்ளனர். ஹமாஸ் தவிர லெபனானிலிருந்து ஹிஸ்புல்லாக்கள், சிரியாவிலிருந்து ஈரான் ஆதரவு படைகள் இஸ்ரேலை தாக்கி வரும் நிலையில் ஹவுதிக்களும் தற்போது அதில் இணைந்து கொண்டுள்ளது.

இந்த போர் மேலும் தீவிரமடையுமா என்ற கவலையை உலக




நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. யேமனிலிருந்து சவுதி அரேபியா என்ற பெரும் நிலப்பரப்பை கடந்து ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இஸ்ரேல் மீது ஹவுதிக்கள் தாக்கியது கவனத்தை ஈர்த்துள்ளது.

**இந்தியாவை நோக்கி வந்த கப்பல் கடத்தல்:**

யேமனில் உள்ள ஹவுதி குழு இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த சர்வதேச சரக்குக் கப்பலைப் பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது. தெற்கு செங்கடல் பகுதியில் அந்த சரக்கு கப்பல் சென்று கொண்டிருந்த போது ஹவுதி குழு இதைக் கடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதை இஸ்ரேல் ஈரானின் பயங்கரவாத செயல் என்றும் உலக அளவில் பதற்றத்தை ஏற்படுத்தும் சம்பவம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

செங்கடலில் சென்று கொண்டிருந்த நிலையில், ஹெலிகாப்டர் மூலம் ஹவுதி படை தனது வீரர்களை அதில் இறக்கி, அதன் மூலம் கப்பலைக் கடத்திச் சென்றுள்ளனர்.

பிரிட்டன் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த கப்பலை ஜப்பான் நிறுவனத்தால் இயக்கப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது. அந்த கப்பலில் உக்ரைன், பல்கேரியன், பிலிப்பைன்ஸ் மற்றும் மெக்சிகோ என பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 பணியாளர்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அந்த சரக்கு கப்பலை ஹவுதி படை கடத்தியதை உறுதி செய்துள்ளனர்.

இந்தியாவுக்கு வந்த சர்வதேச சரக்கு கப்பல் கடத்தப் பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஹவுதி படை முன்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் இஸ்ரேல் நிறுவனம் அல்லது இஸ்ரேல் கொடியுடன் இருக்கும் அனைத்து கப்பல்களையும் குறிவைத்துக் கடத்துவோம் என்று எச்சரித்திருந்தது. அதன்படி இந்த கடத்தப்பட்ட கப்பலும் இஸ்ரேலுக்கு சொந்தமானது தான் என்று ஹவுதி கூறியுள்ளது.

**இஸ்ரேல் கப்பல் கடத்தல்:**

நவம்பர் **21, 2023** இல் இஸ்ரேல் சரக்கு கப்பல் கடத்தலுக்கும் ஹவுதி படைகள் பொறுப்பேற்பு கொண்டனர். துருக்கியில் இருந்து கேலக்ஸி லீடர் என்ற சரக்கு கப்பல் இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்தது. இதில் இஸ்ரேலியர்கள் உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த சுமார் **52** பணியாளர்கள் பயணம் செய்தனர்.

இந்த கப்பல் யேமன் அருகே செங்கடல் பகுதிக்கு வந்த போது திடீரென காணாமல் போனது.

இந்த கப்பலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்தி இருக்க கூடும் என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. மேலும் இதுகுறித்து இஸ்ரேல் கூறுகையில், இது இஸ்ரேல் நாட்டிற்கு சொந்தமான கப்பல் இல்லை என்றும் ஆபிரகாம் உங்கர் என்ற இஸ்ரேலிய தொழிலதிபருக்கு சொந்தமானது என்றும் விளக்கம் அளித்துள்ளது.

கப்பலின் ஜப்பானிய ஆபரேட்டர், NYK லைன் கடத்தப்பட்ட நேரத்தில் கப்பலில் சரக்கு எதுவும் இல்லை என்று கூறினார். அதன் பணியாளர்கள் பிலிப்பைன்ஸ், பல்கேரியா, ருமேனியா, உக்ரைன் மற்றும் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் என்று NYK நிறுவனம் தெரிவித்துள்ளது.

**ஈரான் மீது குற்றச்சாட்டு:**

**2019** முதல், ஈரான் உலக வல்லரசுகளுடனான அணுசக்தி ஒப்பந்தத்தின் அனைத்து வரம்புகளையும் உடைக்கத் தொடங்கி உள்ளது. சர்வதேசக் கடலில் தொடர்ச்சியான கப்பல்கள் கடத்தலுக்கும், தாக்குதலுக்கும் ஈரான் மீதான குற்றச்சாட்டும் உள்ளது.

செங்கடல் கடற்பரப்பில் இஸ்ரேலிய கப்பல்களை குறிவைப்பதாக யேமன் ஹவுதிகள் பலமுறை மிரட்டல் விடுத்துள்ளனர். இத்தகைய தாக்குதல்கள் ஈரான் அரசு ஆதரிக்கின்றது என்றும், அதே போல் யேமனில் உள்ள ஹவுதிகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றன். என்றும் கூறப்படுகிறது.



**யேமனில் இருந்து ஏவுகணை:**

கடந்த மாதத்தில் இரண்டு முறை, அமெரிக்க போர்க்கப்பல்கள் யேமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் அல்லது ட்ரோன்களை இடைமறித்துள்ளன. அவை இஸ்ரேலை நோக்கிச் செல்லும் அல்லது அமெரிக்க கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக இருந்ததாக நம்பப்படுகிறது.

நவம்பர் மாதம் வடக்கு செங்கடலை நோக்கி ஹவுதி படைகளால் ஏவப்பட்ட மூன்று தரைவழி தாக்குதல் ஏவுகணைகள் மற்றும் பல ஆளில்லா விமானங்களை கடற்படை அழிக்கும் கப்பலான யுஎஸ்எஸ் கார்னி இடைமறித்தது. அதன்பின் நவம்பர் 15 அன்று மற்றொரு அமெரிக்க நாசகார கப்பலான யுஎஸ்எஸ் தாமஸ் ஹட்னர் யேமனில் இருந்து வந்ததாகக் கூறப்படும் ஆளில்லா விமானத்தை தண்ணீருக்கு மேல் சுட்டு வீழ்த்தினர்.

அமெரிக்க பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய குழுவினர் நடவடிக்கை எடுத்ததாகவும், கப்பலுக்கு எந்த உயிரிழப்பும் அல்லது சேதமும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செங்கடலில் தொடரும் கப்பல் கடத்தல்களால், சர்வதேச வணிக கப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அதே வேளை

இஸ்ரேலை எதிர்க்கும் யேமன் ஹவுதி கிளர்ச்சி படைகளால் இந்த போர் மேலும் தீவிரமடையுமா என்ற கவலையை உலக நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. யேமனிலிருந்து சவுதி அரேபியாவின் பெரும் நிலப்பரப்பை கடந்து ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இஸ்ரேல் மீது ஏவுகணைகளால் ஹவுதிக்கள் தாக்கியதும் இராணுவ ஆய்வாளர்கள் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

(மார்கழி - 2023)



## சிரியா – அழிவின் அகோரத்தில் அரபு வசந்தம்:

**அரபு வசந்தமாக ஆரம்பித்து முடிவின்றிய சிரிய போர்..**
**சிரிய அதிபர் அசாத் மீதான போர்க் குற்றம் சாத்தியமா ..**

*சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றால் சிரிய அதிபர் அல்-அசாத்தை கைது செய்ய கோரப்பட்டது. சிரியாவின் உள்நாட்டுப் போர், சர்வதேச நாடுகளின் தலையீட்டால் பாரியளவில் உயிர் இழப்புக்களை சந்தித்தது. ஆயினும் இப்போரின் நிகழ்கால நிலவர உண்மையாக இப்போரில் எவரும் வெற்றியோ- தோல்வியடைய வில்லை என்பதை உணர்த்துகிறது.*

*சிரியாவின் உள்நாட்டுப் போரில் மார்ச் 2011 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2022 ஆம் ஆண்டு வரை 476600பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆனால், இது உண்மையான*

எண்ணிக்கை இல்லை என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் இயங்கும் போர் கண்காணிப்புக் குழு இதுவரை சிரிய போரில் 494438 பேர் பலியாகியிருப்பதாக தெரிவித்துள்ளது.

போர் தொடங்குவதற்கு பல காலங்களுக்கு முன்பே, சிரியாவின் மக்கள் வேலையின்மை, அதிகம் பரவியிருந்த ஊழல் மற்றும் அரசியல் சுதந்திரமின்மை ஆகியவை அதிபர் அல்-அசாத்தின் ஆட்சியில் உள்ளது குறித்து குற்றச்சாட்டுகளை வைத்தனர். தந்தை ஹஃபீஸிற்கு பிறகு, 2000ஆம் ஆண்டில், அதிபரானார் அல்-அசாத்.

சிரியா அதிபர் பஷர் அல்-அசாத்திற்கு எதிராக தொடங்கிய ஒரு போராட்டம், சில சர்வதேச நாடுகளின் தலையீட்டால் முழு உள்நாட்டுப் போராக உருவெடுத்தது.


### சிரியாவில் ஏன் போர் நடக்கிறது?

2011களில் அமைதியின்மை தொடரத் தொடர, போராட்டங்கள் பல வெடித்தன. முதலில் தற்காப்பிற்காகவும், பிறகு தங்கள் பாதுகாப்பு அதிகாரிகளை விரட்டி அடிக்கவும், எதிரணியை சேர்ந்தவர்கள் ஆயுதங்களை ஏந்தினர். அந்நிய சக்தியின் உதவிகளை பெற்றுள்ள பயங்கரவாதிகளை முழுமையாக நசுக்கி நாட்டின் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டு வருவேன் என்று அதிபர் உறுதிமொழி அளித்தார்.

இந்த வன்முறைகள் மிக விரைவிலேயே அடுத்த நிலைக்கு சென்று உள்நாட்டு போராக மாறியது. அரசின் படைகளை எதிர்கொள்வதற்காக, நூற்றுக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் அணி வகுத்தனர்.

இப்போரில் சிரிய அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் உதவின. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் ஆரம்பக்கட்டத்தில் பாரிய அளவில் கிளர்ச்சியாளர்களுக்கு உதவின. பின்னர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக துருக்கி மற்றும் சில அரபு நாடுகள் உதவி இருந்தன.

12 வருடமாக தொடரும் போரில் சிரிய மக்கள் எண்ண முடியாத துயரத்தை ஏற்படுத்தியுள்ளன. போர் காரணமாக சுமார் 50 லட்சம் மக்கள் வேறு நாடுகளுக்கு அகதிகளாக சென்றனர். 6 லட்சம் மக்கள் உள் நாட்டிலேயே அகதிகளாக வேறு இடங்களுக்கு சென்றனர். சுமார் 1 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு உணவு உட்பட மனிதாபிமான உதவிகள் கிடைக்கப்படாமல் போனது. மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் என மனிதாபிமானமற்ற முறையில் குண்டுகள் வீசப்பட்டன.




**12 - வது ஆணடடில் தொடரும் போர்:**

*சிரிய நாட்டின் பெரிய நகரங்களை அரசு காட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலும் சில நகரங்கள் தற்போதும் உள்ளன.*

*12 ஆண்டுகளாக நடக்கும் சிரிய போர் எப்போது முடிவுக்கு வரும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை. ஆனால் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலம் சிரிய போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.*

*போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தற்போது வரை தோல்வியே அடைந்துள்ளன. இந்த நிலையில் சிரிய அதிபர் பஷார் பதவி விலகல் ஒன்றையே கிளர்ச்சி யாளர்கள் சிரிய போரை முடிவுக்கு கோரிக்கையாக வைக்கின்றனர். கிளர்ச்சியாளர்களின் இந்தக் கோரிக்கையை பஷார் ஏற்கத் தயாராக இல்லை.*

*அதேவேளை சிரிய போரை முடிவுக்கு கொண்டுவர துருக்கி உள்ளிட்ட நாடுகள் எடுத்த முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந் துள்ளன.*

*இந்த நிலையில்தான் சிரிய உள்நாட்டுப் போர் பன்னிரண்டா வது ஆண்டில் நுழைந்திருக்கிறது. அதிகாரத்திற்காக தொடங்கப்பட்ட சிரிய போர் இன்னமும் தொடர்கிறது.*

**சிரியாவில் ஒரு போர்க்களம்:**

*அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்த போரில் முக்கிய விடயங்களாக*

அமைந்தன. அதிபரின் ஆதரவு மற்றும் எதிர் படைகளுக்கு, இந்நாடுகள் அளித்த ராணுவ, பொருளாதார, அரசியல் உதவிகள் இப்போர் தீவிரமடையவும், தொடரவும் வழிவகுத்தன. இதுவே பிற்காலத்தில், சிரியாவை ஒரு போர்க்களமாக மாற்றியது.

சிரியாவில் டெர்ரா நகரின் தெற்குப்பகுதியில், 2011ஆம் ஆண்டின் மார்ச் மாதம், அரபு வசந்தத்தால் ஈர்க்கப்பட்ட, ஜன நாயகத்தை முன்னிறுத்திய ஒரு கண்டன போராட்டம் நடைபெற்றது. இத்தகைய போராட்டங்களை செய்வோரை நசுக்க, அரசு தனது படை களை பயன்படுத்த, அதிபர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, நாடு முழுவதும் போராட்டங்கள் தொடங்கின. சிரிய அதிபரின் ஆதரவுப் படைகளுக்கும், எதிரானவர்களுக்கு இடையிலான போர் என்ற வடிவத்தை தாண்டி மனிதாபிமான பேரழிவை இந்த போர் தாண்டியுள்ளது.

**சுன்னி - ஷியா -அலாவித் பிரிவினை :**

சிரிய நாட்டில் பெரும்பான்மையில் உள்ள சுன்னி பிரிவு இஸ்லாமியர்களை அதிபரின் ஷியா அலாவித் பிரிவுக்கு எதிராக தூண்டிவிட்டு, பிரிவினைவாதத்தை உருவாக்குவதாக வெளிநாட்டு சக்திகள்மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. இந்த பிரிவு இருதரப்பிலிருந்தும் அத்துமீறல்கள் நடக்க ஊக்கமளித்தது. இதனால் உயிர்ச்சேதம் மட்டுமில்லாமல், பல மதஅமைப்புகள் பிளவு பட்டதுடன் மோதிக் கொண்டனர்.

பின்னர் இந்த பிரிவுகளில் ஜிகாதிக்குழுக்களும் இணைந்து கொண்டன. அவை மேலும், இந்தப் போரில் பல பகுதிகளை உரு வாக்கின. அந்நாட்டின் வட-மேற்கு பகுதியின் பல பகுதிகளை ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் என்ற குழு கட்டுப்பாட்டில் வைத்து இருந்தது. தஹ்ரிர் அல்-ஷாம் என்பது, அல்-கய்தா மற்றும் அல்-நுஸ்ராவின் கூட்டணியில் உருவான குழுவாகும்.

இதற்கிடையில் சிரியாவின் வட-கிழக்கு பகுதிகளின் பல பகுதிகளை இஸ்லாமிய அரசு என தங்களை அழைத்துக்கொள்ளும் ஐ.எஸ் குழு கைபற்றியதும் அறிந்ததே.

ஷியா பிரிவினரின் புனித தலங்களை பாதுகாப்பதற்காக, லெபனான், ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் யேமன் உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்த பல ஷியா கிளர்ச்சியாளர்கள் சிரியா அரசு ராணுவத்துடன் இணைந்து சண்டையிட்டு வந்தனர்.



**ரஷ்யாவின் தலையீடு:**

*சிரிய அதிபருக்கு ஆதரவாக செயல்படும் ரஷ்ய அரசு, 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சிரியா அரசை நிலையாக வைப்பதற்காக விமான தாக்குதல்களை முதலில் தொடங்கியது. பயங்கரவாதிகள் மட்டுமே குறிவைக்கப்படுவார்கள் என்று ரஷ்யா தெரிவித்தபோதிலும், அதன் தொடர் தாக்குதல் என்பது, அமெரிக்க மேற்கத்தியர்களின் ஆதரவை பெற்றிருந்த கிளர்ச்சியாளர்கள் மீதும், பொதுமக்கள் வசித்த இடங்களிலும் நடந்ததாக மனித உரிமை செயல்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.*

*ரஷ்யாவின் இந்த தலையீடு என்பது, போரின் திசையை சிரிய அதிபருக்கு ஆதரவாக மாற்றியது. 2016 ஆம் ஆண்டின் பின்னாட்களில், கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த கிழக்கு அலெப்போவில் ரஷ்ய விமானப்படையின் தாக்குதல் அதிகமாக இருந்தது.*

*பிறகு 2017ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில், ரஷ்யாவின் சிறப்பு படையினர் மற்றும் பிற குழுக்களின் இணைந்த தொடர் தாக்குதல், டேர் அல்-சோர் நகரில் இருந்த ஐ.எஸ் குழுவின் உறுதியான கட்டுப்பாட்டை உடைத்தது. இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், ரஷ்ய படைகளின் சில பிரிவை பின் வாங்கிக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். ஆனால், சிரியா முழுவதும் அவர்கள் தொடர்ந்து விமானப்படை மூலம் தாக்குதல்கள் நடத்தினர்.*

**போரின் தாக்கம் என்ன?**

*இங்கிலாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் கண்காணிப்பு குழுவான, மனித உரிமைகளுக்கான சிரியாவின்*

ஆய்வகம், வெளியிட்ட அறிக்கையில், சிரியாவில் 476600 பேர் இறந்துள்ளதை ஆவணப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது. இதில் 103000பேர் பொதுமக்கள். இந்த கணக்கெடுப்பில், காணாமல் போயிருக்கலாம், இறந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்ட 56900 பேர் சேர்க்கப்படவில்லை என்பதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்த விவகாரத்தால் 4.7 லட்சம் மக்கள் இறந்துள்ளதாக மனித உரிமைகள் குழு கணக்கிட்டது. ஐ.நாவின் கணக்கின்படி 5.6 மில்லியன் மக்கள் சிரியாவிலிருந்து வெளியேறியுள்ளனர். அதில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள். சமீபகால வரலாற்றிலேயே இல்லாத அளவிலான இந்த புலம்பெயர்தலை சமாளிக்க, அருகாமை நாடுகளான லெபனான், ஜோர்டான் மற்றும் துருக்கி ஆகியவை திணறின.

சிரியா அகதிகளில் 10சதவிகிதம் பேர் பாதுகாப்பான முறையில் ஐரோப்பாவில் தஞ்சம் சேர்ந்தனர். மேலும் 6.1 மில்லியன் மக்கள் தங்கள் நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். 2018இல், சிரியாவினுள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் 13.1மில்லியன் மக்களுக்கு உதவ 3.5பில்லியன் தொகை தேவைப்படும் என ஐ.நா கணக்கிட்டது.

கிட்டத்தட்ட 70% மக்கள் மிகவும் கொடுமையான வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். விலைவாசி மற்றும் உணவுத்தட்டுப்பாட்டால் ஆறு மில்லியன் மக்கள் உணவில்லாமல் இன்னமும் தவிக்கின்றனர். சில பகுதிகளில் உள்ள மக்கள் தங்களில் 15 முதல் 20 சதவிகித வருவாயை குடிநீரிற்காக செலவிடுகிறார்கள்.

மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு உதவிகள் சென்று சேர முடியாத நிலையை போரில் ஈடுபட்டுள்ள குழுக்கள் உருவாக்கியுள்ளன. சுமார் 2.98 மில்லியன் மக்கள் உதவிகள் சென்றடைய முடியாத பகுதிகளில் உள்ளனர்.

**போர் முடிவுக்கான நடவடிக்கைகள்:**

அரசியல் ரீதியான முடிவு மட்டுமே இந்த போருக்கு தீர்வாக இருக்கும் என்று சர்வதேச சமூகம் பல காலங்களுக்கு முன்பு முடிவு செய்தது. ஐநாவின் பாதுகாப்புக்குழு, 2012 ஜெனிவா குழுவை (2012 Geneva Communique) அமலாக்க அழைப்பு விடுத்தது. இந்த குழுவானது இருதரப்பின் கவனத்துடன் உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழுவாகும். 2014ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த ஜெனிவா 2 என்ற அமைதி பேச்சுவார்த்தைக்கான மத்தியஸ்தராக ஐ.நா செயல்பட்டது. ஒன்பது குழுக்களாக நடந்த இந்த பேச்சுவார்த்தை நடந்தது.

அரசியலமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை கொண்டு வரவும், சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்தவும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சிறிய அளவிலான முன்னேற்றமும் ஏற்பட்டது.

போர்க்களத்தில் பல இடங்களில் பின்வாங்கியபோதும், பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தொடர்ந்து அதிபர் பதவி விலக வேண்டும் என்று கேட்கப்பட்டு வந்ததால், இந்த பேச்சுவார்த்தைகளின் மீது ஆர்வமில்லாதவராக இருந்தார் அதிபர் அசாத்.

மேற்கத்திய சக்திகள், இந்த பணிகளுக்கு இடையே, ரகசிய முறையில் ரஷ்யா பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், தனது கூட்டாளி அணிகள் தொடர்ந்து நீடித்து இருக்க வேண்டும் என்று இந்த நடவடிக்கைகளில் அது ஈடுபட்டதாக கூறுகின்றன. ரஷ்யாவில் சர்வதேச பேச்சுவார்த்தைக்கான மாநாடு நடந்தபோதிலும், பெரும்பாலான அரசியல் எதிர்கட்சிகளும், ஆயுதமேந்திய குழுக்களும் அதில் பங்கேற்க மறுத்துவிட்டனர்.

அஸ்தானாவில் ரஷ்யா, ஈரான் மற்றும் துருக்கிக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையின் முடிவாகவே இந்த மாநாடு அமைக்கப் பட்டது.

கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதம், இந்த நாடுகள், சிரியாவில் நான்கு விரிவாக்க இடங்களை அமைக்க ஒப்புக்கொண்டன. ஆரம்பத்தில் தாக்குதல் குறைந்திருந்தாலும், மே மாதத்திற்கு பிறகு அதில் இரண்டு இடங்களில் அரசு தாக்குதல் நடத்த தொடங்கியது.

அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்த போரில் முக்கிய பங்காளிகளாக அமைவதால் போரின் தீவிரம் தணிந்தாலும், போர் இன்னமும் முடிவுறவில்லை.

*(ஆனி - 2023)*



## சவுதி – ஈரான்: திரை மறைவு போர்:

### மறைமுக போரால் உருவான ஹவுதிக்கள்...
### செங்கடல் ஆதிக்கமும் பாலஸ்தீன ஆதரவும்....

யேமனில் உள்ள ஹவுதிகளுக்கு எதிராக பல இடங்களில் பல நாடுகள் ஒன்றிணைந்து வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந் நிலையில் குறித்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என ஹவுதிகள் எச்சரித்தனர்.

**ஹவுதி மீது கூட்டுத் தாக்குதல்:**

அவுஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்தின் ஆதரவுடன் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் கூட்டாக இந்த தாக்குதலை மேற் கொண்டன.

*யேமன் உள்நாட்டுப் போர் சவுதி தலைமையில் அதன் கூட்டணிக்கும் யேமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு இடையில் நடந்து வருகிறது.*

*இதில் சவுதி அரேபியாவை எதிர்க்கும் ஈரான் நாடு, ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. அமெரிக்கா இதில் சவுதி அரேபியாவுக்கு ஆதரவளித்து வருகிறது. இருப்பினும், இது மறைமுகமாக ஈரான் மற்றும் சவுதி அரேபியாவுக்கு நடக்கும் போராகவே கருதப்படுகிறது.*

**யேமன் உள்நாட்டுப் போர்:**

*1990-ம் ஆண்டிலிருந்து யேமன் அதிபராக அலி அப்துல்லா சலே இருந்தார். 2011-ம் ஆண்டு நடைபெற்ற "அரபு வசந்தம்" என்று கூறப்படும் அரபு நாடுகளில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு ஆட்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். பின்பு சவுதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகள் ஒத்துழைப்பு கவுன்சிலின் முயற்சியில் புதிய அதிபராக மன்சூ ஹடி யேமனில் பதவியேற்றார்.*

*அதேசமயம், தாங்கள் ஓரங்கட்டப்படுவதாக யேமனிலுள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நினைத்தார்கள். யேமனில் நடைபெற்ற புரட்சியில் பங்கேடுத்து, சலேவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முக்கியக் காரணமாக இருந்தவர்கள் இவர்கள் ஆவர்.*

*2014-ம் ஆண்டு புதிய அதிபரான ஹடிக்குப் போர்க்கொடி தூக்கிய ஹவுதி கிளர்ச்சியாளர்கள், முன்னாள் அதிபர் சலேவுடன் சேர்ந்து யேமன் தலைநகர் சனாவைக் கைப்பற்றினார்கள். அப்போது அதிபராக இருந்த ஹடி, சவுதி அரேபியாவுக்குத் தப்பிச் சென்றார். இங்கிருந்துதான் தொடங்கியது யேமன் உள்நாட்டுப் போர்.*

**சவுதி தலைமையிலான படைகள்:**

*இதற்கு பிறகு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஒருபுறமும், யேமன் அரசுக்கு ஆதரவாக சவுதி தலைமையிலான படைகள் ஒருபுறமும் யேமனில் போரிட்டுவருகின்றனர். இந்தப் போர் மத்திய கிழக்கின் மிக ஏழ்மையான நாடாக யேமனை பாரிய அளவில் மாற்றியிருக்கிறது.*

*இது யேமனில் நடக்கும் போர் என்றாலும், திரைமறைவில் இது ஈரானுக்கும் சவுதிக்கும் இடையே நடைபெறும் போராகவே பலர் கருதுகின்றனர். பொது சம பலத்தில் இருக்கும் இருவருக்கும் ஓர் அதிகார சண்டையாகக்கூட இதைப் பார்க்கலாம். அடிப்படையில், சவுதி அரேபியாவுக்கும் ஈரானுக்குமான போர் என்பது மத்திய கிழக்கில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்ற போட்டியே.*




அந்தப் பிராந்தியத்தில் இருபெரும் எதிரி நாடுகளாக சவுதி அரேபியாவும், ஈரானும் இருக்கின்றன. இரு நாடுகளிலும் எண்ணெய் வளம் நிறைந்திருக்கிறது. இந்த இரு நாடுகளுக்கு இடையேயுள்ள இந்த மோதல் தன்மைக்கு இரு நாடுகளிலுமுள்ள மதப் பிரிவும் காரணம்.

ஈரானில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சவுதியில் சுன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

**சவுதி – ஈரான் மதப் பிரிவு:**

அரச குடும்பத்தால் ஆளப்படும் சவுதி அரேபியாவில் இஸ்லாம் பிறந்ததாகக் கூறப்படுகிறது. உலக அளவில் எண்ணெய் ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கும் ஒரு நாடு. முஸ்லிம் நாடுகளின் அரசன் தான் தான் என்ற நினைப்பில் இருந்த சவுதி அரேபியாவுக்கு 1979-ம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சி சவாலாக அமைந்தது.

இந்த இஸ்லாமியப் புரட்சி என்பது, ஈரானில் ஆட்சி செய்துவந்த பஹலவி அரச ராஜ்ஜியத்துக்கு எதிராக நடைபெற்றது.

அந்தப் புரட்சியில் ராஜாங்க அரசு தூக்கியெறியப்பட்டு, ஈரானின் அதிஉயர் தலைவர் என்று அழைக்கப்படும் அயதுல்லா கொமேனியின் தலைமையில் இஸ்லாமியக் குடியரசு ஆட்சி அமைந்தது. புதிதாக அமைந்த அயதுல்லா கொமேனியின் அந்த ஆட்சி தனது எல்லைகளைத் தாண்டியும் அதை விரிவுப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை வெளிப்படுத்தியது.

**சவுதியின் கூட்டாளி அமெரிக்கா:**

யேமன் போரில் சவுதி, ஈரானுக்கு அடுத்தபடியாக முக்கியப்

பங்குவகிக்கும் நாடு அமெரிக்கா. சவுதி அரேபியாவும் அமெரிக்காவும் நட்பு நாடுகள். இதை, ஹஎதிரிக்கு எதிரி நண்பன்" என்ற சொல்லடைக்கு ஏற்பப் பொருத்திப் பார்க்கலாம். ஆம், இரு நாடுகளுக்கும் எதிரியாக இருப்பது ஈரான். அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையேயான நீண்ட விரிசல் என்பது 1953ம் ஆண்டில் தொடங்கியது.

ஈரானில் 1953ம் ஆண்டில் மக்களால் தேர்வுசெய்யப்பட்ட பிரதமர் முகமது மொசாடக், எண்ணெய் வளத்தை தேசியமயமாக்க நினைத்தபோது அவரின் ஆட்சியைக் கவிழ்த்து முகமது ரெசா ஷாவுக்கு ஆதரவாக இருந்து ஷாவை பதவியில் அமரச் செய்தது அமெரிக்கா மற்றும் பிரிட்டன். அதன் பிறகு 1979-ம் ஆண்டில் நடைபெற்ற ஈரான் புரட்சி வரை ரெசா ஷாதான் அங்கு ஆட்சியில் இருந்தார்.

சமீபத்தில்கூட ஈரான் புரட்சிகர ராணுவத் தலைவர் காசெம் சுலேமானி அமெரிக்காவால் கொல்லப்பட்டார். இது இரு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை அதிகரித்ததோடு போர் ஏற்படுமோ என்ற அச்சத்தையும் கூட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**சவுதி அரேபியா-அமெரிக்க உறவு:**

சவுதி, அமெரிக்கா இரு நாடுகளும் 1930 களிலிருந்து ராஜரீக உறவுகளைப் பேணிவருகின்றன. அமெரிக்கா, சவுதி அரேபியாவைத் தனது முக்கியக் கூட்டணி நாடாகவே கருதிவருகிறது. மேலும், அமெரிக்கா தனது ஆயுதங்களை சவுதி அரேபியாவில் இறக்குமதி செய்துவருகிறது.

யேமன் போர் சமயத்தில் சவுதி அரேபியா மிகப்பெரிய அளவில் ஆயுதங்கள் வாங்கிக் குவித்திருப்பதாகப் பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

டிரம்ப் அரசு சவுதி மீது கடுமை காட்டாததற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறப்பட்டது. டிரம்ப்பின் ஆட்சிக்காலத்தில் சவுதி அரேபியாவுக்கு அவர் தீவிர ஆதரவைத் தெரிவித்து வந்தார்.

**செங்கடலில் கப்பல்களுக்குக் குறி:**

இஸ்ரேல் ராணுவம்-காஸாவின் ஹமாஸ் ஆயுதக் குழு இடையிலான போர் அக்.7-ஆம் தேதி தொடங்கியதிலிருந்து இந்த விவகாரத்தில் பேசுபொருள் ஆகியிருக்கும் மற்றொரு அமைப்பு அதன் ஹவுதி. செங்கடலில் இஸ்ரேலை நோக்கிப் பயணிக்கும் அல்லது இஸ்ரேலிலிருந்து பயணிக்கும் சரக்கு கப்பல்களைக் குறிவைத்து



தாக்குதல் நடத்திவருவதன் மூலம் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருக்கும் இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள்.

உலகின் பிரதான கிழக்கு-மேற்கு வர்த்தக வழித்தடமாக செங்கடல் அமைந்துள்ளது. இந்தச் செங்கடலில் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் சூயல் கால்வாயை அணுகுவது பெரும் ஆபத்தாக மாறியுள்ளது. சூயஸ் கால்வாய் வழியாக ஆசியாவுடன் ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் இணைக்கும் முக்கிய வர்த்தகப் பாதையை ஹவுதி அமைப்பினர் சீர்குலைத்துள்ளனர் இந்தப் பாதையையே பல கப்பல்கள் தவிர்க்கத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கும் வழிவகுத்துள்ளது.

**ஹவுதியின் தாக்குதல்:**

செங்கடலின் தெற்குப் பகுதியில் குறுகிய பகுதியாகக் காணப்படும் பாபெல்-மாண்டேப் நீரிணையே ஹவுதி கிளர்ச்சியாளர் களின் முக்கியமான தாக்குதல் பகுதியாகும். இந்தப் பகுதியைக் கடக்கும் சரக்கு கப்பல்கள் மீது ராக்கெட் தாக்குதல், ட்ரோன் தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களை ஹவுதி அமைப்பினா நடத்தி வருகின்றனர். நவ. 19-ஆம் தேதி பிரிட்டனைச் சேர்ந்த “கேலக்ஸி லீடர்' என்ற சரக்கு கப்பலை முதல் முறையாக ஹவுதி அமைப்பினர் செங்கடலில் கைப்பற்றினர்.

இதன்பின் டிசம்பர் 23-ஆம் தேதி செங்கடலில் நோர்வே மற்றும் இந்திய தேசியக் கொடிகளுடன் சென்றுகொண்டிருந்த இரு

எண்ணெய் டேங்கர் கப்பல்கள் மீது ஹவுதி அமைப்பினர் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தினர். இதில் யாருக்கும் காயம் இல்லை. இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதிலிருந்து ஹவுதி அமைப்பால் 15 கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளன.

**யார் இந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள்?**

யேமனில் அதிகாரபூர்வ அரசுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் ஆயுதக் குழு ஹவுதி. ஷியா பிரிவைச் சேர்ந்த இந்த ஆயுதக் குழுவானது யேமனின் பெரும்பான்மை சுன்னி அரசுக்கு எதிராக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது.

1990 -இல் அப்போதைய யேமன் அதிபர் அலி அப்துல்லா சலேயின் ஆட்சி மீது ஊழல் குற்றம்சாட்டி, ஆட்சிக்கு எதிராகப் போராடுவதற்காக ஹவுதி அமைப்பு தொடங்கப்பட்டது. அந்த அமைப்பை நிறுவிய ஹுசைன் அல் ஹூதியின் பெயரே அமைப்புக்கும் சூட்டப்பட்டது.

யேர்மனின் அதிகாரபூர்வ அரசுக்கு சவூதி ஆதரவு அளித்து வரும் சூழலிலும், 2014-இல் தலைநகர் சனாவை ஹூதி படையினர் கைப்பற்றினர். அதைத் தொடர்ந்து அப்போதைய அதிபர் அப்தரப் மன்சூர ஹாதி, யேமனைவிட்டு வெளியேறி சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்தார்.

இப்போது யேமனின் அதிகாரபூர்வ அரசு, சவூதி அரேபியா தலைநகர் ரியாத்திலிருந்துதான் செயல்பட்டு வருகிறது. யேமன் தலைநகர் மட்டுமன்றி, வடக்கு யேமன், செங்கடல் கடலோரப் பகுதிகளும் ஹவுதியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

**ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதிக்கள்:**

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதிக்கு எதிராக சவூதி அரேபியா ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கு இடையிலான மறைமுகப் போராகவே கருதப் படுகிறது. 2009, நவம்பரில் சவூதி அரேபியாவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர் ஹவுதி கிளர்ச்சியாளர்கள்.

அதுமுதல்தான் ஹவுதிக்கு எதிராக தீவிரமாகக் களமிறங்கியது சவூதி அரசு. ஹவுதிக்கும், சவூதி ஆதரவு அரசுப் படைக்கும் இடை யிலான சண்டையில் லட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

ஈரான் தொழில்நுட்ப மற்றும் நவீன ஆயுத உதவிகளை அளிப்பதால்தான் செங்கடலில் கப்பல்களை மிகச்சரியாகக் கண்காணித்து ட்ரோன் மற்றும் ராக்கெட் தாக்குதலை ஹவுதி

அமைப்பினர் நடத்த முடிகிறது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.

ஹவுதியின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், செங்கடல் பிராந்தியத்தில் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும் சர்வதேச கடல் பாதுகாப்பு நடவடிக்கையை அமெரிக்கா தொடங்கியுள்ளது. பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஸ்பெயின், பஹ்ரைன், நோர்வே ஆகிய நாடுகளும் இதில் பங்கேற்றுள்ளன. ஆனாலும், செங்கடல் தாக்குதலைத் தொடரப்போவதாகக் கூறியுள்ளது ஹவுதி அமைப்பினர்.

*(தை - 2024)*

## அறிவின் அகரம் சொல்லித் தந்த சிகரம் : யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி துரைச்சாமி மாஸ்டர் !

அறிவின் துளிகளை அள்ளி வந்து வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற அற்புத வித்தகராக விளங்கிய ஆசான் அவர்கள் பல மாணவர்களின் வாழ்வில் பல திருப்புமுனைகளுக்குக் காரணமாக போகிறார் என்பது எமக்கு அப்போது தெரியாது.

ஆசிரியர் ஒருவர் தன் பணியை ஆழமாக நேசித்து மாணவர்கள் மேல் நிபந்தனையில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தால் அவர் காலங் காலமும் நினைக்கப்படுவார் என்பதற்கு நிகரற்ற உதாரணம் தலைமை ஆசிரியர் துரைச்சாமி மாஸ்டராவார்.

யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி வரலாற்றுடனான நமது இளம்பராய இணைப்பை - பிணைப்பை ஆசிரியர்கள் தவிர யாரால் பலப்படுத்த முடியும்? அத்தகைய ஆசிரியர்களுள் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளவரே ஆசான் துரைச்சாமி மாஸ்டர்.

யாழ்ப்பாணத்தின் புகழை உலகெங்கும் பரவிடச் செய்த சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக (Lower School Head Master) பணியாற்றிய வைத்தியலிங்கம் துரைச்சாமி (30.06.1925 18.04.2023) அவர்கள் மெல்பேர்ணில் இறைபதமடைந்தார்.

அவர் கை பிடித்து சொல்லித் தந்த எண் கணிதமும், நற்தமிழ் அறிவுமே எமை இன்றைய வாழ்வுக்கு கைதூக்கி விட்டுள்ளது என்பதனை இப்போது நாம் நன்றியுடன் அறிகிறோம்.

அறிவுத் தூண்டுகோல்களுக்கு அகரம் சொல்லித் தந்த சிகரமான மறைந்த வைத்தியலிங்கம் துரைச்சாமி ஒரு சிறந்த நல் ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பவர். அவர் ஆரோக்கியமான தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்க எப்போதும் விழிப்போடிருந்தவர். தலைமை ஆசிரியராக இருந்தனால் கற்பிக்கும் சக ஆசிரியர்களின் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தவர்.

சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய அவரது அயராத உழைப்பானது ஒவ்வொரு மாணவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. அவர் தனது மாணவரின் மீது அசையாத நம்பிக்கையை வைத்திருந்தார். இளம் மாணவர்களிடையே ஓர் இணைப்புப் பாலமாக சமூகத்திற்கு சிறந்த ஒரு வழி காட்டியாக மிளிர்ந்தவர்.








இளம்பராயத்தில் எமக்கு படி படி என பாடஞ்சொல்லும் ஆசான் தெய்வத்தினும் ஒரு படி மேல் தான். அவர் அறியாமை இருளகற்றும் அறிவுச்சூரியனாக விளங்கியவர். கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடித்த பொழுதிலும், ஆசான் துரைச்சாமி மாஸ்டர் கருணை மிகுந்த உளம் படைத்தவர். கல்லூரியிலும் சமுதாயத்திலும் தேவையிலிருக்கும் எவருக்கும் அயராது உதவி செய்தவர்.

உங்களின் கரும்பலகை பாடம் தான் பலரின் வாழ்வை உயர்த்தியது.

எண்ணமெலாம் மாணவர்நலனிலேயே நிமிடங்களை நகர்த்துகிற நல்லாசானாகிய உங்களை, இப்பெருவுலகில் ஏதோ ஒரு பரியோவான் மாணவனின் மனதில் நிச்சயம் எழுதப்பட்டுருக்கும் உங்களுக்கான நல்லாசிரியர் என்ற உயர்விருது.

மாணவர்களின் மனங்களைச் செம்மைப்படுத்துவதிலும், நமது சமூகத்தைக் கட்டமைப்பதிலும் தலைமை ஆசிரியரான உங்களின் பங்களிப்புக்கும், கடின உழைப்புக்கும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவரது மாணவர்களாகிய நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.



## எழுத்துப் பணியும் ஆவணப்படுத்தலும்:

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர் கொண்டு வந்த இன ஒடுக்கு முறைகளுக்கு எதிராக எழுபதுகளிலும் எண்பதுகளிலும் எழுச்சி கொண்ட இளையவர்கள் பலர் பல்வேறு அமைப்புக்கள் ஊடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் தமது எதிர்ப்பினையும் போராட்டத்தையும் முன்னெடுக்கலாயினர்.

அவ்வகையில் எண்பதுகளில் தனது மாணவப் பருவத்தில் தேசியப் போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியவர் களில் ஒருவர் ஐங்கரன் விக்கினேஸ்வரா.

எழுத்துப் பணிகள், ஆவணப்படுத்தற் பணிகளில் அதிகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவரது பல கவிதைத் தொகுப்புக்கள் 1980களின் இறுதியில் வெளியாயின. இவற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பை நினைவு கூர்ந்து வெளியான “அணையாத அறிவாலயம்” பரந்த கவனம் பெற்ற தொகுப்பாகும்.

– தில்லைநாதன் கோபிநாத்

ISBN 955524963-6
9 789555 249638